விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

# வலம்புரி

Valampurii
E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk
சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 பங்குனி 02 சனிக்கிழமை (16.03.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 087

அரசுடன் இணைந்து செயற்படாவிட்டால்

## தமிழ் மக்களுக்கு பயங்கர விளைவு ஏற்படக்கூடும்

பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன்



(கொழும்பு)
அரசுடன் ஒத்துழைத்து செயற்படாவிட்டால் அது தமிழ் மக்களுக்குப் பயங்கரமான விளைவை ஏற்படுத்துமென தமிழ்த் தேசியக் 24

## யாழில் இன்று மாபெரும் மக்கள் எழுச்சிப் பேரணி


(யாழ்ப்பாணம்)
போர்க்குற்றங்களுக்கு நீதி வழங்குவதற்கு சர்வதேச விசாரணையை நடத்த வலியுறுத்தியும் இலங்கை அரசுக்கு ஜெனிவாவில் கால அவகாசம் வழங்கக்கூடாது என்ற கோரிக்கையை முன்வைத்தும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் இன்று மாபெரும் 23

## பிரமாண்ட கடற்படைத்தளம் அமைக்க

# 232 ஏக்கர் காணி

# வலி.வடக்கில் சுவீகரிப்பு

### கூட்டமைப்பிற்கு ரணில் கொடுத்த வாக்குறுதி காற்றில் பறந்தது




*(யாழ்ப்பாணம்)*
*பிரமாண்ட கடற்படைத்தளம் அமைக்க வலி.வடக்கில் 232 ஏக்கர் தனியார் காணிகள் உள்ளடங்கலான காணிகளை சுவீகரிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது.*

காணிகளை சுவீகரிக்கமாட்டோம் என கூட்டமைப்பிற்கு பிரதமர் ரணில் கொடுத்த வாக்குறுதி தற்போது காற்றில் பறந்துள்ளது. (23ஆம் பக்கம் பார்க்க)

## நியூசிலாந்தில் துப்பாக்கிச்சூடு

49 பேர் உயிரிழப்பு



(வெலிங்டன்)
நியூசிலாந்தின் கிழக்கு கடலோர நகரமான கிரைஸ்ட்சர்ச்சிலுள்ள இருவேறு மசூதிகளில் துப்பாக்கிதாரிகள் நடத்திய தாக்குதலில் 49 பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு பிரதமர் ஜெசிந்தா அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளார். **(முன்னர் கிடைத்த செய்தி உள்ளே...)**

இந்திய முன்னாள் வெளியுறவுச் செயலாளர்

## சிவ்சங்கர் மேனன் இலங்கை வருகிறார்



(கொழும்பு)
இந்தியாவின் முன்னாள் வெளியுறவுச் செயலாளர் சிவ் 24

## இலங்கையில் இராணுவம் மற்றும் பொலிஸ்; பொதுமக்களை தொடர்ந்து துன்புறுத்துகின்றன

### அமெரிக்கா ஆண்டு அறிக்கையில் குற்றச்சாட்டு

(கொழும்பு)
இலங்கையில் இராணுவம் மற்றும் பொலிஸார் பொதுமக்களை தொடர்ந்து துன்பப்படுத்துகின்றனர் என அமெரிக்கா தனது 2018 ஆம் ஆண்டுக்கான மனித உரிமைகள் அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

உள்நாட்டுப் போரில் இடம் பெற்ற குற்றங்கள் தொடர்பாக இலங்கை படையினர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு பொறுப்புக்கூறும் பொறிமுறை இன்னமும் உருவாக்கப்படவில்லை என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது. அமெரிக்க இராஜாங்கத் 23

## கென்யா – இலங்கை உறவுகளை பலப்படுத்த

இரு நாட்டு தலைவர்களும் இணக்கம்



(கொழும்பு)
கென்யா - இலங்கை உறவுகளை புதிய துறைகளின் ஊடாக பலப்படுத்துவதற்கு இரு 24

## லொறி மோதியதில் வீதியில் பயணித்தவர் பலி

### இரணைமடுச் சந்தியில் சம்பவம்

(பரந்தன்)
கிளிநொச்சி இரணைமடுச் சந்தியை அண்மித்த பகுதியில் இடம் பெற்ற விபத்தில் ஒருவர் பலியாகியுள்ளதாக பொலிஸார் தெரி வித்தனர். யாழிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த லொறி ஒன்று வீதியில் பயணித்துக் கொண்டி 24

எமில் காந்தன் உட்பட

## 9 இலங்கைத் தமிழர்களுக்கு சிவப்பு எச்சரிக்கை

(கொழும்பு)
சர்வதேச பொலிஸின் (இன்டர்போல்) சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளவர்களில் 9 பேர் இலங்கைத் தமிழர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
உலக அளவில் 6 ஆயிரத்து 872 பேருக்கு இன்டர்போல் சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. அவர்களில் 14 பேர் இலங்கை 24

## கடற்படையினரை வெளியேற்ற கோரி சிலாவத்துறையில் மக்கள் ஆர்ப்பாட்டம்

(மன்னார்)
முசலி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சிலாவத்துறையில் மக்களின் காணிகளில் நிலை கொண்டுள்ள கடற்படையினரை அகற்றி தமது காணிகளை வழங்கக் கோரி சிலாவத்துறையில் நேற்று வெள்ளிக்கிழமை மதியம் 1.30 மணியளவில் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.
ஜும்மாத்தொழுகையின் பின்னர் சிலாவத்துறையில் உள்ள இரண்டு பள்ளிவாசல்களில் இருந்து பல நூற்றுக்கணக்கான முஸ்லிம் மக்கள் பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கடற்படை முகாமை நோக்கி பேரணியாக வந்தனர். 23

## பால்மா விலை அதிகரிப்பு

### 400 கிராம் பக்கற் 25 ரூபாயால் உயர்வு

(கொழும்பு)
இறக்குமதி செய்யப்படும் பால்மா வகைகளின் விலை அதி 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கச்சதீவு அந்தோனியாரை தரிசிப்பதற்கு பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் திரள்வு


(யாழ்ப்பாணம்)

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா இன்று இடம்பெற உள்ள நிலையில் பக்தர்கள் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் வருகை தந்த வண்ணம் உள்ளனர்.

நேற்று குறிகாட்டுவான் இறங்கு துறையில் இருந்து காலை 7.45 மணியளவில் முதலாவது படகுச்சேவை ஆரம்பமானது.

கச்சதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழாவுக்கான பயண ஏற்பாடுகளை கடற்படையினர் மேற்கொண்டிருந்ததுடன் 100க்கும் அதிகமான பொலிஸார் பாதுகாப்பு கடமையில் அப்பகுதியில் ஈடுபடுவதற்காக வடதாரகை படகு மூலம் அங்கு சென்றனர்.

இதில் மிக முக்கியமாக இலங்கையைச் சேர்ந்த 7 ஆயிரம் வரையான பக்தர்களும் இந்தியாவிலிருந்து 2 ஆயிரத்து 200 பேர் வரையிலும் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.



இந்த உற்சவத்திற்காக மக்களின் நலன் கருதி நேற்று அதிகாலை 3.30 மணிமுதல் யாழ்ப்பாண மத்திய பேருந்து நிலையத்திலிருந்து பேருந்துகள் குறிகாட்டுவானை நோக்கிப் புறப்பட்டதுடன் அந்தச் சேவைகள் முற்பகல் 10.30 மணிவரை தொடர்ந்து நடைபெற உள்ளது.

அதேபோன்று இன்று சனிக்கிழமை காலை முதல் குறிகாட்டுவானிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான பேருந்து சேவைகள் நடத்தப்படும். மேலும் ஆலயத்திற்குச் செல்லும் பக்தர்களின் நலன் மற்றும் வசதி கருதி கூடுதலான பேருந்து சேவைகள் ஒழுங்குபடுத்தப்படுவதோடு குறிகாட்டுவானிலும் குடிதண்ணீர், மலசல கூட வசதிகளுக்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. (ம-3)

### முன்னாள் பாதுகாப்பு செயலர்

## கோத்தபாய வெளிநாடு செல்வதற்கு அனுமதி

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு வெளிநாடு செல்ல விசேட நிரந்தர நீதாய நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

அதன்படி இம்மாதம் 26ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 12ஆம் திகதி வரை அவருக்கு வெளிநாடு செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மெதமுல்லையில் டீ.ஏ.ராஜபக்ஷ அருங்காட்சியகத்தை நிர்மாணிப்பதற்கு அரச நிதியை முறையற்ற விதத்தில் பயன்படுத்தியமை தொடர்பான வழக்கு நேற்று வெள்ளிக்கிழமை விசேட நிரந்தர நீதாய நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ம-3)

# வவுனியா ஓமந்தை பகுதியில் வாள்வெட்டு; இருவர் படுகாயம்

(வவுனியா)

வவுனியா ஓமந்தை சேமமடு பகுதியில் மேற்கொள்ளப்பட்ட வாள்வெட்டு தாக்குதலில் இருவர் படுகாயமடைந்துள்ளனனர்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற இந்த சம்பவத்தில் படுகாயமடைந்த இருவரும் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஓமந்தை சேமமடு பகுதியில் வயல் காவலுக்காக இருந்த இருவர் மீது அவ்விடத்திற்கு வந்த இனந்தெரியாத நபர்கள் வாள்வெட்டு தாக்குதல் மேற்கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இதனையடுத்து ஓமந்தை பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், படுகாயமடைந்த இருவரையும் வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

இந்த தாக்குதல் காரணமாக வசந்தகுமார் (வயது 37), கருணாகரன் (வயது 33) ஆகிய இருவருமே படுகாயத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஓமந்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3)

# வைத்திய உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நாளை

(யாழ்ப்பாணம்)

சர்வதேச லயன்ஸ் கழகமும் பருத்தித்துறை வடமராட்சி லயன்ஸ் கழகமும் இணைந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு சுமார் ஒரு கோடியே 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான வைத்திய உபகரணங்கள் அன்பளிப்பு செய்யும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வடமராட்சி லயன்ஸ் கழகத் தலைவர் லயன்ஸ் வி.சிவராஜலிங்கம் தலைமையில் இடம்பெற்றுள்ளது.

இந்நிகழ்வுக்கு லயன்ஸ் கழகத்தின் மாவட்ட ஆளுநர் லயன் தேவா டி.பீற்றர் பிரதம விருந்தினராகவும் லயன்ஸ் கழகத்தின் சர்வதேச பணிப்பாளர் லயன் சுனில் வட்டவல மற்றும் வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் வைத்தியர் ஏ.கேதீஸ்வரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-3)

பாடசாலை அதிபர்களுக்கு...
மாணவர் தேர்ச்சியறிக்கை, கணிப்பீட்டறிக்கை அத்தியாவசிய கற்றல் தேர்ச்சி.
தரம் 01 முதல் தரம் 11 வரை வெளிவந்து விட்டது
சிவ தயா அச்சகம்
இல.92, (150) நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(நாவலர் பாடசாலைக்கு அருகாமை)
இல.362, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
077 396 5214
(7996)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# மரண அறிவித்தல்



தோற்றம் 1952 . 12 . 20

மறைவு 2019 . 03 . 12

திருமதி

## சிவநாதன் இராசலட்சுமி (யோகம்)

*மாசேரி, வரணியைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி மேற்கு, கரந்தனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவநாதன் இராசலட்சுமி (யோகம்) அவர்கள் கடந்த (12.03.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.*

*அன்னார் காலஞ்சென்ற கணபதி - பார்வதிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லர் - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், சிவநாதனின் (தேவர்) அன்பு மனைவியும், சிந்துசா (கனடா), சிந்துஜன் (To-JKWSP B.P.P Engineering Pvt), சியாளா (வர்த்தகத்துறை 2ம் வருட மாணவி- ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நடேசன், பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், மிதிலராஜின் பாசமிகு மாமியாரும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.03.2019) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.*

**நீர்வேலி மேற்கு,**
**கரந்தன்.**

**தகவல் : குடும்பத்தினர்**
**077 480 1748**

(7998)

# 20ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 1922 - 01 - 01

மறைவு 1999 - 02 - 23

ஸ்ரீமான்

## சின்னையா நல்லையா

(6-ம் வட்டாரம், மண்டைதீவு)

ஐயா! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

21/3A, இந்து மகளிர் ஒழுங்கை,
கந்தர்மடம்.

- குடும்பத்தினர் -

# யாழில் இன்று மக்கள் எழுச்சிப்பேரணிக்கான பேருந்துமார்க்கங்கள் மற்றும் புறப்படும் நேரம்

**யாழ்ப்பாணம்**

1. பருத்தித்துறை, நெல்லியடி, ஆவரங்கால், கோப்பாய், கல்வியங்காடு ஊடாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

நேரம்:- காலை 8.10

2. அச்சுவேலி, ஆவரங்கால், கோப்பாய், கல்வியங்காடு, நல்லூர் ஊடாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

நேரம்:- காலை 8.20

3. வசாவிளான், புன்னாலைக்கட்டுவன், திருநெல்வேலி, ஊடாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

நேரம்:- காலை 8.20

4. மாவிட்டபுரம், சுன்னாகம், கொக்குவில் ஊடாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

நேரம்:- காலை 8.10

5. காரைநகர், மூளாய், சுழிபுரம், சித்தங்கேணி, மானிப்பாய், ஊடாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

நேரம்:- காலை 8.20

6. கொழும்புத்துறை, பாசையூர், குருநகர் ஊடாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

நேரம்:- காலை 8.30

7. கொடிகாமம், சாவகச்சேரி, கைதடி, நாவற்குழி ஊடாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

நேரம்:- காலை 8.30

**முல்லைத்தீவு**

1. துணுக்காய் பிரதேச செயலகம், மல்லாவி, வன்னி விளாங்குளம், மாங்குளம், கிளிநொச்சி, பளை, யாழ்ப்பாணம் ஊடாக யாழ். பல்கலைக்கழகம்

நேரம்:- காலை 7.00

2. முள்ளியவளை, முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால், புதுக்குடியிருப்பு, விசுவமடு, பரந்தன், பளை ஊடாக யாழ். பல்கலைக்கழகம்

நேரம்:- காலை 7.00

3. பாண்டியன்குளம், செல்வபுரம், பாலிநகர், வன்னி விளாங்குளம், மாங்குளம், கிளிநொச்சி, பளை, யாழ்ப்பாணம் ஊடாக யாழ். பல்கலைக்கழகம்

நேரம்:- காலை 7.00

4. அளம்பில், சிலாவத்தை, முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால், புதுக்குடியிருப்பு, உடையார்கட்டு, விசுவமடு, பரந்தன், பளை பல்கலைக்கழகம்

நேரம்:- காலை 7.00

**வவுனியா**

1. வவுனியா பழைய பஸ் தரிப்பிடம், ஓமந்தை, மாங்குளம், கிளிநொச்சி, பரந்தன், பளை, ஊடாக யாழ். பல்கலைக்கழகம்

நேரம்:- காலை 7.00

2. சிதம்பரபுரம், வவுனியாப் பல்கலைக்கழகம், ஓமந்தை, மாங்குளம், கிளிநொச்சி, பரந்தன், பூநகரி ஊடாக யாழ்.பல்கலைக் கழகம்

நேரம்:- காலை 7.00

**கிளிநொச்சி**

1. வன்னேரி, அக்கராயன், ஸ்கந்தபுரம், கோணாவில், ஊற்றுப்புலம், கனகபுரம், கிளிநொச்சி, பரந்தன், பளை ஊடாக யாழ். பல்கலைக்கழகம்

நேரம்:- காலை 7.00

2. தேராவில், புளியம் பொக்கணை, பரந்தன், பளை ஊடாக யாழ். பல்கலைக்கழகம்

நேரம்:- காலை 7.00

3. கல்மடு, இராமநாதபுரம், வட்டக்கச்சி, கோவிந்தன் கடைச் சந்தி, இரத்தினபுரம், பரந்தன், பளை ஊடாக யாழ். பல்கலைக் கழகம்

நேரம்:- காலை 7.00

4. கிளிநொச்சி வைத்தியசாலை, பரந்தன், பளை ஊடாக யாழ். பல்கலைக்கழகம்

நேரம்:- காலை 7.00

**மன்னார்**

1. தலைமன்னார், பேசாலை, மன்னார், முழங்காவில், பூநகரி ஊடாக யாழ்.பல்கலைக்கழகம்

நேரம்:- காலை 7.00

2. முத்தரிப்புத்துறை, நானாட்டான், வங்காலை, மன்னார், முழங்காவில், பூநகரி ஊடாக யாழ்.பல்கலைக்கழகம்

நேரம்:- காலை 7.00

3. சிலாவத்துறை, முருங்கன், மன்னார், முழங்காவில், பூநகரி ஊடாக யாழ். பல்கலைக் கழகம்

நேரம்:- காலை 7.00

தேவைகளிற்கேற்ப பேருந்து ஒழுங்கு செய்யப்படும்.

முதலுதவி மற்றும் அவசர உதவிக்கு 021 321 4444.

**பேரணி செல்லும் பாதை**

பல்கலைக்கழக முன்றல், பலாலி வீதி, கந்தர்மடம் சந்தி, இந்து மகளிர் கல்லூரி வீதி,பிறவுண் வீதி, நாவலர் வீதி, மின்சார நிலைய வீதி, யாழ்.நகரம், வைத்தியசாலை வீதி, மணிக்கூட்டுக் கோபுரவீதி ஊடாக மாநகர சபை மைதானம் (சுப்பிரமணியம் பூங்கா முன்பாக).

முற்பகல் 10 மணிக்கு பல்கலைக்கழக முன்றலில் இருந்து ஆரம்பிக்கும் பேரணி மாநகர சபை மைதானத்தை சென்றடைந்ததும் தெளிவூட்டல் உரை மற்றும் பிரகடன அறிக்கை வாசிக்கப் படும்.

**குறிப்பு:-** தேவையற்ற அசம்பாவிதங்களைத் தவிர்க்கும் பொருட்டு கோசங்கள், பதாகைகள், பனர்கள் என்பன பல்கலைக்கழக சமூகத்தினாலேயே ஒழுங்கமைக்கப்பட்டிருக்கும் என யாழ்.பல்கலைக்கழக சமூகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# இன்று இடம்பெறும் எழுச்சிப்பேரணிக்கு தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றாக அணி திரண்டு குரல் கொடுக்க வேண்டும்

## ஆனந்தசங்கரி அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் முன்னெடுக்கும் எழுச்சிப் பேரணியில் கட்சிபேதம் பாராதுதமிழ் மக்கள் அனைவரும் ஒன்றாக அணி திரண்டு குரல் கொடுக்க வேண்டும்.

யுத்தம் முடிந்து பத்து வருடங் கள் ஆகியும், தமிழ் மக்களின் கோரிக்கைககள் அனைத்தும் செவிடன் காதில் ஊதியசங்கு போலாகி விட்டது.

எமது மக்கள் வேதனையின் விளிம்பில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். யாரிடம் போய் எதைக் கேட்பது என்ற விரக்தியில் துவண்டு போய் விட்டார்கள். இந்த எழுச்சிப் பேரணியாவது சம்பந்தப்பட்டவர்களின் காதுகளுக்குப் போய்ச் சேரட்டும்.

இழக்கக் கூடாதவற்றை எல்லாம் இழந்துவிட்டு, இழப்பதற்கு எஞ்சி இருக்கும் உயி ரைத் தவர வேறெதுவும் இல்லை என்று ஏங்கி தவிக்கும் மக்களின் வேதனைகள் தீரட்டும்.

எனவே இதில் நான் பெரிது, நீ பெரிது என பாராமல் எமது நாடும், மக்களும் பெரிது என்ற எண்ணத்தில் அனைவரும் செயற்பட்டு,(16.03.2019) இன்று சனிக்கிழமை முன்னெடுக்கும் இந்த எழுச்சிப் பேரணியில் கலந்து கொண்டு, அகிம்சை போராட்டத்திற்கு ஆதரவு கொடுத்து, சர்வதேசத்திற்கு உண்மையை உணர்த்துவோம் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்த சங்கரி அழைப்பு விடுத்துள்ளார். (இ-7)

# ஐ.நா.பிரேரணைகளை இஸ்ரேல் ஒரு சதத்துக்கும் மதிப்பதில்லை

## பாலித கொஹன சுட்டிக்காட்டு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்படும் பிரேரணைகள் குறித்து அலட்டிக் கொள்ளத் தேவையில்லையென ஐ.நாவுக்கான முன்னாள் நிரந்தரப் பிரதிநிதி கலாநிதி பாலித கொஹன தெரிவித்தார்.



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இஸ்ரேலுக்கு எதிராக சுமார் 70 இற்கும் மேற்பட்ட பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இருப்பினும் இஸ்ரேல் அந்தப் பிரேரணைகளை ஒரு சதத்துக் கும் கருத்தில் கொள்ளவில்லை.

இலங்கை அரசாங்கம் ஐ.நா. மனித உரிமைகள் பிரேரணை குறித்து அலட்டிக்கொள்ளத் தேவையில்லையெனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# அகதிகள் விடயத்தில் வெட்கப்பட வேண்டும்

அரசின் நடவடிக்கை குறித்து சாள்ஸ் சந்தேகம்

(கொழும்பு)

யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு பத்து ஆண்டுகளை கடந்தும் இன்னமும் நாட்டை விட்டு வெளியேறிய தமிழர்களை மீண்டும் நாட்டுக்கு வரவழைக்க முடியாத நிலைமை உள்ளதை எண்ணி அரசாங்கம் வெட்கப்பட வேண்டுமென தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார். நாடாளுமன்றில்நேற்று முன்தினம் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,


அத்துடன் விசேட செயலணி ஒன்றை அமைத்து அகதிகளாக வேறு நாடுகளில் வாழும் மக்களை வரவழைக்க வேண்டும் என வும் விகிதாசார ரீதியில் தமிழர்களின் எண்ணிக்கையை குறைக்க அகதிகளை வரவழைக்காது திட்டமிட்டு செயற்படுவதாகக் கூட இதனைக் கருத முடியும் எனவும் அவர் சந்தேகம் வெளியிட்டார். (இ-7)

# சிவசங்கர் மேனன் தலைமையில் கொழும்பில் பாதுகாப்பு மாநாடு

(கொழும்பு)

இந்து சமுத்திரத்தின் பாதுகாப்பு பிரச்சினைகளை ஆராய்வதற்கான மாநாடு ஒன்று அடுத்தவாரம் கொழும்பில் இடம்பெறவுள்ளது. அதற்கு இந்தியாவின் முன்னாள் தேசிய பாதுகாப்பு ஆலோசகரும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகருமான சிவசங்கர் மேனன் தலைமை தாங்கவுள்ளார்.

இலங்கைக்கு நேரடி அக்கறையுடைய பிரச்சினைகள் தொடர்பில் பிராந்திய மற்றும் சர்வதேச மாநாடுகளை 2017 தொடக்கம் தொடர்ச்சியாக ஏற்பாடு செய்துவரும் பாத்ஃபைன்டர் பவுண்டேசன் 2020 ஆம் ஆண்டில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருக்கும் "இந்து சமுத்திர பாதுகாப்பு ஆட்சிமுறை மாநாட்டுக்கான ஏற்பாட்டுப் பணிகளை முன்னெடுப்பதற்காக அமைக்கப்பட்ட சர்வதேச ஆலோச னைக் குழுவின் முதலாவது கூட்டத்தை நாளை மறுதினம் 18 ஆம் திகதி திங்கட்கிழமை கொழும்பில் கூட்டுகிறது.



சிவசங்கர் மேனன் தலைமையில் நடைபெறவிருக்கும் இந்தக் கூட்டத்தில் அவுஸ்திரேலியா, சீனா, பிரான்ஸ், இந்திய, ஜப்பான், நோர்வே, ரஷ்ய சம்மேளனம், சிங்கப்பூர், ஐக்கிய இராச்சியம் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் இதில் பங்கேற்கிறார்கள்.

இவர்கள் அவுஸ்திரேலிய தேசிய பல்கலைக்கழகத்தின் தேசிய பாதுகாப்பு கல்லூரி, சீனாவின் சர்வதேச ஆய்வுகளுக்கான சங்காய் நிறுவனம், பிரான்சின் ஆய்வுகள் திட்டமிடல் மற்றும் மூலோபாயத் திற்கான நிலையம், ஜப்பானின் பாதுகாப்பு ஆய்வுக்கான தேசிய நிறுவகம், முரண்நிலைத் தீர்வுக் கான நோர்வே மையம், ரஷ்யாவின் சர்வதேச விவகார சபை, சிங்கப்பூரின் தேசிய பல்கலைக் கழகத்தின் தெற்காசிய ஆய்வுகளுக்கான நிறுவனம்,ஐக்கிய இராச்சியத்தின் மூலோபாய கற்கைகளுக்கான சர்வதேச நிறுவனம் மற்றும் அமெரிக்காவின் வெளியுறவு விவகார சபை போன்ற முன்னணி சர்வதேச நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுகிறார்கள்.

பாத்ஃபைன்டர் பவுண்டேசன் பிராந்திய மாநாடுகளின் வரிசையில் திருகோணமலை கலந்தாலோசனை என்ற தொனிப் பொருளின் கீழ் 2017 ஆம் ஆண்டிலும் 2018 ஆம் ஆண்டிலும் வெற்றிகரமான இரு நிகழ்வுகளை நடத்தியது.

2017 மாநாட்டுக்கான தலைப்பு வங்களா விரிகுடாவில் பொருளாதார மற்றும் கடல்சார் பாதுகாப்புக்கான பிராந்திய ஒத்துழைப்பு என்பதாகும்.

2018 மாநாடு பொதுவான அபிவிருத்தி மற்றும் சுபீட்சத்துக் கான பாதுகாப்பான வங்களா விரிகுடா என்ற தொனிப்பொருளை மையமாகக் கொண்டது குறிப்பிடத் தக்கது. (இ-7)

# நியூசிலாந்தில் துப்பாக்கிச் சூடு

# மயிரிழையில் உயிர்தப்பிய பங்களாதேஷ் வீரர்கள்

## கிரிக்கெட் அரங்கில் அதிர்ச்சி


பாதுகாப்பு பணியில் நியூசி., பொலிஸார் ஈடுபட்டவேளை...

நியூசிலாந்தின் கிறைஸ்ட்சேர்ச்சில் நடந்த துப்பாக்கிச்சூடு தாக்குதலில் 49 பேர் கொல்லப்பட்டனர். நூலிழையில் பங்களா தேஷ் கிரிக்கெட் வீரர்கள் உயிர் தப்பினர்.

மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்க பங்களாதேஷ் அணி நியூசிலாந்து சென்றது. முதல் இரு டெஸ்டில் வென்ற நியூசிலாந்து 2-0 என தொடரை கைப்பற்றியது.

மூன்றாவது டெஸ்ட் கிறைஸ்ட்சேர்ச்சில் உள்ள ஹாக்லே ஓவல் மைதானத்தில் இன்று ஆரம்பமாக இருந்தது. இதற்கான பயிற்சிக்கு லிட்டன் தாஸ், நயீஸ் இஸ்லாம் தவிர மற்ற 17 பங்களாதேஷ் அணி வீரர்கள் சென்றனர்.

லேசாக மழை பெய்ததால் அருகில் இருந்த மஜித் அல் நூர் மசூதியில் தொழுகை நடத்தி விட்டு பிறகு மைதானம் செல்ல முடிவு செய்து, பஸ்சை நிறுத்தினர். அப்போது 45 மீ., தூரத்தில் இருந்த மசூதியில் அடையாளம் தெரியாத நபர் துப்பாக்கிசூடு நடத்தும் சப்தம் கேட்டது. பங்களாதேஷ் வீரர்கள் பஸ்சை விட்டு இறங்க வேண்டாம் என கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

சில நிமிடங்களுக்குப் பின், பஸ்சில் இருந்து இறங்கி வேகமாக அருகில் இருந்த ஹாக்லே ஓவல் மைதானத்துக்குள் ஓடினர். பிறகு அங்கிருந்து ஓட்டல் ரூம் சென்றடைந்தனர். அதிர்ஷ்டவசமாக அனைவரும் காயமின்றி தப்பினர். பின் லின்வுட் மசூதி பகுதியிலும் துப் பாக்கிசூடு நடந்தது. இதில் 8 என மொத்தம் 49 பேர் கொல்லப்பட்டனர். இதுதொடர்பாக நியூசிலாந்து பொலிஸார் சந்தேகத்திற்கு இடமான 4 பேரை கைது செய்துள்ளனர்.

இதுகுறித்து பங்களாதேஷ் கிரிக்கெட் சபை (பி.சி.பி.,) வெளியிட்ட 'டுவிட்டர்' செய்தியில், 'துப்பாக்கிசூடு நடந்த இடத்தில் இருந்த அனை த்து பங்களாதேஷ் வீரர்களும் பாதுகாப்பாக திரும்பி விட்டனர். தொடர்ந்து இவர்களுடன் தொடர்பில் இருந்து வருகிறோம்,' என தெரிவித்தது.


அதிர்ச்சியில் உறைந்து போன பங்களாதேஷ் வீரர்கள்

**பிரார்த்தனை செய்யுங்கள்**

பங்களாதேஷ் அணி வீரர் முஷ்பிகுர் ரகிம் கூறுகையில்," கிறைஸ்ட்சர்ச் மசூதி துப்பாக்கிசூடு சம்பவத்தில் இருந்து இறைவன் கருணையால் தப்பி விட்டோம். உண்மையில் நாங்கள் மிகவும் அதிர்ஷ்டசாலிகள் தான். இதுபோன்ற சம்பவத்தை மீண்டும் பார்க்க விரும்பவில்லை. எங்களுக்காக பிரார்த்தனை செய்யுங்கள்," என்றார்.

**அந்த 3 நிமிடம்**

வங்கதேச அணியின் மானேஜர் காலித் மசூத் கூறுகையில், " பஸ்சில் 17 பேர் இருந்தோம். சம்பவ இடத்துக்கு அருகில் சென்று பிறகு மீண்டு வந்துள்ளோம். 3 நிமிடத்துக்கு முன் வந்திருந்தால் மசூதிக்குள் சென்றிருப்போம். மோசமான சம்பவம் நடந்திருக்கும். நல்லவேளையாக தப்பினோம். சினிமாவில் வருவது போல மக்கள் ரத்தவெள்ளத்தில் சரிந்ததை பார்த்தோம். உடனடியாக அனைவரும் தலையை குனிந்து 10 நிமிடம் பதுங்கி இருந்தோம். பின் பின் வாசல் வழியாக தப்பிச் செல்வது என முடிவு செய்து, வேகமாக ஓடி டிரசிங் ரூம் அடைந்தோம். எங்கள் பஸ்சில் இருந்து டிரசிங் ரூமை அடைய சில நிமிடங்கள் தான் தேவைப்பட்டன. அதேநேரம் இது தான் எனது வாழ்க்கையின் நீண்ட நிமிடங்கள். ரத்தம், உடல்கள் பல இடத்தில் கிடந்தன. சீனியர் வீரர் ஒருவர் என்னைப் பிடித்துக் கொண்டு கதறி அழுதார்," என்றார்.

**பயங்கர அனுபவம்**

பங்களாதேஷ் அணியின் 'சீனியர்' வீரர் தமிம் இக்பால் கூறுகையில்," இது மிகவும் பயங்கரமான அனுபவம். ஒட்டுமொத்த வீரர்களும் தப்பி விட்டோம். பாதுகாப்பாக உள்ளோம்," என்றார்.

**தொடர் இரத்து**

துப்பாக்கிசூடு தாக்குதலை அடுத்து வங்கதேசம், நியூசிலாந்து அணிகள் மோத இருந்த மூன்றாவது டெஸ்ட் போட்டி ரத்து செய்யப்பட்டது.

பங்களாதேஷ் வீரர்களை பாதுகாப்பாக நாடு திருப்பி அனுப்ப தேவையான ஏற்பாடுகளை நியூசிலாந்து கிரிக்கெட் சபை செய்து வருகிறது.

**இதற்கு முன்...**

கிரிக்கெட் தொடர்களின் போது நடந்த தாக்குதல் காரணமாக ரத்தான சில தொடர்கள் விபரம்:

◈ கடந்த 2002ல் டெஸ்ட் தொடரில் பங்கேற்க பாகிஸ்தான் சென்றது நியூசிலாந்து. இரு அணி வீரர்கள் கராச்சி ஹோட்டலில் தங்கினர். வெளிப்பகுதியில் தற்கொலைப் படை தாக்குதல் நடந் தது. உடனடியாக அடுத்த விமானத்தை பிடித்து நியூசிலாந்து வீரர் கள் நாடு திரும்பினர்.

◈ கடந்த 2008ல் இந்தியா வந்த இங்கிலாந்து அணி ஏழு போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்றது. முதல் 5 போட்டிகளில் இந்தியா வென்றது. 6, 7வது போட்டி கவுகாத்தி, டில்லியில் நடக்க இருந்தது. அப்போது மும்பையில் நடந்த பயங்கரவாத தாக்குதல் காரணமாக, இங்கிலாந்து அணி ஒருநாள் தொடரை ரத்து செய்து நாடு திரும்பியது.

◈ 2009ல் இலங்கை அணி, பாகிஸ்தான் சென்றது. லாகூரில் நடந்த டெஸ்ட் போட்டியின் மூன்றாவது நாள் ஆட்டத்தில் பங்கேற்க வீரர்கள் பஸ்சில் சென்ற போது, பயங்கரவாதிகள் துப்பாக்கிசூடு நடத்தினர். இதில் ஆறு இலங்கை வீரர்களுக்கு காயம் ஏற்பட, டெஸ்ட் தொடர் ரத்தானது.

# டில்லி 'கிண்ணம்' இஷாந்த் 'எண்ணம்'


இஷாந்த்

" ஐ.பி.எல்., தொடரில் 12 ஆண்டுக்குப் பின் டில்லி அணிக்காக விளையாடுவது பெருமை யாக உள்ளது," என இஷாந்த் சர்மா தெரிவித் தார்.

ஐ.பி.எல்., தொடரின் 12வது சீசன் வரும் 23ஆம் திகதி ஆரம்பமாகிறது. சென்னை யில் நடக்கும் முதல் போட்டியில் 'நடப்பு சம்பியன்' சென்னை, பெங்க ளூரு அணிகள் மோதுகின்றன.

இதில் பங்கேற்கும் டில்லி அணி இம்முறை, டில்லி கேபி டல்ஸ் என்ற பெயரில் கள மிறங் குகிறது. இந்த அண யில் வேகப்பந்து வீச்சாளர் இஷாந்த் சர்மா இணைந்துள் ளார்.

இதுகுறித்து அவர் கூறிய தாவது, எனது 17 வயதில் இருந்து டில்லி பெரோஷா கோட்லா மைதானத்தில் விளையாடிவருகிறேன். இம்மைதானத்தில் எனக்கு மறக்க முடியாத பல்வேறு நினைவுகள் உள்ளன. இது எனக்கு மட்டுமல்ல, டில்லி அணிக்காக களமிறங்கும் அனைவருக்கும் இந்த எண்ணம் இருக்கும்.

ஏனெனில் இங்கு தான் அவர்களின் கிரிக்கெட் வாழ்க்கை துவங்கி இருக்கும். ஐ.பி.எல்., தொடரில் கொல்கத்தா, டில்லி, புனே என பல்வேறு அணிகளுக்காக ((76 போட்டி, 58 விக்.,) பங் கேற்றேன். 12 ஆண்டுகள் கழித்து முதன்முறையாக எனது டில்லி அணிக்காக விளையாடும் வாய்ப்பு பெற்றுள்ளேன். 'ஸ்பெஷலான' இந்த தருணத்தால் மிகவும் பெருமையாக உள்ளது. என்னால் முடிந்த வரை சிறப்பாக செயல்படுவேன். எங்கள் டில்லி அணி கிண்ணம் வெல்லும் என நம்புகிறேன். இவ்வாறு இஷாந்த் சர்மா கூறினார்.

# பயஸ் போல சாதிக்க விருப்பம் தடை 'தகர்த்த ஸ்ரீசாந்த் சபதம்

ஸ்ரீசாந்திற்கு விதிக்கப்பட்ட வாழ்நாள் தடையை சுப்ரீம் கோர்ட் நீக்கியது. மூன்று மாதத்திற்குள் முடிவு எடுக்க பி.சி.சி.ஐ.,க்கு உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2013ல் நடந்த ஐ.பி.எல்., தொடரில் 'ஸ்பாட் பிக்சிங்கில்' ஈடுபட்டதாக ராஜஸ்தான் அணியின் ஸ்ரீசாந்த், சண்டேலா, சவான் கைது செய்யப்பட்டனர். இவர்களுக்கு இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.,) வாழ்நாள் தடை விதித்தது.

இந்த வழக்கை விசாரித்த டில்லி ஐகோர்ட் போதிய ஆதாரம் இல்லாததால் இவர்களை வழக்கிலிருந்து விடுவித்தது. ஆனால், வாழ் நாள் தடையை நீக்க பி.சி.சி.ஐ., மறுத்து விட் டது. இதை எதிர்த்து ஸ்ரீசாந்த் சுப்ரீம் கோர்ட் டில் ஸ்ரீசாந்த் வழக்கு தொடுத்தார்.


தடை தகர்த்த மகிழ்ச்சியில் ஸ்ரீசாந்த்

நேற்று, இதற்கான தீர்ப்பை நீதிபதிகள் அசோக் பூஷ ன், கே.எம்.ஜோசப் அளித்தனர். அதில்,' ஸ்ரீசாந்திற்கு அளிக்கப்பட்ட வாழ்நாள் தடை அதிக மான தண்டனை. இதை நீக்க வேண்டும். இது குறித்து அடுத்த மூன்று மாதத்திற்குள் பி.சி.சி.ஐ., ஒழுங்கு நட வடிக்கை குழு முடிவு எடுக்க வேண்டும்,' என, தெரிவித் தனர்.

**பயஸ் வழியில்...**

ஸ்ரீசாந்த் கூறுகையில்," நான் கிரிக்கெட் விளையாடி ஆறு ஆண்டு ஆகிவிட்டன. தற்போது, சுப்ரீம் கோர்ட் அளித்துள்ள தீர்ப்பிற்கு பி.சி.சி.ஐ., மதிப்பு வழங்கும் என நம்புகிறேன். மீண்டும் கிரிக்கெட் களத்தில் பங்கேற் பேன். இனி எங்கு விளையாட விரும்புகிறேனோ, அந்த இடத்தில் விளையாட முடியும். இந்திய டென்னிஸ் வீரர் லியாண்டர் பயஸ், 42 வயதில் கிராண்ட்ஸ்லாம் அரங்கில் கிண்ணம் வென்றார். எனக்கு 36 வயதுதான் ஆகிறது. இன்னும் விளையாட வேண்டிய காலம் அதிகமாக உள் ளது. ஸ்கொட்லாந்தில் மீண்டும் கழக அணிக்காக பங் கேற்க விரும்புகிறேன்," என்றார்.

**பி.சி.சி.ஐ., முடிவு என்ன?**

பி.சி.சி.ஐ., நிர்வாகக்குழு தலைவர் வினோத் ராய் கூறுகையில்," சுப்ரீம் கோர்ட்டின் உத்தரவு நகல் இன் னும் கிடைக்கவில்லை. இதன்பின், ஸ்ரீசாந்த விவகாரம் குறித்து கூட்டத்தில் விவாதிக்கப்படும்," என்றார். வீரர் களுக்கான ஊக்கமருந்து சோதனை திட்டம் குறித்து சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலுடன் வரும் 18ல் கூட்டம் நடக்கவுள்ளது. இதில் ஸ்ரீசாந்த் தீர்ப்பு குறித்தும் ஆலோசனை நடத்தப்படலாம் எனத்தெரிகிறது.





# ஏழாலை தெற்கு இரு வைரவர் கோவில் வாயிற்கோபுர வளைவுகள்

காலம் 17.03.2019

# திறப்பு விழா

ஞாயிற்றுக்கிழமை காலை 8.30-9.30மணிவரை

**ஏழாலை மண்ணின் மைந்தன் திரு.சிவகாந்தன் அவர்களின் பங்களிப்பில் உருவாக்கப்பட்ட இரு வாயிற்கோபுர வளைவு, இந்து கலாசார அமைச்சர் திரு.மனோகணேசன் முன்னிலையில் திறந்து வைக்கப்படவுள்ளது.**

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(C-5787)

விழுசிட்டி ஏழாலை தெற்கு மயிலங்காடு


## இராசி பலன்

**16.03.2019**

பங்குனி 02, சனிக்கிழமை

சூரிய உதயம் காலை 6.18 மணிக்கு

தசமி முன்னிரவு 7.15 மணிவரை

புனர்பூசம் முன்னிரவு 10.13 மணிவரை

சுபநேரம் 3.20 - 4.50 மணிவரை

இராகுகாலம் 9.20 - 10.50 மணிவரை

வளவன்

கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| சூரி | செவ் | | சந், ராகு |
| புத | | | |
| சுக் | | | |
| சனி, குரு, கேது | | | |

சந்திராஷ்டமம்
மூலம், பூராடம்
மாலை 4.16 மணிக்கு
இட-சந்

**மேடம்:** வம்பு வழக்குகளை சமாளித்து வளம் காணும் நாள், ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**இடபம்:** வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, தொழில் சம்பந்தமாக தீட்டிய திட்டங்கள் வெற்றி தரும், புதிய முயற்சிகள் எளிதில் கைகூடும்.

**மிதுனம்:** எப்படி நடக்குமோ என நினைத்த காரியம் நல்ல விதமாக நடைபெறலாம், நண்பர்களுடன் சேர்ந்து வெளியிடங்களுக்குச் செல்லும் வாய்ப்புண்டு.

**கடகம்:** அன்றாட பணிகள் நன்றாக நடைபெற ஆண்டவனைப் பிரார்த்திப்பீர்கள், வெளியூர்த் தொடர்புகள் விரும்பும் விதத்தில் அமையும், சுப செலவுகள் கூடும்.

**சிம்மம்:** தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும் வகையில் அமையும், சிறப்பான நாள், உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், வருமானம் திருப்தி தரும்.

**கன்னி:** திறமைகள் வெளிப்படும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள், ஆரோக்கியமான நாள்.

**துலாம்:** விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும், விட்டுப்போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பயணங்களால் பலனுண்டு.

**விருச்சிகம்:** வரவும் செலவும் சமமாகும் நாள், அனுசரித்துச் செல்வதன் மூலம் ஆதாயம் காண வேண்டிய நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**தனுசு:** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும்.

**மகரம்:** கடமையில் கண்ணும் கருத்துமாக செயற்படுவீர்கள், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், பெண் வழி ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், தேவைகள் பூர்த்தியாகும்.

**கும்பம்:** பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள், அனுபவம் மிக்கவர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், வாக்கு மேன்மையுண்டு, வியாபார விருத்தியுண்டு.

**மீனம்:** வளர்ச்சிப் பாதைக்கு வித்திட்டவர்களை சந்தித்து மகிழும் நாள், மனதில் இனம் புரியாத சந்தோசம் குடிகொள்ளும் நாள், பெற்றோர் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

# யாழ்.பல்கலை. மாணவர்களின் எழுச்சிப் பேரணிக்கு சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பு ஆதரவு

(யாழ்ப்பாணம்)

போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணையை வலியுத்தியும், இலங்கை அரசுக்கு கால அவகாசம் வழங்கக்கூடாது எனவும் கோரிக்கைகளை முன் வைத்து யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சமூகம் மேற்கொள்ளும் எழுச்சி பேரணிக்கு சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பும் தனது பூரண ஆதரவைத் தெரிவித்துள்ளது.

இன்று யாழில் இடம்பெறவுள்ள யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் மாபெரும் எழுச்சிப் பேரணியில் நாமும் கலந்து கொள்வதோடு, எமது முழுமையான ஆதரவையும் வழங்கி நிற்போம். தமிழ் மக்களின் உரிமைகள், நலன்கள் சார்ந்த விடயத்தில் எமது ஆதரவும் ஒத்துழைப்பும் என்றும் இருக்கும்.

இலங்கை தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் நிலைப்பாடு பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் உணர்வுகளை பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும். தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கும் பொறிமுறையாகவும் இருக்க வேண்டும், எனவும் சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பு வலியுறுத்தியுள்ளது. (இ-7)

# 14 சீனப் பிரஜைகளுக்கு ஒரு வருட சிறைத் தண்டனை

(கொழும்பு)

சட்டவிரோதமாக நாட்டில் தங்கியிருந்த 14 சீன பிரஜைகளுக்கு ஒரு வருட சிறை தண்டனையும்தலா 50 ஆயிரம்ரூபாய் வீதம் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த நபர்கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலி பிரதான நீதவான் ஹர்சன கெக்குனுவெ முன்னிலையில் பிரசன்னப்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் 14 பேரும் அண்மையில் தடல்ல பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

மேலும் அவர்கள் கட்டட நிர்மாண பணிக்கான உதவியாளர்களாக பணியாற்றி வந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)



உரும்பிராய் வடக்கு கணேசா சனசமூக நிலைய முன்பள்ளிச் சிறார்களின் சிறுவர் சந்தை கடந்த 7 ஆம் திகதி வியாழக்கிழமை நிலைய மண்டபத்தில் இலங்கை வங்கி முகாமையாளர் வழிகாட்டலில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் நிலையத் தலைவர், வங்கி முகாமையாளர், பெற்றோர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கச்சாய் மகா வித்தியாலயத்தில் மாணவர் பாராளுமன்றத் தேர்தல்





(யாழ்ப்பாணம்)

கச்சாய் மகா வித்தியாலயத்தின் 3 ஆவது மாணவர் பாராளுமன்றத் தேர்தல்கடந்த புதன்கிழமை செயலாளர் நாயகம் கா.குணசிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

இத் தேர்தலில் 64 வேட்பாளர்கள் போட்டியிட்டதுடன் தரம் 6-13 வரையான மாணவர்கள் வாக்களிப்பில் ஈடுபட்டனர். (5-10)

# பட்டப்படிப்பியல் நுழைவுப் பரீட்சை மாணவர்களுக்கான கருத்தரங்கு

சப்ரகமுவ மற்றும் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகங்களில் எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவிருக்கும் விளையாட்டுத் துறைசார்ந்த பட்டப்படிப்பியல் நுழைவுப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கான இலவச வழிகாட்டல் கருத்தரங்கு நாளை 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் சப்ரகமுவ. ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகங்களில் விளையாட்டு, விஞ்ஞான முகாமைத்துவம், உடற்றொழில் பட்டப்படிப்பியல் நுழைவு பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களை கலந்து கொள்ள முடியுமென சப்ரகமுவ பல்கலைக்கழக பிரயோக விஞ்ஞான பீட தமிழ் சமூகம் அறிவித்துள்ளது. (5)

## மயிலிட்டிப் பகுதியில்

# வீட்டின் அத்திபாரத்தில் கண்ணி வெடிகள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை-காங்கேசன் துறை வீதியில் மயிலிட்டி பகுதியிலுள்ள வீடொன்றின் அத்திபாரத்தின் கீழிருந்து இரண்டு கண்ணிவெடிகள் மற்றும் ஒரு தொகை துப்பாக்கி ரவைகள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

இராணுவ உயர் பாதுகாப்பு வலயமாக இருந்து கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் இப்பகுதி மீள்குடியேற்றத்திற்கு அனுமதிக்கப்பட்டது.

வீட்டினைச் சுற்றி முன்னர் இருந்த மதில் இடித்தழிக்கப்பட்டிருந்த நிலையில் அதனை மீள அமைக்கும் பணிக்காக கடந்த புதன்கிழமை ஏற்கனவே இருந்த மதில் அத்திபாரம் தோண்டப்பட்டது.

இதன்போது இரண்டு கண்ணிவெடிகளும் நூல் சாக்கில் சுற்றப்பட்ட நிலையில் ஒரு தொகைத் துப்பாக்கி ரவைகளும் கண்டெடுக்கப்பட்டன.

இதுகுறித்து வீட்டின் உரிமையாளர் கிராம வேவையாளருக்கு தகவல் வழங்கியதை அடுத்து பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. அதனையடுத்து வெடிபொருட்கள் அகற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இப்பகுதி மக்கள் மீள்குடியேற அனுமதிக்கப்பட்டு இரண்டு வருடங்களுக்கு மேலாகியும் அப்பகுதியில் ஆபத்தான ,வெடி பொருட்கள் காணப்படுவது மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. (ம-3)

# மக்கள் எழுச்சிப் போராட்டங்களால் தான் தமிழரின் உரிமையை வென்றெடுக்க முடியும்

## யாழில் இன்று இடம்பெறும் பேரணிக்கு கடற்றொழிலாளர் சம்மேளனம் ஆதரவு

(யாழ்ப்பாணம்)

இலங்கை அரசாங்கத்திற்கு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கால நீடிப்பு வழங்கியமை தமிழ் மக்களை ஏமாற்றும் நாடகம் என யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் வே.தவச்செல்வன் தெரிவித்தார்.

சம்மேளனக் கேட்போர் கூடத்தில் நேற்று யாழ்.பல்கலைக்கழக சமூகத்தால் இன்று முன்னெடுக்கப்படுகின்ற மக்கள் எழுச்சிப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து அவர் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களுக்காக அன்றிருந்த தன்னிகரற்ற தலைவனுக்கு பின்னர் அரசியல் தலைமைத்துவம் இவ்வாறு போய்விட்டதுடன் தற்போது தமிழ் மக்களை அடகுவைக்கும் அரசியல் சில்லறைகளே தம்மை தமிழ் மக்களின் பிரிதிநிதிகளாகக் கூறி ஐ.நாவுக்கு காவடி எடுப்பதாகத் தெரிவித்தார். இவ்வாறான நிலையில் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் கருத்து வெளியிட்ட போது, இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களுக்கு தீர்வை வழங்காவிட்டால் மாற்று வழியைப் பின்பற்றுவோம் எனத் தெரிவித்தார்.

தமிழ் மக்களுக்கான தீர்வை எப்போதுமே இலங்கை பேரினவாத அரசு வழங்காது என தமிழீழம் சிந்தித்து விட்டதாகவும் மாடி வீடுகளிலும் குளிரூட்டப்பட்ட அறைகளிலும் இருந்து கொண்டு அரசாங்கத்துக்கு வக்காளத்து வாங்குபவர்களால் தமிழர்கள் கூனிக் குறுகி நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே தமிழ் மக்களுக்கென்றொரு நிலையான தலைமைத்துவம் இல்லாத சூழ்நிலையில் யாழ்.பல்கலைக்கழகத்தினால் ஐ.நாவுக்கு அழுத்தத்தை வழங்க ஒழுங்குபடுத்தப்பட்ட மக்கள் எழுச்சிப் பேரணிக்கு தமது சங்கம் பூரண ஆதரவை வழங்குவதாகத் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் உரிமையை உலகறியச் செய்த பொங்குதமிழ் நிகழ்வைப் போன்று இம்முறையும் தமிழர் உரிமையை உலகறியச் செய்ய மாணவர்கள் தலைமையில் அணிதிரளுமாறு அவர் மேலும் வேண்டுகோள் விடுத்தார். (இ-10)






விடத்தற்பளை ஸ்ரீகணேசா முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு நிகழ்வு கடந்த திங்கட்கிழமை விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்தில் முன்பள்ளி முகாமைத்துவ தலைவர் இ.கயேந்திரா தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபை பிரதித்தவிசாளர் செ.மயூரன், வரணி வைத்தியசாலை வைத்தியர் வி.ஆறுமுகம்,விடத்தற்பளை கமலாசனி வித்தியாலய அதிபர் இ.நாகேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# யாழில் ஆவணங்களைப் பதிவு செய்யும் ஒரு நாள் சேவை ஆரம்ப நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

உள்ளக, உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிகள் அமைச்சின் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் ஆவணங்கள் பதிவு செய்தலின் ஒரு நாள் சேவை மற்றும் சர்வதேச தரத்தின்படி தயாரிக்கப்படுகின்ற புதிய பிறப்புச் சான்றிதழ் விநியோகிக்கும் தேசிய நிகழ்சித்தின் திட்டத்தின் ஆவணங்களை விரைவாக பதிவு செய்யும் ஒரு நாள் வேலைத்திட்ட ஆரம்ப நிகழ்வு இன்று 9.30 மணியளவில் யாழ்.மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி. விஜயகலா மகேஸ்வரன் தலைமையில் இடம்பெறும். (5)

# அலரி விதை உட்கொண்ட தாயும் பால் குடித்த பிள்ளையும் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

அரலி விதையினை உட்கொண்ட தாய் ஒருவர் பிள்ளைக்கு பால் கொடுத்த நிலையில் இருவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை நெல்லியடி பொலிஸ் நிலையத்திற்கு கரவெட்டி மேற்கு பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் வந்துள்ளார்.

அவர் தான் அலரி விதையினை உட்கொண்டதாகப் பொலிஸாரிடம் தெரிவித்தார். இதனையடுத்து அப்பெண்ணும் கைக்குழந்தையும் அம்புலன்ஸ் மூலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டதாகப்பொலிஸார் தெரிவித்தனர்.(5-60)

# ஒளிப்படக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

கே.குமணனின் உத்தரிப்புக்களின் அல்பம் ஒளிப்படக் கண்காட்சி இன்று 16 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 5 மணி வரை யாழ்.பொதுசன நூலக முன்றலில் இடம்பெறும். (5)

## வேலையாட்கள் தேவை

மிக்சர் தயாரிப்பு பொதியிடலுக்கு வேலை தெரிந்த பெண் தொழிலாளர் தேவை. சம்பளம் ரூபா 1000/- வரை பெறலாம் தினமும் காலை 9.00-11.00 மணிக்கு இடையில் நேரில் வரவும்.

பாரதி கைத்தொழிலகம்
இல. 19, சம்பியன் லேன்,
கொக்குவில்.
TP:- 021 205 2415


(7986)

வலம்புரி
021 221 7603, 021 567 1532
விளம்பரத் தொடர்புகளுக்கு



அகில இலங்கைக் கம்பன் கழகம் நடாத்தும்

## யாழ்.கம்பன் விழா 2019



16.03.2019 சனி காலை 9.30 மணி (இன்றைய நிகழ்வுகள்)
நல்லூர் கம்பன் கோட்டம்

**நிகழ்ச்சி நிரல்**

மங்கல விளக்கேற்றல்
திரு. ச.சிவகுமரன்
(முன்னாள் செயலாளர், யாழ். வணிகர் கழகம்)
திரு.வீ.மகாலிங்கம்
(முகாமையாளர், யாழ். பூபாலசிங்கம் புத்தகசாலை)
கடவுள் வாழ்த்து
திருமதி நிலானி கோபிசங்கர்
தலைமையுரை
அதிவண. எஸ்.ஜெபநேசன்
(முன்னாள் பேராயர்)
தொடக்கவுரை
திரு.சுந்தரம் டிவகலாலா
(முன்னாள் செயலர், கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு, வட கிழக்கு மாகாணம்)
எழிலுரை
நிகழ்த்துபவர்:
கவிஞர் சோ.பத்மநாதன்
பொருள்:
"திருப்புகழில் இராமாயணம்"
கருத்தரங்கம்
தலைவர்:
புலவர் இரெ. சண்முகவடிவேல்
பொருள்
"பண்பாட்டுக் கம்பன்"
மனைமாட்சியில் பண்பாடு – ந.ஐங்கரன்
குருபக்தியில் பண்பாடு – ஆர்.சர்வேஸ்வரா
தாய்மையில் பண்பாடு – த.நாகேஸ்வரன்
நட்பில் பண்பாடு – ந.விஜயசுந்தரம்
பகையில் பண்பாடு – இராம.சௌந்தரவள்ளி
தூதில் பண்பாடு – இரா. மாது

16.03.2019 சனி மாலை 4.30 மணி
நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம்

**நிகழ்ச்சி நிரல்**

மங்கல இசை
திரு.வி.கே.பஞ்சமூர்த்தி குழுவினர்
மங்கல விளக்கேற்றல்
திரு. எஸ்.பி.சாமி (நிறுவுநர், தினக்குரல்)
திரு. சி.வெற்றிவேலாயுதம் (நிறுவுநர், வலம்புரி)
திரு.ந.வித்தியாதரன் (நிறுவுநர், காலைக்கதிர்)
கடவுள் வாழ்த்து
திரு.ப.சிவமைந்தன்
தலைமையுரை
திரு. அ.வரதராஜப் பெருமாள்
(முன்னாள் முதலமைச்சர், வடகிழக்கு மாகாணம்)
தொடக்கவுரை
திரு.சி.தவராசா
(முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர், வடமாகாண சபை)
பட்டிமண்டபம்
நடுவர்:
கம்பவாரிதி இ.ஜெயராஜ்
பொருள்:
"கற்போரைப் பெரிதும் கவர்பவள்..."

காதல் சீதையே! – புலவர் இரெ.சண்முகவடிவேல், இரா.செல்வவடிவேல்
கடிமணச் சீதையே! – இராம.சௌந்தரவள்ளி, ந.விஜயசுந்தரம்
கடுந்தவச் சீதையே! – இரா.மாது, ஸ்ரீ.பிரசாந்தன்

(8)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.



உ
சிவமயம்







"அமெரிக்க ஹவாய் சைவ ஆதீன முதல்வர்"

## சற்குரு போதிநாத வேலன் சுவாமிகளின் தரிசனம்

**இடம்**
ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டம்
பழைய வீதி, கோப்பாய்.

**காலம்**
17.03.2019 ஞாயிற்றுக்கிழமை
மாலை 4.30 மணி

அன்புடையீர், வணக்கம்,

அமெரிக்காவிலுள்ள ஹவாய் சைவ ஆதீன முதல்வர் சற்குரு போதிநாத வேலன் சுவாமிகள் உலகின் பல பாகங்களையும் சேர்ந்த 55 அடியவர்கள் சகிதம் ஆன்மீக யாத்திரைக்காக எம் மண்ணுக்கு வருகை தந்துள்ளார்.

அவர்களை அடியவர்கள் தரிசித்து ஆசி பெறுவதற்கு எமது ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டம் ஏற்பாடு செய்துள்ளது. இவ்வரிய தெய்வீக நிகழ்ச்சியில் அனைவரும் கலந்து கொண்டு சுவாமிகளின் நல்லாசிகளைப் பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டம்,
பழைய வீதி,
கோப்பாய்.

(7958)

இங்ஙனம்
ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டச்
சைவச் சிறுவர்கள்.



## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்:கார்த்திகை 4
கி.பா:42 ¾சூரிசெவ் 2 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:NCT Civil, HND (QS),B.Sc Reading , Technical Officer (அரச)
எதிர்பார்ப்பு: A/L, அரச தனியார் தொழில் (உள்நாடு)
தொ.இ: B/9490

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்:பூரட்டாதி 1
கி.பா: 37செவ் 7 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:Civil (Tec), Technical Officer (தனியார்)
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம், (உள்நாடு)
தொ.இ: B/9495

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்:பூசம் 2
கி.பா: 42 ¾ செவ் 12 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: NED,IESL Part 3 E.S நிரந்தர தொழில்
எதிர்பார்ப்பு: பட்டதாரி, அரசதொழில், (உள்நாடு)
தொ.இ: B/9497

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி 2
உயரம்: 5'
தகைமை/தொழில்:A/L, Sales Ref தனியார் தொழில்
எதிர்பார்ப்பு: O/L
தொ.இ: B/9498

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்:உத்தரட்டாதி 2
கி.பா: 41 உயரம்: 5'3"
தகைமை/தொழில்:B.Sc, Reading M.Sc , Lecturer
எதிர்பார்ப்பு:Professional job
தொ.இ: G/9499

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்:மிருகசீரிடம்
கி.பா: 5 ¼ செவ் 2 இல்
உயரம்:5'6"
தகைமை/தொழில்:பட்டதாரி, விரிவுரையாளர்
எதிர்பார்ப்பு:அரச தனியார் தொழில், விவாகரத்தும் விரும்பத்தக்கது.
தொ.இ: G/2902

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: சதயம் 3
கி.பா: 7 ½செவ் 4 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்:IAB, HNDA II
எதிர்பார்ப்பு: அரச, தனியார் தொழில், விவாகரத்தும் விரும்பத்தக்கது.
தொ.இ: G/2903

பிறப்பு: 1972 இந்து
நட்சத்திரம்:ரோகிணி 3
கி.பா: 23 சூரி செவ் 2 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:BSc, Bio Medicine, Australia
எதிர்பார்ப்பு: Doctor, Engineer, Accountant,Other Professional Jobs
தொ.இ: G/2906

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் ஏற்பாட்டில் பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமும் (CTA) இலங்கையில் ஜனநாயகத்தின் எதிர்காலமும் என்ற தலைப்பிலான விசேட கலந்துரையாடல் எதிர்வரும் 20 ஆம் திகதி புதன்கிழமை (பௌர்ணமி தினம்) பிற்பகல் 3.30 மணியளவில் இல. 62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி என்ற முகவரியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் வன்னி மாவட்டங்களின் செயலாளர் தோழர் என். பிரதீபன் தலைமையில் இடம்பெறவுள்ள இக் கலந்துரையாடலில் பிரதான உரையினை முன்னிலை சோசலிசக் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் சேனாதீர குணதிலக ஆற்றுவார். (5-7)

# பங்குனி மாத இராசி பலன்கள்

## 15.03.2019 முதல் 13.04.2019 வரை



விளம்பி வருடம் பங்குனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்திலேயே உங்கள் இராசிநாதன் செவ்வாய் இராசியிலேயே சஞ்சரிப்பது யோகம் தான். அப்போது அதிசார கதியில் தனுசில் உள்ள குருவின் பார்வை செவ்வாய் மீதும் பதிகின்றது. எனவே குருமங்கள யோகம் உருவாகின்றது. மாதத் தொடக்க நாளில் சந்திரனைக் குரு பார்ப்பதால், குருச்சந்திர யோகத்தோடு பங்குனி பிறக்கிறது. தனவரவு திருப்தி தரும். திருமண முயற்சியும் கைகூடும்.

சகோதர ஸ்தானத்தில் இராகுவும், பிதுர்ரார்ஜித ஸ்தானத்தில் கேதுவும் வீற்றிருக்கின்றனர். சர்ப்ப கிரகங்களுக்கு மத்தியில் மற்ற கிரகங்கள் சஞ்சரிக்கின்றன. திசாபுத்தி பலம்இழந்தவர்கள் தெய்வ வழிபாட்டை முறையாக வழிபடுவதோடு இராகு-கேதுக்களுக்குரிய சர்ப்ப சாந்திப் பரிகாரங்கள் செய்து கொள்வது நல்லது.

பஞ்சமாதிபதி சூரியன் 12இல் சஞ்சரிப்பதால் பிள்ளைகள் வழியில் சுப காரியங்கள் நடைபெறும். அவர்களின் நலனுக்காக ஒருதொகை செலவிட நேரிடும். அரசு வேலைக்காக விண்ணப்பித்துப் பல நாட்களாக வேலை கிடைக்கவில்லையே என்று ஏங்கியவர்களுக்கு இப்பொழுது வேலை கிடைக்கக் கூடிய சந்தர்ப்பம் வரப் போகின்றது.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்த இடமாற்றம், கேட்ட சலுகைகள் கிடைக்கும். சக பணியாளர்களின் ஒத்துழைப்போடு முன்னேற்றம் காண்பீர்கள். சுயதொழில் செய்பவர்களுக்கு இதுவரை தடைபட்ட ஒப்பந்தங்கள் தானாக வந்து சேரும். கடை மற்றும் தொழில் நடைபெறும் இடத்தை விலைக்கு வாங்கும் முயற்சிகள் கைகூடும். 9இல் இருக்கும்சனியோடு கேது இணைந்திருப்பதால் உறவினர்களை அனுசரித்துக் கொள்வது நல்லது.

### அதிசார குருவால் அதிக நன்மை!

முன்னோர் வழி சொத்துக்களில் இருந்த வில்லங்கங்கள் விலகும். முக்கியப் புள்ளிகளின் ஆலோசனைகள் உங்கள் முன்னேற்றத்திற்கும் வழி வகுத்துக் கொடுக்கும். இம்மாதம் பங்குனி உத்திரத்தன்று முருகப்பெருமானையும், ராம நவமிஅன்று ராமபிரானையும் வழிபட்டால்நன்மைகள் சேரும்.

**ரிஷப செவ்வாய் சஞ்சாரம்**

மார்ச் 20 ஆம் திகதி அன்று ரிஷப இராசிக்கு செவ்வாய் செல்கின்றார். இராசிநாதனாகவும், அஷ்டமாதிபதியாகவும் விளங்கும் செவ்வாய், தன ஸ்தானத்தில் சஞ்சரிப்பது யோகம் தான். 2 ஆம் இடம் வலிமையடைவதால் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். வெளிநாட்டு வர்த்தகம் கொடிகட்டிப் பறக்கும். வீட்டில் இருந்தபடியே தொழில் செய்தாலும் கூட ஏற்ற விதத்தில் லாபம் வந்து சேரும். புதிய முதலீடுகள்செய்து தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் நிறைவேறும்.

**கும்ப சுக்கிரனின் சஞ்சாரம்**

மார்ச் 22 ஆம் திகதி கும்ப இராசிக்குச் சுக்கிரன் செல்கின்றார். அங்குள்ள புதனுடன் இணைந்து புத-சுக்கிர யோகத்தை உருவாக்குகின்றார். உங்கள் இராசிக்கு 2, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன், இலாப ஸ்தானத்தில் சஞ்சரிப்பது நல்லது. தொட்ட காரியங்களில் எல்லாம் வெற்றி கிடைக்கும். வாழ்க்கைத்துணையாலும், வாரிசுகளாலும் உங்களுக்கு வருமானம் உதிரியாகவும் வந்து சேரும். வீட்டை விரிவு செய்யும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். புதிய வாகனங்கள் வாங்கும் முயற்சி கைகூடும். ஆடை, ஆபரணங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். தங்கம், வெள்ளி போன்றவற்றில் முதலீடு செய்ய முன்வருவீர்கள்.

**நீச்ச புதனின் சஞ்சாரம்**




ஏப்ரல் 8 ஆம் திகதி மீன இராசிக்குப் புதன் செல்கின்றார். மீன இராசி புதனுக்கு நீச்ச வீடாகும். உங்கள் இராசி அடிப்படையில் 3,6 இற்கு அதிபதியான புதன் நீச்சம் பெறுவது யோகம் தான். நீடித்த நோய் அகலும். வழக்குகள் சாதகமாக முடியும். எதிரிகள் விலகிச் செல்வர். வெளி வட்டாரப் பழக்க வழக்கம் விரிவடையும்.

இம்மாதம் செவ்வாய்க்கிழமை தோறும் சண்முக நாதப் பெருமானை வழிபடுவதன் மூலம் சந்தோஷங்கள் அதிகரிக்கும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் குரு பார்வை இருப்பதால் காரியங்களை நினைத்த நேரத்தில் முடிப்பீர்கள். கல்யாண முயற்சிக்காக எடுத்த முயற்சிகள் கைகூடும். கடமையில்உள்ள தொய்வு அகலும். கணவன்-மனைவி ஒருவரையொருவர் புரிந்து கொண்டு செயற்பட்டு மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

பிள்ளை களின் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். கும்பச் சுக்கிரனின் சஞ்சாரத்திற்குப் பிறகு தாய் வழி ஆதரவு எதிர்பார்த்தபடி அமையும். உடன்பிறப்புகளின் இல்ல விஷேசங்களை முன்னின்று நடத்தி வைப்பீர்கள்.

பணிபுரியும் பெண்களுக்கு சம்பள உயர்வு, மேலதிகாரிகளின் ஆதரவு இருக்கும். கடனுதவி கேட்டு விண்ணப்பித்திருந்தால் கிடைக்கும். பங்குனி உத்திரத்தன்று முருகப்பெருமானை வழிபடுவதால் தடைகள் அகலும்.

**ஜோதிடக் கலாமணி**
**சிவல்புரி சிங்காரம்**

---



விளம்பி வருடம் பங்குனி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசி நாதன் சுக்கிரன் 9ஆம் இடத்தில் சஞ்சரிப்பது யோகம். தந்தை வழியிலும், முன்னோர்கள் வழியிலும் கிடைக்க வேண்டிய அனுகூலங்கள் படிப்படியாக வந்து சேரும். பூர்வ புண்ணிய பலனாக கிடைக்க வேண்டியவற்றில் இருந்த தடைகள் அகலும். தக்க விதத்தில் நற்பலன்கள் கிடைக்கும்.

குருபகவான் இப்பொழுது அதிசார கதியில் அஷ்டமத்தில் அடியெடுத்து வைக்கிறார். 8 இல் குரு வரும்பொழுது இடையூறுகள் ஏற்படுமோ என்று நினைக்கவேண்டாம். 8ஆம் இடம் குருவிற்குரிய வீடாக அமைவதால் அஷ்டமாதிபதி, அஷ்டமத்தில் சஞ்சரித்து உங்கள் இராசிக்கு 2, 4, 12 ஆகிய இடங்களில் பார்வையைப் பதிக்கின்றார். அவர் பார்க்கும் இடமெல்லாம் புனிதம் அடையும் என்பதால், குடும்ப முன்னேற்றம் திருப்தியாக இருக்கும். கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். இதுவரை நடைபெறாத சில காரியங்கள் இப்பொழுது துரிதமாக நடைபெறும்.

தாய்வழி ஆதரவு தக்க விதத்தில் அமையும். குடும்பத்தில் தடைப்பட்டிருந்த சுப காரியங்கள் நடைபெறும். விலகிய நட்புகள் இணைந்து விருப்பங்களை நிறைவேற்றும். வெளிநாட்டு வர்த்தகம் சிறப்பாக இருக்கும். உத்தியோகத்தில் பதவி உயர்வு தானாக வந்து சேரும். அசையா சொத்துக்கள் வாங்கியதால் ஏற்பட்ட கடன்கள் இப்பொழுது அடைபடும். விலை உயர்ந்த பொருட்கள் அல்லது முன்னர் வாங்கிய சொத்துக்களில் ஒரு பகுதியை விற்று நிம்மதி காண்பீர்கள்.

### புதிய பாதை புலப்படும் நேரம்!

**அஷ்டமத்து சனியின் ஆதிக்கம்**

அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கத்தால் எதையும் நிதானித்துச் செய்வது நல்லது. உங்கள் இராசிசந்திரனுக்கு உச்ச இராசியாக இருப்பதால் சிந்தனைகள் வெற்றி பெறும். இருந்தாலும், சனி திசை, கேது திசை அல்லது சனி புத்தி, கேது புத்தி நடப்பவர்கள் கூடுதல் கவனத்துடன் செயற்படுவது நல்லது. நண்பர்களை நம்பி ஏமாறும் சூழ்நிலையும், தொழிலில் சிறு இழப்புகளையும் சந்திக்க நேரிடலாம். அதனால், ஒவ்வொரு சனிக்கிழமையும் விநாயகரையும், சனீஸ்வரரையும், அனுமனையும் தொடர்ந்து வழிபட்டு வருவது நல்லது. பங்குனி உத்தரம் அன்று முருகப் பெருமானை வழிபடுவதுடன், ராம நவமியன்று ராமன் வழிபாட்டை மேற் கொள்ளுங்கள்.

**ரிஷப செவ்வாயின் சஞ்சாரம்!**

மார்ச் 20 ஆம் திகதி செவ்வாய் உங்கள் இராசியில் அடியெடுத்து வைக்கின்றார். சப்தம விரயாதிபதியான செவ்வாய் இராசியில் சஞ்சரிக்கும் பொழுது திடீர் திருப்பங்கள் நடைபெறும். வீடுமாற்றங்கள், இடமாற்றங்கள், வேற்று மனிதர்களின் ஒத்துழைப்பு, வெளிநாட்டு முயற்சியில் அனுகூலம், சொத்து விற்பனையில் இருந்த தடை அகலுதல், தாமதித்த சம்பளப் பாக்கிகள் தானாக வந்து சேருதல் போன்றவை நடைபெறும். வாழ்க்கைத் துணை வழியே ஏற்பட்ட பிரச்சினைகள் தீரும். கொடுக்கல், வாங்கல்களில் முன்னேற்றம் ஏற்படும். வாகனப் பழுதுகளால் கவலை வந்து எப்பொழுது வாகனம் வாங்கலாம் என்று சிந்தித்திருந்த உங்களுக்கு இப்பொழுது அந்த எண்ணம்கைகூடப்போகின்றது.

**கும்ப சுக்கிரனின் சஞ்சாரம்**

மார்ச் 22 ஆம் திகதி கும்ப இராசிக்குச் சுக்கிரன் செல்கிறார். இக்காலம் ஒரு பொற்காலமாகும். உங்கள் இராசிநாதன் சுக்கிரன் கும்ப இராசியில் இருக்கும் புதனோடு சேரும் நேரம் புத சுக்கிர யோகம் செயற்படும். தொழிலில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். தெரிந்த தொழிலாக இருந்தாலும், தெரியாத தொழிலாக இருந்தாலும் மாற்று இனத்தவர்களின் ஒத்துழைப்போடு காரியங்கள் திட்டமிட்டபடி நடக்கும். பெண் குழந்தைகளுக்கு சுபச்சடங்குகளை செய்யலாம்.

**நீச்ச புதனின் சஞ்சாரம்**

ஏப்ரல் 8 ஆம் திகதி மீன இராசிக்குப் புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு தன, பஞ்சமாதிபதியான புதன் மீனத்தில் நீச்சம் பெறுவது நல்லதல்ல. பற்றாக்குறை பட்ஜெட் உருவாகும். ஒரு சிலருக்குத் தொழிலில் கூடுதலாக மூலதனம் போட இயலவில்லை என்ற கவலை உருவாகும். திட்டமிட்ட காரியங்களில் ஒருசில திசை மாறலாம். பிள்ளைகள் விடயத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் உள்ள பெரியவர்களின் ஆலோசனைகளை கேட்டு நடந்தால் பிரச்சினைகள் ஏற்படாது.




இம்மாதம் இராகு-கேதுக்களால் நன்மை கிடைக்கச் சர்ப்ப சாந்திப் பரிகாரங்களைச் செய்வதோடு வியாழக்கிழமை தோறும் குருவை வழிபட்டு வருவது நல்லது.


**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் உடல்நலத்தில் ஏதேனும் பிரச்சினைகள் ஏற்பட்டால் உடனடியாக மருத்துவ ஆலோசனை பெறுவது நல்லது. கணவன்-மனைவிக்குள் ஒரு சில சமயங்களில் சச்சரவுகள் உருவாகலாம். பொறுமையும், நிதானமும் உங்களுக்கு அதிகம் தேவைப்படும் நேரமிது. பிறருக்கு பணப்பொறுப்புகள் சொல்வதைத் தவிர்ப்பதன் மூலம் பிரச்சினைகளிலிருந்து விடுபட இயலும். பிள்ளைகளின் எதிர்கால நலன்களுக்கான செலவு உண்டு. தாய் மற்றும் சகோதரர் ஆதரவு கிடைக்கும். பணிபுரியும் இடத்தில் மேலதிகாரிகளையும், சக ஊழியர்களையும் அனுசரித்துச்செல்வது நல்லது. வீடு, இடம் வாங்கும் பொழுது வில்லங்கங்கள் பார்த்து வாங்க வேண்டும். இம்மாதம் பங்குனி உத்தர நாளில் முருகப் பெருமானையும், ராமநவமியன்று ராமனையும் வழிபட்டால்வந்த துயரங்கள் விலகும்.

(தொடரும்)

# வடக்கு மக்களின் வாக்குகள் தேவைப்படும் போதே அபிவிருத்தி குறித்து அரசிற்கு நினைவுக்கு வருகிறது

## நாடாளுமன்றில் நாமல் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

**வடக்கு மக்களின் வாக்குகள் தேவைப்படும்போதே அப்பகுதிகளின் அபிவிருத்தி குறித்து அரசாங்கத்துக்கு நினைவுக்கு வருகின்றதென நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற குழுநிலை விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய போதே நாமல் மேற்கண்டவாறு தெரிவித்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வாக்குகள் தேவைப்படும் போதே அரசாங்கம் வடக்கின் அபிவிருத்தியில் கவனம் செலுத்துகின்றது எனவும் நாமல் தெரிவித்தார்.

இதேவேளை நாட்டில் வறுமையை ஒழிப்பதற்கு பல செயற்றிட்டங்களை முன்னெடுப்பதாக தற்போதைய அரசாங்கம் வாக்குறுதி வழங்கியது. ஆனால் ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் இன்னும் வறுமையிலேயே உள்ளனரெனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

மேலும் இளைஞர்-யுவதிகளுக்காக 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழில்வாய்ப்புக்களை உருவாக்கித்தருவதாகவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது. இருப்பினும் தற்போது 60 ஆயிரம் தொழிலற்ற பட்டதாரிகள் நாட்டில் உள்ளனர் எனவும் நாமல் தெரிவித்தார். இவ்வாறு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றாமல் அவர்களை ஏமாற்றும் செயற்பாட்டையே அரசாங்கம் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றதெனவும் நாமல் கவலை வெளியிட்டார். (இ-7)

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மீண்டும் நேர்முகத்தேர்வை நடத்த கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணப் பொதுச்சேவையின் முன்பள்ளி ஆசிரியர் சேவையின் பதவி நியமன நேர்முகத் தேர்வு தற்காலிகமாக நிறுத்தப்பட்டமையால் தாம் பல்வேறு இன்னல்களுக்கு உள்ளாவதாக பாதிக்கப்பட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் முன்பள்ளி ஆசிரியர் சேவை பதவி நியமனத்திற்கு 2017 ஆம் ஆண்டு மே மாதம் விண்ணப்பம் கோரப்பட்டு பின்னர்தகைமைகள்குறைக்கப்பட்டு 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி வரை கால நீடிப்ப வழங்கப்பட்டது.

இதன் பிரகாரம் கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி நடைபெற்ற திறந்த போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து அதே வருடம் செப்டெம்பர் மாதம் 9 ஆம் திகதி நடைபெற்ற பிரயோகப் பரீட்சையிலும் தோற்றினர்.

அதன்பின் 26.11.2018 திட்டமிடலும் உள்ளூராட்சி மாகாண நிர்வாக அமைச்சின் செயலாளரினால் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்பட்டும் தவிர்க்க முடியாத காரணத்தால் உரிய தினத்தை இரத்துச் செய்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் ஏறக்குறைய 10 மாதங்கள் கடந்த நிலையில் பரீட்சைக்கு தோற்றியும் வேறெந்த தொழில் வாய்ப்பும் இல்லாத சூழ்நிலையில் தமது குடும்ப நிலையைக் கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இடைநிறுத்திய நேர்முகத்தேர்வினை மீண்டும் நடத்துவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து தருமாறு பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் கோரிக்கை முன்வைக்கின்றனர்.

குறித்த விடயம் தொடர்பில் மாகாணப் பொதுச் சேவை உதவிச் செயலாளரைத் தொடர்புகொண்ட போது கடந்த வருட இறுதியில் இலங்கை அரசியலில் ஏற்பட்ட குழப்ப நிலை காரணமாக உரியவர்களுக்கு நியமனம் வழங்க முடியாது போய்விட்டதாகவும் இம்முறை வரவு-செலவுத் திட்டம் முடிவுற்றதும் உரிய ஏற்பாடுகள் இடம்பெறுமெனத் தெரிவித்தார். (5-10)

## இனப்படுகொலை செய்த இலங்கை அரசை தண்டிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

### இந்திய அரசிடம் வலியுறுத்தி சென்னையில் போராட்டம்




(சென்னை)

இனப் படுகொலை செய்த இலங்கை அரசாங்கத்தை ஐ.நாவில் தண்டிக்க, இந்திய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி, ஈழத்தமிழர்கள் வாழ்வுரிமைக் கூட்டமைப்பு சார்பில் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

சென்னை நுங்கம்பாக்கத்தில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல் திருமாவளவன், கொளத்தூர் மணி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தில் போர்க்குற்றம் புரிந்த இலங்கை அரசை தண்டிக்கப் வேண்டும் என்றும் அதற்கு இந்திய மத்திய அரசு ஐ.நா. சபையில் வலியுறுத்த வேண்டும் என்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர்.

தொடர்ந்து இலங்கைத் தூதரகத்தை முற்றுகையிடச் சென்றவர்களை பொலிஸார் தடுத்து நிறுத்தி அவர்களைக் கைது செய்துள்ளனர். (இ-7)

## தமிழின அழிப்பிற்கு நீதிகோரும் மக்கள் போராட்டத்திற்கு வலுச்சேர்க்க வாருங்கள்

(யாழ்ப்பாணம்)

இந்த மண்ணிலே வாழ்கின்ற ஒவ்வொரு தமிழனின் உதிரத்திலும் கண்ணீரிலும் தமிழ்த்தேசத்தில் இலங்கை அரசாங்கத்தால் திட்டமிட்டு நடத்தப்பட்ட இன அழிப்பின் நினைவுகள் மறக்கவும் முடியாமல் மன்னிக்கவும் முடியாமல் கலந்துள்ளது. அந்த வகையில், இலங்கைக்கு கால அவகாசம் வழங்கப்படக் கூடாது மற்றும் ஐ.நா. பாதுகாப்புச் சபையின் ஊடாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பரிந்துரைத்தல் அல்லது சர்வதேச விசேட குற்றவியல் தீர்ப்பாயத்தை நிறுவி அதன்மூலம் விசாரணைகளை மேற்கொள்வதே சிங்கள தேசத்தின் திட்டமிட்ட தமிழின அழிப்பிற்கு நீதியைப் பெற்றுத் தரும் என்ற ஒரே கோஷத்துடன் யாழ்.பல்கலைக்கழக சமூகத்தால் தமிழின அழிப்பிற்கு நீதி கோரி இன்று சனிக்கிழமை முன்னெடுக்கப்படும் மக்கள் எழுச்சிப் பேரணிக்கு வலுச்சேர்க்கும் வகையில் அதில் எழுச்சியுடன் பங்குபற்ற வேண்டிய கடமைப்பாடு தமிழ்த் தேசத்தில் வாழுகின்ற அத்தனை உணர்வாளர்களுக்கும் உண்டு என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ். மாநகரசபை உறுப்பினர் வ.பார்த்தீபன் அழைப்பு விடுத்துள்ளார்.

கடந்த இரண்டு வருடங்கள் இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட கால அவகாசத்தில் அரசாங்கம் என்ன காத்திரமான நடவடிக்கைகளை எடுத்தது என்பதை மீண்டும் அரசாங்கத்திற்கு கால அவகாசம் வழங்க வேண்டும் என வலியுறுத்தும் தரப்புக்கள் தான் விடை பகிரவேண்டும். எனவே பாதிக்கப்பட்ட எம் மக்களுக்கான நியாயமான கோரிக்கைகளை முன்னிறுத்தி மக்களோடு இணைந்து இப் போராட்டத்திற்கு வலுச்சேர்க்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)


## மரண அறிவித்தல்

### அமரர்.நல்லையா துரைராஜா



*யாழ்.மானிப்பாய் வீதி ஆனைக்கோட்டை கூழாவடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா துரைராஜா அவர்கள் 13.03.2019 புதன்கிழமை அன்று இறைவனடி எய்தினார்.*

*அன்னார் காலஞ்சென்ற நல்லையா ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகனும், இரத்தினேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், நீலவேணி (கனடா), சுவீஸ்கரன் (கனடா), உதயகரன் (கனடா), கிரிஷ்ணவேணி (கனடா), கரு ணாகரன் (கனடா), தனீஸ்கரன் (கனடா), நிமலவேணி (ஐக்கிய அமெரிக்கா), ஜெனீஸ்கரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நித்தியகரன் (இலங்கை) அவர்களின் பாசமிகு சிறிய தந்தையும், தேவராஜா (இலங்கை), காலஞ்சென்ற நவரத்தினம், தம்பிராஜா, கந்தசாமி, கிருஷ்ணாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற ஜெகதீஸ்வரன், அருளேஸ்வரி (இல ங்கை), சத்தியேஸ்வரி (இலங்கை), ஜெகதீஸ்வரி (ஒஸ்ரியா), விக்கினேஸ்வரி (இலங்கை), கருணேஸ்வரன் (இலங்கை) ஆகி யோரின் பாசமிகு மைத்துனரும், கணேஷமூர்த்தி (கனடா), அங் கையற்கண்ணி (கனடா), சுபோசனா (கனடா), சண்முகநாதன் (கனடா), பதுமினி (கனடா), குகாநந்தன் (ஐக்கிய அமெரிக்கா), சியாமினி (கனடா), ஐஷா (கனடா), சிவமதி (இலங்கை) ஆகியோரின் பாசமிகு மாமாவும், சுவீஸ்ரன், கனிஷ்ரன், அனி ஸ்ரன், சுகீரா, பிரவீன், ஓம்கரன், ஓவியா, ஒளிமயன், நிருஷா, அபினாஷ், கபினையா, காருண்யா, பிரபு, சூரியா, அஷ்வினி, ஐசிக்கா, பிரித்திகா, நிசாந்தன், தருண், பானுயன், நியன், பிரனுசா ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.*


*அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17.03.2019 நாளை ஞாயிற்றுக் கிழமை கனடாவில் நடைபெறும்.*

*இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.*

தகவல்:- குடும்பத்தினர்

(சி-5738)

# நீராவியடி பிள்ளையார் ஆலய வளாகத்தில் ஏற்பட்ட முறுகல் தொடர்பிலான வழக்கு மார்ச் 22 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு



**(பனிக்கன்குளம்)**

**முல்லைத்தீவு நாயாறு நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்திற்கு ஜனவரி 14 ஆம் திகதி பொங்கல் வழிபாடுகளுக்காக சென்ற பிரதேச தமிழ் மக்களுக்கும் கோவில் வளாகத்தை ஆக்கிரமித்து குடியிருக்கும் பௌத்த பிக்குவுக்கும் இடையில் முறுகல் ஏற்பட்டிருந்தது. இதனடிப்படையில் குறித்த இடத்தில் ஏற்பட்ட பிரச்சினைகள் தொடர்பில் சமாதான குலைவு ஏற்பட்டதாக முல்லைத்தீவு பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட வழக்கு கட்டளைக்காக மார்ச் 22 ஆம் திகதிக்கு திகதியிடப்பட்டுள்ளது.**

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் நேற்றையதினம் குறித்த வழக்கு தொடர்பான தீர்ப்பு வழங்கப்படும் என்ற எதிர்பார்ப்பு இருந்த நிலையில் வழக்கு மார்ச் 22 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

முல்லைத்தீவு நீதிமன்றில் நேற்றுக்காலை நீதிபதி எஸ் லெனின்குமார் முன்னிலையில் வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது வழக்கு கட்டளை மார்ச் 22 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது என மன்றில் முன்னிலையான சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் தெரிவித்துள்ளார்.

குறித்த வழக்கானது நேற்று கட்டளை இடுவதாக இருந்தது. இருப்பினும் எதிர்வரும் 22 ஆம் திகதி இடுவதாக அறிவிக்கப்பட்டது.

அத்துடன் இந்த விடயத்துடன் தொடர்புபடுத்தி ஆலயத் தரப்பினரால் பௌத்த மதகுருவை அச்சுறுத்தியது மற்றும் தொல்பொருள் திணைக்கள பொருட்களை சேதப்படுத்தியது தொடர்பிலும் ஒரு வழக்கு தொடரப்பட்டுள்ளது.

அதற்கு ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது. எமது ஆலய பெயர்ப்பலகை மாற்றியபோது நாம் சென்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு தெரிவித்தபோது பொலிஸார் இது தொடர்பில் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அது தொடர்பிலும் மன்று ஆராய்ந்து இரண்டு வழக்குகளுக்கும் மார்ச் 22ஆம் திகதிக்கு திகதியிடப்பட்டுள்ளது என மேலும் தெரிவித்தார். (2-281)




# காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களுக்கு ஒரு தொகுதி உலருணவுப்பொருட்கள் வழங்கல்



(பனிக்கன்குளம்)

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் தங்களுடைய பிள்ளைகளை தேடி முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 2017 மார்ச் 8 ஆம் திகதி ஆரம்பித்த தொடர் கவனயீர்ப்பு போராட்டமானது நேற்று 737 ஆவது நாளாக முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்று வருகின்றது.

அந்தவகையில் போராட்டத்தில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்ற மக்கள் சார்பாக முல்லைத்தீவு மாவட்டத்தின் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் இணைப்பாளர் நேற்றைய தினம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது தாங்கள் இலங்கை அரசாங்கத்தினால் எந்தவித தீர்வும் கிடைக்காது என்ற அடிப்படையிலேயே சர்வதேச விசாரணையை வலியுறுத்தி தொடர்ச்சியாக போராட்டங்களை மேற்கொண்டு வரும் வகையில் தங்களுடைய உறவுகளை சாட்டி பல நிறுவனங்கள் தவறான வழியில் பிரசாரங்களை செய்வதோடு வெளிநாடுகளில் இருந்து வருகின்ற நிதிக்காக தங்களுடைய தேவைகளுக்காக தங்களுடைய உறவுகளை பிழையான பாதைக்கு இட்டுச் செல்வதாக அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

குறிப்பாக மக்களை தொடர்ந்து தவறான முறையில் வழிநடத்தி அவர்களுடைய இரத்த மாதிரிகள் பெற்ற சம்பவங்களும் இடம்பெற்றிருப்பதாகவும் இவ்வாறாக தங்களை தவறாக பயன்படுத்துகின்றனர். நிறுவனங்கள் தொடர்பாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களை அவதானமாக இருக்கின்ற அவர்கள் உங்களிடம் வருகின்ற போது அந்த தகவல்களை காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கத்திற்கு அறியப்படுத்துமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை தொடர்ச்சியாக கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் ஒரு தொகுதி உலர் உணவுப் பொருட்களும் நேற்றைய தினம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. (2-281)

# தென்னை சார் விரிவாக்கல் நிகழ்ச்சித்திட்டங்கள் முலைத்தீவில்

(முல்லைத்தீவு)

தென்னைப்பயிர்ச்செய்கை சபையின் பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் தலைமையில் கடந்த 14 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணி வரை கருநாட்டுக்கேணி, கொக்குத்தொடு வாய், கொக்குளாய் வடக்கு, கொக்குளாய் தென்கிழக்கு, மூங்கிலாறு வடக்கு, மூங்கிலாறு தெற்கு போன்ற பிரதேசங்களில் தென்னைப் பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும் முகமாக தென்னை சார் விரிவாக்கல் நிகழ்ச்சித் திட்டங்கள் நடை பெற்றன.

இந் நிகழ்வில் பணணைத்திட்டமிடல் உத்தி யோகத்தர் மற்றும் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் தென்னைப் பயிர்ச் செய்கை யாளர்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந் நிகழ்வில் அதிகளவான தென்னைப் பயிர்ச்செய்கையாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மேலும் கருவண்டுத் தாக்கம், செவ்வண்டுத்தாக்கம், மைற்றா தாக்கம் தொடர்பான பிரச்சினைகளை முன்வைத்தனர். இதற்கு பதிலளித்த முகாமையாளர் இது தொடர்பாக விழிப்புணர்வு விரிவாக்கல் நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்வதாக கூறினார்.

இதைத்தொடர்ந்து கருவண்டுத் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் மொனோகுரோட்டபொஸ் பயன்படுத்தும் முறைகள் பற்றியும் செய்முறைப்பயிற்சியும் வழங்கப்பட்டன. மேலும் கற்பகதரு கடன் திட்டங்கள் தொடர்பான விளக்கங்களும் வழங்கப்பட்டன. மேலும் நோய் தொடர்பான பிரச்சினைகளுக்கு தாம் ஒளிப்படக்காட்சிகள் மூலம் விரிவாக்கல் நிகழ்சிகளை நடத்துவதாகவும் கூறினார். (2)

# வீதி செப்பனிடும் பணிக்காக பறிக்கப்பட்ட பொருட்களால் பயணிப்போருக்கு இடைஞ்சல்

(இயக்கச்சி)

இயக்கச்சி கோயில் வயல் மற்றும் சங்குத்தார் வயல் ஆகிய கிராமங்களுக்கும் இடைப்பட்ட பிரதான வீதியோரத்தில் வீதியின் இரு மருங்கிலும் பல மீற்றர் தூரத்திற்கு கருங்கல், சல்லி, கிரவல் மணல் என்பன பல மாதகாலமாக பறிக்கப்பட்டு வீதி வேலை செய்வதற்கு தயாரான நிலையில் காணப்படுகின்றது. இந் நிலையில் அவ் வீதியூடாக பயணிப்போர் பல்வேறு இடர்பாடுகளைச் சந்திப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

இயக்கச்சியின் கோயில் வயல் மற்றும் சங்குத்தார் வயல் ஆகிய கிராமங்களுக்கு இடைப்பட்ட பிரதான வீதியில் இவ்வாறு வீதி வேலைக்கான பொருட்கள் பறிக்கப்பட்டு பல மாதங்கள் கடந்த நிலையில் காணப்படு



கின்றன.

இதனால் வீதிப் போக்குவரத்தில் ஈடுபடுபவர்கள் பல்வேறு இடர்பாடுகளை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

இரவு நேரங்களில் இவ் வீதியூடாக போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்கள் விபத்திற்கு உள்ளாகக்கூடிய சாத்தியங்கள் காணப்படுகின்றது.

இதற்கு மேலாக இந்த வீதி வேலைப் பொருட்கள் எந்த வீதி செப்பனிடுவதற்கு கொண்டுவரப்பட்டது என மக்கள் கேள்வியை முப்பும் அதேநேரம் ஏன் இவ்வளவு நாளும் வீதி வேலை இடம்பெறவில்லை எனவும் இப் பகுதி மக்கள் கேள்வியெழுப்புகின்றனர்.

எனவே இந்த வீதி வேலைப் பொருட்கள் கோயில் வயல், சங்கத்தார் வயல் வீதி யோரத்தில் காணப்படுவதனால் அவ் வீதியானது பச்சிலைப்பள்ளி பிரதேசசபைக்கு உட்பட்ட வீதியாகும். எனவே குறிப்பிட்ட பிரதேச சபையினர் மக்களின் போக்குவரத்தில் ஏற்படும் பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டும் வீதிவேலைப் பொருட்கள் பல மாதகாலமாக கிடப்பிலேயே கிடப்பதனாலும் அப் பொருட்கள் எந்த வீதி திருத்தத்திற்கு பறிக்கப்பட்டதோ அவ் வீதியை விரைவாக திருத்தம் செய்ய உடன் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-64)

# வவுனியா பொலிஸ் உதவி பொறுப்பதிகாரிக்கு எதிராக பொலிஸ் ஆணைக்குழுவில் முறைப்பாடு


(குருமன்காடு)

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா அலுவலகத்தின் விசாரணை ஒன்றிற்கு அழைக்கப்பட்டு ஒத்துழைப்பு வழங்காமை மற்றும் ஒழுக்கம் தொடர்பாக கருத்திற்கொண்டு செயற்படாமையை கண்டறிந்த இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வவுனியா அலுவலகம் வவுனியா பதில் தலைமை பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு எதிராக பொலிஸ் ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரியும் சட்டத்தரணியுமான ஆர். எல். வசந்தராஜா தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் வவுனியாவிலிருந்து இளைஞன் ஒருவரும் யுவதி ஒருவரும் புசல்லாவை சென்று சட்டபூர்வமாக காதல் திருமணம் செய்து கொண்டனர். குறித்த யுவதி கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக முறையற்ற விதத்தில் வழக்குத்தாக்கல் செய்த வவுனியா பதில் தலைமை பொலிஸ் பொறுப்பதிகாரியை கடந்த 14 ஆம் திகதி வியாழக்கிழமை வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலகத்திற்கு விளக்கமளிக்க வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் அங்கு சென்ற பதில் தலைமை பொலிஸ் பொறுப்பதிகாரி விசாரணைக்கு முகம் கொடுக்காமலும், ஒழுக்கம் தொடர்பான விடயங்களையும் பின்பற்ற தவறியமையையும் கண்டறிந்த இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வவுனியா அலுவலகம் அவருக்கு எதிராக பொலிஸ் ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்றினை மேற்கொள்ளவுள்ளதாக வவுனியா அலுவலகத்தின் விசாரணை அதிகாரியும் சட்டத்தரணியுமான ஆர். எல். வசந்தராஜா மேலும் தெரிவித்துள்ளார். (2-250)





கிளிநொச்சி கரைச்சி புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலயத்தின் ஆண்டு உற்சவ பொங்கல் எதிர்வரும் 21ம் திகதி நடைபெறவுள்ள நிலையில் நேற்று முன்தினம் விசேட அபிசேக பூசைகள் நடைபெற்று பிரம்பு வழங்கும் நிகழ்வு சிறப்பாக நடைபெற்று பாரம்பரிய முறைப்படி மீசாலை புத்தூர் சந்தியில் ப ண்டமரவடியிலிருந்து மடைப்பண்டம் எடுத்து வருவதற்கு செல்வதற்காக நேற்று முன்தினம் பிற்பகல் 4 மணியளவில் மாட்டு வண்டிகளில் ஆலயத்தொண்டர்கள் சென்றதைப் படங்களில் காணலாம். (படங்கள்:-கண்டாவளை செய்தியாளர்)

## மூன்று மாதங்களுக்கு மின்சார கட்டணம் தொடர்பில்

## கிளிநொச்சியில் இறுக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டாம்

## அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவிப்பு

(பரந்தன்)

**மின்சார கட்டணம் தொடர்பில், அடுத்து வரும் மூன்று மாதங்களுக்கு கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மக்களுக்கு இறுக்கமான கடைப்பிடிப்பை மேற்கொள்ள வேண்டாம் என மின்சக்தி மற்றும் தொழில் அபிவிருத்தி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.**





மின்சக்தி மற்றும் தொழில் அபிவிருத்தி அமைச்சர் ரவி கருணாநாயக்க நேற்று முன்தினம் கிளிநொச்சி விஜயம் மேற்கொண்டிருந்தார். கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் அமைச்சர் கலந்து கொண்டிருந்தார்.

பூநகரி பகுதியில் புதிதாக அமைக்க திட்டமிடப்பட்டுள்ள காற்றாலை மின் உற்பத்தி நிலையம் தொடர்பான கலந்துரையாடல் அமைச்சரின் தலைமையில் இடம் பெற்றது.

குறித்த கலந்துரையாடல் அமைச்சர் ரவி கருணாநாயக்க தலைமையில் கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெற்றது.

இதன்போது, கிளிநொச்சி மாவட்டத்தில் மின் கட்டணம் உரிய முறையில் கணிக்கப்படாது அதிக கட்டணத்தை ஒரே தடவையில் செலுத்துமாறு மக்களை பணித்து மின் துண் டிப்பு இடம்பெறுகின்றமை தொடர்பில் அமைச்சரிடம் வினவப்பட்டது.

குறித்த விடயம் தொடர்பில் தான் ஆராய்வதாகவும், எதிர்வரும் மூன்று மாதங்களுக்கு இந்தப் பிரதேசத்தில் உள்ள மக்களுக்கு இவ்வாறான இறுக்கமான கடைப்பிடிப்பை மேற்கொள்ள வேண்டாம் என அமைச்சர் இதன்போது அதிகாரிகளுக்கு பணித்தார்.

இக் கலந்துரையாடலில் அமைச்சர நிசாத் பதியுதீன், கற்றாலை மின் உற்பத்தி சபையின் தலைவர், முன்னாள் வடமாகணசபை உறுப்பி னர் த.குருகுலராஜா, பிரதேச சபை தவிசாளர்கள், கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், பூநகரி பிரதேச செயலர் திணைக்களங்களின் அதிகாரிகள், படையினர் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர். (2-312)

## ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் கடமைகளைப் பொறுப்பேற்பு

(பனிக்கன்குளம்)



முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளராக நேற்று முன்தினம் தனபாலசிங்கம் அகிலன் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவானது மிக நீண்ட நாட்களாக பிரதேச செயலாளர் இன்றி இயங்கிய நிலையில், நேற்று முன்தினம் பிரதேச செயலாளர் தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார். அதனடிப்படையில் யாழ்ப்பாண மாவட்ட பிரதித் தேர்தல் ஆணையாளராக கடமையாற்றிய தனபாலசிங்கம் அகிலன் பிரதேச செயலாளராக கடமையை பொறுப்பேற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (2-281)

## சிறுவர் பாதுகாப்பு சுவரொட்டி நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பம்




(மன்னார்)

மன்னார் மாந்தை மேற்கு சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி பிரிவினரால் பிரதேச செயலகத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான சுவரொட்டி நிகழ்ச்சித் திட்டம் "நாட்டின் பிள்ளை வளத்தை பாசத்துடன் பராமரிப்போம்" எனும் தொனிப்பொருளில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி திணைக்கள அதிகாரிகள், அலுவலகர்கள், பொலிஸ் அதிகாரிகள், பொதுமக்கள், வாகன சாரதிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-285)




## உலக நீர் தினத்தை முன்னிட்டு

## நீர்ப்பட்டியல் பிரச்சினைகளை தீர்வு காண்பதற்கு வாடிக்கையாளர் தினம் அறிமுகம்

(குருமன்காடு)

உலக நீர் தினத்தை முன்னிட்டு வவுனியாவில் வாடிக்கையாளர் தினம் எனும் இலகு சேவையை நீர்ப்பாசனத் திணைக்களம் வழங்கியுள்ளது.

குறித்த வாடிக்கையாளர் தின நிகழ்வு நேற்று நடைபெற்று இன்றும் நீர்ப்பாசன திணைக்களத்தின் மாவட்ட பொறியிலாளர் அலுவலகத்தில் இடம்பெறும்.

2019 ஆம் ஆண்டு உலக நீர் தினத்தை முன்னிட்டு வாடிக்கையாளர்களின் நீர்ப்பட்டியல் சார்ந்த பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்வுகளை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் இவ் வாடிக்கையாளர் தினம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்போது வாடிக்கையாளர்களின் முறைப்பாடுகளை ஏற்றுக் கொள்ளல், முறைப்பாடுகளுக்குரிய தீர்வுகளை விரைவாக பெற்றுக் கொடுத்தல், வாடிக்கையாளர்களின் நீர்ப்பட்டியல் சார்ந்த பிரச்சினைகளை தீர்த்து வைத்தல் என்பன தொடர்பாக கவனம் செலுத்தப்படுகின்றது. (2-250)

## ஊர்திப்பவனி வவுனியாவை சென்றடைந்தது

## இன்றைய மாபெரும் பேரணியில் அணிதிரளுமாறு முல்லைத்தீவில் பல்கலை.மாணவர்கள் அழைப்பு



(பனிக்கன்குளம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் இன்று முன்னெடுக்கப்படவுள்ள "நீதிக்காய் எழுவோம்" என்ற மாபெரும் மக்கள் எழுச்சிப் பேரணியில் அனைவரையும் அணி திரளுமாறு முல்லைத்தீவில் வைத்து பல்கலைக்கழக மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இன்று 16ஆம் திகதி நடத்தப்ப டவுள்ள மாபெரும் எழுச்சிப் பேரணிக்கு வலுச் சேர்க்கும் முகமாக யாழ்.பல்கலைக் கழகத்தில் இருந்து ஆரம்பிக்கப் பட்ட வாகனப் பேரணியானது கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்கள் ஊடாக மீண்டும் யாழ். பல்கலைக்கழகத்தை நேற்று வந்தடைந் தது.

அந்தவகையிலேயே குறித்த வாகன அணி நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சென்றடைந்து முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடு, உடையார்கட்டு, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, முள்ளியவளை, ஒட்டுசுட்டான், நெடுங்கேணி ஆகிய பகுதிகளின் ஊடாக வவுனியாவைச் சென்றடைந்துள்ளது.

குறித்த நகர்ப்புகுதிகளில் மக்களுக்கு தெளிவு படுத்தும் முகமாக மக்களை பேரணிக்கு அழைக்கும் முகமாக துண்டுப்பிரசுரங்கள் வழங்கப்பட்டதோடு அனைத்து தரப்பினரையும் இன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற இருக்கின்ற மாபெரும் எழுச்சிப் பேரணியில் கலந்துகொண்டு தமிழர்களுக்கான நீதி கிடைப்பதற்காக ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-281)

# பாரதம்

## பாலியல் கொடூரங்கள்; தமிழகத்தின் தலைகுனிவு



பொள்ளாச்சியில் நடந்த பாலியல் வன்முறையும் கடந்த ஆறேழு ஆண்டுகளாக இருநூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் இப்படி பாலியல் வன்முறைக்கு பலியாக்கப் பட்டிருக்கிறார்கள் என்ற செய் தியும் ஒட்டுமொத்த தமிழகத்தையும் பதைப்பதைப்பில் ஆழ்த்தியிருக்கிறது. குற்றவாளிகளின் வலைப் பின்னல், அரசியல் கட்சித் தொடர்புகளின் பின்னணி என்று அடுத்தடுத்து வரும் செய்திகள் மக்களை மேலும் மேலும் அதிர்ச்சிக்குள்ளாக்குகின்றன. பெண்ணடிமைக்கு எதிரான போராட்டங்களைப் பல்வேறு நிலைகளில் தொடர்ந்து நடத்தி, இன்றைக்குப் பெண் கல்வியிலும் பாலினச் சமத்துவத்திலும் தேசத்திற்கே முன்னோடியாக இருக்கிறோம் என்று ஒருபுறம் நாம் பெருமை பேசிக்கொண்டிருக்கும் நிலையில்தான் மறுபுறம் இப்படியான மாபெரும் சறுக்கல்களையும் எதிர்கொள்கிறோம். பெண்கள் குறித்த, பெண்ணுடல் குறித்த உள்மன விகாரங்களின் உச்சம் இது.


பாலியல் சீண்டல்கள், வன்புணர்வு முயற்சிகள், நம்பிக்கைத் துரோகங்கள் என்ற அளவில் இதுவரை பாலியல் கொடுமைகளை எதிர்கொண்டிருந்த பெண்களுக்கு இது அடுத்தகட்ட கொடு மையாக முளைத்திருக்கிறது. அவர்களை அந்தரங்கமாகப்படம் பிடித்து, அதைக் காட்டி மிரட்டி பாலியல் வல்லுறவுக்குள் ளாக்கி, அதையும் படமாக்கி பணம் பறிப்பது - கூட்டு வல்லுறவுக்குப் பயன்படுத்துவது, வன் முறைக்கும் உள்ளாக்குவது என்பது. தமிழ்நாட்டின் சகல திசைகளிலிருந்தும் 'அவர்களை சும்மாவிடக்கூடாது' என்ற வார்த்தைகள் ஏன் இன்று குற்றவாளிகளுக்கு எதிராக ஒலிக்கின்றன என்றால், அவ்வளவு பெரிய மனக்கொதிப்பை இச் சம்பவம் ஏற்படுத்தியிருக்கிறது. ஆனால், அரசின் அமைப்புகள் - குறிப்பாக கோவை மாவட்டக் பொலிஸார் இந்த விடயத்தை அணுகும் விதம் இச்சம்பவத்தின் தீவிரத்தையே அவர்கள் உணரவில்லையோ என்ற கேள்வியையே எழுப்புகிறது.

ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு இச்சம்பவத்தில் தொடர்பிருப்பதாகச் சொல்லப்படும் நிலையில், தாங்கள் தரப்பில் குற்றமிழைத்தோர் இருப்பின் அவர்களை உடனடியாகக் கட்சியைவிட்டு நீக்குவதும், குற்றவாளிகள் மீது கடும் நடவடிக்கை எடுப்பதுமே ஆளுங்கட்சி செய்ய வேண்டிய முதல் வேலை. அப்படி இல்லாதபட்சத்திலும் குற்றவாளிகள் - அவர்கள் எந்த அர சியல் பின்னணியில் இருந்தாலும், அவர்கள் பின்னே குற்றவலையின் தொடர்பில் இருப்பவர்கள் அனைவரையும் கைது செய்வதன் மூலமாக, அவர்கள் மீது பாரபட்சமற்ற கடுமையான நடவடிக்கை எடுப்பதன் மூலமாக தன்னுடைய தொடர்பின்மையை நிரூபிக்க வேண்டும். மாறாக, எதிர்க்கட்சிகளை வசைபாடுவதன் மூலமாகவும் பாதிக்கப்பட்ட பெண்களின் குடும்பங்களுக்கு அழுத்தம் கொடுப்பதன் மூலமாகவும் குற்றச்சாட்டுகளி லிருந்து ஆளும் தரப்பு தன்னை விடுவித்துக்கொள்ள முடியாது. ஒருவேளை இதில் ஆளுங்கட்சியினர் யாருக்கும் தொடர்பில்லை என்றாலும்கூட இப்படியான ஒரு சம்பவம் நடக்கையில், அதை அணுகும்போது பாதிக்கப்பட் டோர் மீதான அரசின் பரிவு அதில் மிக மிக முக்கியமானது என்பதை இங்கே அழுத்தம் திருத்தமாகச் சொல்ல வேண்டி யிருக்கிறது. இந்த இடத்தில் எதிர்க்கட்சிகளுக்கும் சொல்ல ஒரு செய்தி இருக்கிறது - சமூக அவலத்தைச் சுட்டிக் காட்டுவதும் அரசியலாக்குவதும்தான் எதிர்க் கட்சிகளின் கடமை என்றாலும் கூட, அடிப்படையில் இது உயிர்களோடும் உணர்வுகளோடும் சம்பந்தப்பட்ட பிரச்சினை - பாதிக்கப்பட்ட பெண்களை மேலும் பாதிப்புக்குள்ளாக்கிவிடக் கூடாது என்பதை அவர்கள் மறந்துவிடக்கூடாது. எத்தகைய சூழலிலும் பாதிக்கப்பட்டவர்கள் பகடைக்காய்கள் ஆக்கப்பட்டு விடக் கூடாது. ஒட்டுமொத்த சமூகமும் ஆத்ம பரிசோதனை செய்துகொள்ள வேண்டிய ஒரு தருணம் இது.

**பெண்ணை வெறும் உடலாக மட்டுமே பார்ப்பதிலிருந்தும், ஆணின் தவறுகளை ஏதோ ஒரு வகையில் நியாயப்படுத்துவதிலிருந்தும் விடுபடாத வரை இத்தகைய கொடூரங்களிலிருந்து நம் சமூகம் விடுபடவே முடியாது. பாதிக்கப்பட்டவர்களின் கண்ணீருக்கு நியாயம் கிடைத்தாக வேண்டும் என்றால், வீடுகளிலிருந்து மாற்றங்கள் தொடங்க வேண்டும். கடுமையான தண்டனைகள், பிரசாரங்கள் வழி அரசு இதற்கான முனைப்பை உருவாக்க வேண்டும்!**

-த ஹிந்து ஆசிரியர் தலையங்கம்-

## மேம்பாலம் இடிந்து விபத்து; ஆறு பேர் பரிதாபமாகப் பலி!



(மும்பை)

மகாராஷ்டிரா மாநிலம், மும்பை சத்ரபது ரயில் நிலையத்தின் அருகே நடை மேம்பாலம் இடிந்து விழுந்த விபத்தின் உயிரிழப்பு ஆறு ஆக அதிகரித்துள்ளது.

குறித்த சம்பவத்தில் 3 பெண்கள் உட்பட 6 பேரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

மேலும் இச்சம்பவத்தில் படுகாயமடைந்த 36 பேரில், சிலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளமையால் உயிரிழப்புகள் அதிகரிக்கக் கூடுமென அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

மகாராஷ்டிரா மாநிலம் மும்பை சத்ரபதி ரயில் நிலையத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

நடை மேம்பாலம் திடீரென இடிந்து விழுந்தமையால் அதன் கீழ் சென்ற பலர் அதற்குள் சிக்கிக் கொண்டனர். அதனை அடுத்து பொலிஸார் மற்றும் மீட்புக் குழுவினர் சம்பவ இடத்துக்கு விரைந்து இடிபாடுகளை அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

குறித்த பாலம் கட்டப்பட்டு 35 ஆண்டுகளாகி பழுதான நிலையில் காணப்பட்டுள்ளது. ஆனால் அதனை புனரமைக்கும் நடவடிக்கையை ரயில்வே நிர்வாகம் மேற்கொள்ளாமல் அலட்சிய போக்கில் இருந்தமையே விபத்துக்கு காரணமென குற்றச்சாட்டு எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

## பெரும் தொழிலதிபர்களின் கைப்பொம்மையே மோடி



### ராகுல் காந்தி சாடல்

(கேரளா)

பெரும் தொழிலதிபர்களின் விடயத்திற்கு செவி சாய்க்கும் பிரதமர் நரேந்திர மோடி சிறு வணிகர்களை கவனத்தில் கொள்வதில்லையென காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி சாடியுள்ளார்.

கேரளாவில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடும்போதே ராகுல் காந்தி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது,

விவசாயிகள், மீனவர்கள் மற்றும் சிறு வணிகர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை குறித்து மோடி அதிக கவனம் செலுத்துவதில்லை.

ஆனால் பெரும் தொழிலதிபர்கள் கூறும் விடயங்களை உடனடியாக கவனத்திற் கொண்டு அதனை தீர்க்கும் நடவடிக்கையிலும் அவர் ஈடுபடுகின்றார்.

அந்தவகையில் நான் மோடியை போன்று பொய்யான வாக்குறுதிகளை ஒருபோதும் மக்களுக்கு வழங்கியதில்லை.

மேலும் என்னால் உறுதியாக மக்களுக்கு வழங்க முடியுமென்ற விடயங்களை மாத்திரமே பேசுகின்றேன். அதனை நான் நிகழ்த்தும் உரையில் அவதானிக்கலாம்.

இதேவேளை தற்போதைய மத்திய அரசில், தொழிலதிபர்களான அனில் அம்பானி மற்றும் நிரவ் மோடிக்குத்தான் செல்வாக்கு அதிகம். அவர்கள் எதனை விரும்புகின்றார்களோ அதனை உடனடியாக நிறைவேற்ற முடிகின்றது.

ஆனால் மீனவர்கள், விவசாயிகள் ஆகியோரை மத்திய அரசு தொடர்ச்சியாக புறக்கணித்து வருகின்றது என ராகுல் காந்தி மேலும் தெரிவித்துள்ளார். (7)

## மசூதியில் ச...

## பொதுமக்...

### உயிர் தப்பிய ...

(வெலிங்கடன்)

நியூசிலாந்தின் கிறிஸ்ட் சர்ச் நகரில் உள்ள ஒரு மசூதியில் நேற்று நண்பகலில் மர்ம நபர்கள் திடீரென நுழைந்து கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள். இதில் பலர் கொல்லப்பட்ட நிலையில், முதல் கட்டத் தகவலில் 30 பேர் உயிரிழந்ததாக தெரியவந்துள்ளது.

இந்த துப்பாக்கிச் சூடு நடந்த மசூதிக்கு தொழுகைக்காக பங்களாதேஷ் கிரிக்கெட் அணியினர் செல்ல முயன்றபோது, இந்தத் தாக்குதல் நடந்தது. அவர்கள் அங்கிருந்து தப்பி ஓடி அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்கள்.

நியூசிலாந்தின் கிறிஸ்ட் சர்ச் நகரில் டீன்ஸ் அவ் பகுதியில் ஹெக்லி பார்க் அருகே மிகப் பெரிய மசூதி இருக்கிறது. இந்த மசூதியில் நேற்று வெள்ளிக்கிழமை என்பதால், நண்பகல் தொழுகை நடந்தது. ஏறக்குறைய 200இற்கும் மேற்பட்டோர் தொழுகை நடத்திக் கொண்டிருந்தனர்.

அப்போது, திடீரென நுழைந்த மர்ம நபர் ஒருவர் தொழுகை நடத்திக் கொண்டிருந்தவர்களை நோக்கி துப்பாக்கியால் கண்மூடித்தனமாக சுடத் தொடங்கினார். இதனால், தொழுகையில் ஈடுபட்டிருந்த மக்கள் பலர் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள அலறி



யடித்துக்... கள். பல... ஆனால்... டங்கள்... பார்த்த...

இ... உள்ள... சூடு நட... தெரிவி...

இந்த... கொல்ல... தெரிவி... தாக்குத... எண்... என்று...

கிறி... சூழல் நி... களை... அனுப்ப...

## பொள்ளாச்சி பா... கடும் தண்டனை...

### ராமதாஸ் அறிக்கை...




(பொள்ளாச்சி)

பொள்ளாச்சி பாலியல் விவகாரத்தில் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டுமென பா.ம.க.நிறுவுனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார். ராமதாஸ் நேற்று வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவ்வறிக்கையில் அவர் மேலும் கூறியுள்ளதாவது,

# வெளிநாடு

## சரமாரியாகத் துப்பாக்கிச்சூடு
## மக்கள் 40 பேர் உயிரிழப்பு
### ய பங்களாதேஷ் கிரிக்கெட் அணியினர்



யடித்துக் கொண்டு வெளியே ஓடினார்கள். பலர் தரையில் படுத்துக்கொண்டனர். ஆனால், துப்பாக்கிச் சூடு 10 முதல் 15 நிமிடங்கள் வரை நீடித்ததாக அதை நேரில் பார்த்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதைப் போன்று கிறிஸ்ட் சர்ச்சில் உள்ள மற்ற மசூதிகளிலும் துப்பாக்கிச் சூடு நடந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டில் 30 பேர் கொல்லப்பட்டதாக முதல் கட்டத் தகவல் தெரிவிக்கிறது. ஆனால், மிகப்பெரிய தாக்குதலாக இருக்கிறது என்பதால், பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கிறிஸ்ட் சர்ச் நகரில் பதற்றமான சூழல் நிலவுவதால், பாடசாலை கல்லூரிகளை மூடி யாரையும் வெளியே அனுப்ப வேண்டாம் என்று பொலிஸார் எச்சரித்துள்ளனர். மேலும், பாடசாலை சென்ற குழந்தைகளை அழைத்து வர பெற்றோர்கள் வெளியேற வேண்டாம் என்று எச்சரித்துள்ளனர்.

இதுகுறித்து பொலிஸார் தரப்பில் கூறுகையில், "இந்த பதற்றமான சூழலை சமாளிக்க முடியும். ஆனால், பதற்றம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. எத்தனை இடங்களில் இதுபோன்று துப்பாக்கிச் சூடு நடக்கிறது எனத் தெரியவில்லை. கிறிஸ்ட் சர்ச் நகரில் கடைகள், வணிக வளாகங்கள், நூலகம் அனைத்தையும் மூட உத்தரவிட்டுள்ளோம்" என மேலும் தெரிவித்தார்.

இதற்கிடையே துப்பாக்கிச் சூட்டை நேரில் பார்த்த ஒருவர் கூறுகையில், "துப்பாக்கிச் சத்தம் கேட்டதும் நான் திரும்பிப் பார்த்தபோது என் மனைவி குண்டு காயம் பட்டு தரையில் விழுந்தார். குழந்தைகள் மீதும் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. ஆனால், என் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள நான் என்மீது உடல்களை போட்டுக்கொண்டு தப்பித்தேன். துப்பாக்கிச் சூடு நடத்தியவர் இராணுவ உடை அணிந்திருந்தார். மசூதியில் எங்கு பார்த்தாலும் இரத்தமாக இருந்தது" எனத் தெரிவித்தார்.

இதற்கிடையே பங்களாதேஷ் கிரிக்கெட் அணி வீரர்கள் இந்த மசூதிக்கு தொழுகைக்காகச் சென்றனர். ஆனால், துப்பாக்கிச் சூடு குறித்து கேள்விப்பட்டதும் அங்கிருந்து வெளியேறி உயிர் தப்பினார்கள்.

இது குறித்து பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் செய்தித் தொடர்பாளர் ஜலால் யூனுஸ் கூறுகையில், "அனைத்து கிரிக்கெட் வீரர்களும் மசூதிக்கு தொழுகைக்கு செல்வதற்காக சொகுசுப் பேருந்தில் மசூதிக்கு வந்தோம். மசூதி வளாகத்துக்குள் சென்றபோது துப்பாக்கிச் சூடு நடந்ததால் அங்கிருந்து ஓடி உயிர்தப்பினோம். யாருக்கும் எந்த விதமான காயமும் ஏற்படவில்லை. பாதுகாப்பாக இருக்கிறார்கள். ஆனால், அதிர்ச்சியில் உறைந்துள்ளார்கள். வீரர்கள் தங்கியுள்ள ஹோட்டலுக்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது" எனத் தெரிவித்தார். (7)

## ஆப்கானிஸ்தானில் வான்வழித் தாக்குதல் 17 கிளர்ச்சியாளர்கள் பலி; 12 பேர் காயம்

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் இராணுவத்தினர் நடத்திய வான் வழித் தாக்குதலில் 17 கிளர்சியாளர்கள் கொல்லப்பட்டுள்ளதாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தான் நட்டில் காஸ்னி மாகாணத்தில் உள்ள கெரோ மாவட்டத்தில் தலிபான் பயங்கரவாதிகள் ஆதிக்கம் நிறைந்த பகுதியாகக் கருதப்படுகிறது.

இந்த பகுதியில் பதுங்கியுள்ள தலிபான் பயங்கரவாதிகளைக் குறிவைத்து ஆப்கானிஸ்தான் இராணுவத்தினர் நேற்று முன் தினம் வியாழக் கிழமை வான் வழியாக தாகுதல் நடத்தினர்.

இந்த தாக்குதலில் அந்த பகுதியில் இருந்து 17 கிளர்ச்சியாளர்கள் உயிரிழந்தனர். மேலும் 12 பேர் படுகாயம் அடைந்துள்ளனர் என அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். (7)

## மலேசியாவில் நச்சு இரசாயனக் கசிவு 2,700 இற்கும் மேற்பட்டோர் பாதிப்பு

(கோலாலம்பூர்)

மலேசியாவில் உள்ள பாசிர் கூடாங் எனும் பகுதியில் ஏற்பட்ட நச்சு இரசாயனக் கசிவால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 2,700 இற்கும் மேல் அதிகரித்துள்ளது.

பாசிர் கூடாங்கில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நச்சு இரசாயனக் கசிவு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் வெளியான தகவல்களின் படி 7 பேர் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர். பாசிர் கூடாங்கின் இரண்டு வைத்தியசாலைகளில் கிட்டத்தட்ட 1,900 பேருக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது. ஏனைய வைத்தியசாலைகளில் மேலும் சுமார் 860 பேருக்குச் சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.


நச்சு இரசாயனக் கசிவால் பலரும் மருத்துவச் சிகிச்சை நாடி வருகின்றனர். சுவாசப் பிரச்சினை, மயக்கம், வாந்தி போன்றவற்றால் அவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாசிர் கூடாங்கில் உள்ள 111 பாடசாலைகளையும் மூடுவதற்கு மலேசியக் கல்வி அமைச்சு உத்தரவிட்டுள்ளது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள 92 பாலர் பாடசாலைகளும் மூடப்பட்டுள்ளன.

அங்கு அவசரநிலையை அறிவிப்பதற்கான தேவை இல்லை என அந்நாட்டுப் பிரதமர் மகாதீர் முகமது கூறியிருக்கிறார். இருப்பினும் நிலைமையைக் கவனமாகக் கையாளுமாறு அனைத்துத் தரப்பினரையும் அவர் கேட்டுக் கொண்டார்.

பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

## பாலியல் குற்றவாளிகளுக்கு
## னை வழங்கப்பட வேண்டும்
### கையில் வலியுறுத்து



"கோவை மாவட்டம், பொள்ளாச்சி பகுதியில் இடம்பெற்ற பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறை சம்பவம் அனைவரையும் பெரும் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.

இவ்வாறு இழிவான செயற்பாட்டில் ஈடுபட்ட குற்றவாளிகளுக்கு கடூழிய தண்டனை வழங்க வேண்டியது அவசியமாகும்.

மேலும் இத்தகைய கொடூர செயற்பாட்டில் ஈடுபட்ட மனித மிருகங்களையும், பாதிக்கப்பட்ட பெண்களின் ஏமாளித்தனத்தையும் காரணம் காட்ட முடியாது. மாறாக சமுதாயமும் முழுப் பொறுப்பை ஏற்க வேண்டும்.

அதாவது நம்மை சுற்றி இடம் பெறும் நல்ல, தீய விடயங்கள் குறித்தும் பெண் குழந்தைகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த நாம் தவறியுள்ளோம். இது சமூகத்தின் தவறாகும்.

அந்தவகையில் பள்ளிகள், கல்லூரிகள், அலுவலகங்கள் மற்றும் அவற்றுக்கு சென்று திரும்பும் வழியில் நடக்கும் நிகழ்வுகள் அனைத்தையும் பெண் பிள்ளைகள் தயக்கமின்றி குடும்பத்தினரிடம் கூறும் சூழல் உருவாக வேண்டும்.

அதேபோன்று பெண் குழந்தைகளுக்கு கட்டுப்பாட்டை கற்றுக்கொடுக்க வேண்டும் என்று கூறும் பெற்றோர், ஆண் குழந்தைகளுக்கு ஒழுக்கத்தையும் கண்ணியத்தையும் கற்றுக்கொடுக்க வேண்டும்" என ராமதாஸ் மேலும் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார். (7)

## அமைதிக்கான நோபல் பரிசுக்கு 16வயது சிறுமியின் பெயர் பரிந்துரை

(கோபன்ஹேகன்)

நோர்வேயின் இந்த ஆண்டிற்கான அமைதிக்கான நோபல் பரிசுக்கு சமூக ஆர்வலரான 16 வயது சிறுமி பரிந்துரை செய்யப்பட்டுள்ளார்.

சுவீடனைச் சேர்ந்த பாடசாலை மாணவி கிரேட்டா தன்பெர்க் (வயது -16). இவர் கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் பருவநிலை மாற்றம் மற்றும் உலக வெப்பமயமாதலை தடுக்க வேண்டி, சுவீடனின் பாராளுமன்ற வாசலில் சிறிய பதாகையுடன் அமைதியான போராட்டத்தில் தனி ஆளாக ஈடுபட்டார்.

மேலும் உலகத் தலைவர்கள் அனைவரிடமும் பருவநிலை மாற்றத்தினால் ஏற்படும் விளைவுகளை புறக்கணிக்க வேண்டாம் என கேட்டுக் கொண்டார். இதன் காரணமாக அனைத்து உலக அரசியல் தலைவர்கள் மற்றும் இளைஞர்களின் கவனத்தை ஈர்த்தார்.




இதையடுத்து கிரேட்டா கடந்த ஆண்டு ஜனவரி மாதம் தாவோஸ் பகுதியில் நடைபெற்ற ஐ.நா. பருவநிலை உச்சி மாநாட்டில் கலந்து கொண்டு உரையாடினார்.

அவரது பேச்சு உல கின் அனைத்து இளைஞர்களுக்கும் ஒரு சிறந்த எடுத்து காட்டாக விளங்குகிறது.

இது மட்டுமின்றி கடந்த ஆண்டு முதல் ஒவ்வொரு வெள்ளியும் பாடசாலைக்கு செல்வதை விடுத்து பாராளுமன்ற வாசலில் உலக வெப்பமயமாதலை தடுக்க வேண்டி அமைதியான முறையில் தொடர்ந்து போராட்டம் மேற்கொண்டார்.

இந்நிலையில் அமைதிக்கான நோபல் பரிசுக்கு சிறுமி கிரேட்டா தபெர்க் பரிந்துரை செய்யப்பட்டுள்ளார். இது குறித்து கிரேட்டா கூறுகையில், 'அமைதிக்கான நோபல் பரிசுக்கு நான் பரிந்துரைக்கப்பட்டதை மிகுந்த கௌரவமாகவும் ஆசியாகவும் கருதுகிறேன்' என கூறினார். (7)

# அரசியல் தேவையை நிறைவேற்றிக்கொள்ள முன்னெடுக்கப்பட்ட போராட்டம் நியாயமற்றது

## காரியவசம் காட்டம்



(கொழும்பு)

தமது அரசியல் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக 43 இலட்சம் மாணவர்களுடைய கல்வி நடவடிக்கைகளைப் பாதிக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட போராட்டம் நியாயமற்றது எனக் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

கல்வி அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதிபர். ஆசிரியர்களுடைய பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டு. அதற்காக விசேட குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவிடம் இவர்களின் பிரச்சினை தொடர்பில் ஆராயும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எனவே அவர்கள் அது தொடர்பில் ஆராய்ந்து. அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து எமக்கு அறிவிப்பார்கள். அதன் பின்னரே நாம் இவ்விடயம் தொடர்பில் தீர்மானங்களை மேற்கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## "அரசாங்கம் ஒழிக்கப்பட வேண்டும்"

# மாணவர்களின் கோரிக்கை நியாயமானது

### தயாசிறி ஆதரவு



(கொழும்பு)

போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களின் கோரிக்கை நியாயமானது. ஆனால் அரசாங்கத்தின் செயற்பாடுகள் முறையற்றது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்தார்.

போராட்டத்தை மேற்கொள்ளும் மாணவர்கள் மீது முறையற்ற விதத்தில் தாக்குதல்களை மேற்கொள்ளும் அரசாங்கம் ஒழிக்கப்பட வேண்டும்.

பேச்சுவார்த்தைகளுக்கு கூட வாய்ப்பு வழங்காமல் தான்தோன்றித்தனமாக செயற்படும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க செயற்பாடுகள் கண்டிக்கத்தக்கது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் பொதுஜன பெரமுன - சுதந்திரக் கட்சிக்குமிடையில் இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# வரவு-செலவுத்திட்ட வாக்கெடுப்பின் போது சு.கவின் செயற்பாடு கவலைக்குரியது

## மகிந்த அணி வருத்தம்

(கொழும்பு)

அரசாங்கத்தால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாக்கெடுப்பின் போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி செயற்பட்ட விதம் கவலைக்குரியது என மகிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சொய்ஷா தெரிவித்தார்.

அத்தோடு ஜனாதிபதி வேட்பாளர் சுதந்திரக் கட்சி சார்ந்தவராக இருக்க வேண்டும் என்று அக் கட்சியினர் குறிப்பிடுகின்றனர். ஆனால் நாட்டு மக்கள் பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் ஜனாதிபதியாக வர வேண்டும் என்று குறிப்பிடுகின்றார்கள். மக்களின் தீர்ப்பே வெற்றி பெறும் என ரஞ்சித் சொய்ஷா தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வரவு - செலவுத் திட்டத்தின் மீதான இரண்டாம் வாக்கெடுப்பு இடம்பெறும் போது எவ்வாறான விடயங்களை முன்னிலைப்படுத்தி எதிர்ப்புக்களைத் தெரிவிக்க வேண்டும் என்று கடந்த 11 நாட்களாக முக்கிய கலந்துரை யாடல்கள் இடம்பெற்றன. எமது தரப்பினர் முறையாகவே செயற்பட்டனர்.

வரவு- செலவுத் திட்டத்தின் மீதான இரண்டாம் வாக்கெடுப்பின் போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் செயற்பட்ட விதம் பொருத்தமற்றதாக காணப்படுகின்றது. வாக்கெடுப்பிற்கு கலந்து கொள்ளாமல் இருந்தமை சுதந்திரக் கட்சி சார் தீர்மானமாகும். இருப்பினும் அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து வரவு-செலவுத் திட்டத்திற்கு எதிர்ப்பை வெளிப்படுத்திருந்தால் அது அரசாங்கத்திற்குப் பாரிய நெருக்கடியை ஏற்படுத்தியிருக்கும். பொதுஜன பெரமுனவிற்கு எவ்வித பாதிப்புக்களும் ஏற்படாது. தேர்தலின் ஊடாக நாங்கள் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை காணப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சிவனொளிபாதமலைக்குச் சென்ற கம்போடிய பௌத்த பிக்கு மரணம்



(ஹற்றன்)

கம்போடியாவைச் சேர்ந்த 91 வயதுடைய பௌத்த பிக்குவான சம்பிரான் நெட் என்பவர் சிவனொளிபாதமலைக்குச் சென்ற நிலையில் ஏற்பட்ட மார்பு வலியின் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

இந்தப் பௌத்த பிக்கு கடந்த 10 ஆம் திகதி சிவனொளிபாத மலையில் தரிசனம் செய்துவிட்டு வந்த நிலையில் ஏற்பட்ட திடீர் மார்பு வலியால் அவர் நல்ல தண்ணியிலுள்ள அவசர சிகிச்சைப் பிரிவிற்குக் கொண்டு செல்லப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்காக மாற்றப்பட்டார்.

இந்நிலையில் மஸ்கெலியா வைத்தியசாலையில் வைத்திய அதிகாரிகளால் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட பின்னர் அவரை மேலதிக சிகிச்சைக்காக கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

அங்கு அவருக்கு சிகிச்சையளிக்கப்பட்ட நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளதாக வைத்திய அதிகாரி தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## விஞ்ஞானிகள்

பிரான்ஸ் நாட்டில் ஒரு பள்ளத்தாக்கு. அங்கே பாறை மேல் ஒரு வயதானவர் அதிகாலையிலேயே போய் அங்கே இருந்திடுவார். அந்த வழியால் போகிறவர்கள் பெரியவர் இருப்பதையும் பார்க்கிறார்கள். "பாவம் இந்தப் பெரியவருக்கு என்ன கஷ்டமோ தெரியவில்லை... இந்த நேரத்தில் இங்கே வந்து இருக்கிறார்'' என்று நினைக்கிறார்கள். இருந்தாலும் பெரியவராச்சே என்று "வணக்கம்" சொல்லி விட்டுப் போகிறார்கள். அவர்கள் தோட்டங்களுக்குப் போய் வேலை செய்துவிட்டு வேலை முடிந்ததும் மாலை வீட்டுக்கு திரும்பி வரும் போது பார்த்தால் அப் போதும் அந்தப் பெரியவர் அதே இடத்தில் இருந்தார். என்னத்தையோ உற்றுக் கவனித்துக்கொண்டே இருந்தார்.

"ஐயோ பாவம்... இவருக்கு என்ன ஆச்சோ தெரியவில்லை... கடவுள்தான் இவரைக் காப்பாற்ற வேண்டும்" என்று சொல்லிக்கொண்டே அவர்கள் போகிறார்கள்.

சரி...அந்தப் பெரியவர் யார் என்று நினைக்கிறீர்கள். அவர் பெயர் பேபர் (J.H.Faber) பூச்சியியல் மேதை. பத்துவருடம் தொடர்ந்து பூச்சிகளினுடைய நடவடிக்கையைக் கூர்ந்து கவனித்துக் கொண்டு வந்தார். இயற்கையினுடைய இரகசியங்களை தெரிந்து கொள்வதற்காக அவர் பொறுமையாக உழைத்தார். பெரிய பெரிய உண்மைகளையெல்லாம் கண்டுபிடித்தார்.

பூச்சிகளுக்கு உள்ளுணர்வு இருக்கிறது... பகுத்தறிவு இருக்கிறது... பட்டறிவும் இருக்கிறது... பூச்சிகளினுடைய சில நடத்தைகளில் இருந்து அதைப் புரிந்துகொள்ள முடிகிறது என்று சொன்னார்.

இதையெல்லாம் ஆராய்வதற்காகத்தான் அவர் அப்படி ஒரே இடத்தில் உட்கார்ந்திருக்க வேண்டியதாகப் போய்விட்டது! ஆனால் அந்த வழியாகப் போகிறவர்கள் எல்லாம் அவரைப் பார்த்துவிட்டு வேறு விதமாக நினைக்க ஆரம்பித்து விட்டார்கள்...

இதை எதற்குச் சொல்கிறேன் என்றால்...ஒவ்வொருவரும் ஒவ்வொரு உண்மையை கண்டுபிடிப்பதற்காக எவ்வளவு கஷ்டப்பட்டு இருக்கிறார்கள் என்று தெரிந்து கொள்வதற்காகத்தான். விஞ்ஞானிகள் ஒன்றை கண்டுபிடித்துவிட்டால் உடனே கர்வம் வந்துவிடுவதும் இல்லை... தோல்வி கண்டால் துவண்டு போவதும் இல்லை ... யாராவது கேலி செய்தால் அதைக் கண்டுகொள்வதுமில்லை.

லண்டன் நகரத்து றோயல் சங்கத்தில் ஒரு கூட்டம் நடந்து கொண்டிருக்கிறது. ஒரு விஞ்ஞானி தான் கண்டுபிடித்த ஒன்றைப் பற்றி பேசுகிறார். ஒரு கம்பிச்சுருளுக்கு உள்ளே ஒரு காந்தத்தை நுழைத்தால் கம்பிச்சுருளில் மின்னோட்டம் உண்டாகிறது என்கிறார். சில சோதனைகளும் செய்து காட்டுகிறார். கூட்டத்தில் யாருக்கும் இதில் ஆர்வம் இல்லை. இதுமாதிரி இடங்களில் சத்தம் போட்டால் நாகரிகமாக இருக்காது என்பதனால் அவர் பொறுமையாக, சகித்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறார். எதையாவது பேசித் தொலைக்கட்டும் என்று சொல்லி! அந்த விஞ்ஞானி பேசி முடித்தார். கூட்டத்தில் இருந்த ஒரு அம்மா எழுந்து ஒரு கேள்வி கேட்டார்... ''அதுசரி... நீங்கள் இவ்வளவு தூரம் உங்கள் கண்டுபிடிப்பைப் பற்றி சொல்கிறீர்கள்...எல்லாம் சரி. நீங்கள் சொன்னது எல்லாம் உண்மை என்றே வைத்துக்கொள்வோம். அதனால் மக்களுக்கு என்ன பிரயோசனம்?''என்றார். அந்த விஞ்ஞானி அதற்காகத் தயங்கவில்லை... உடனே பதில் சொன்னார், "அம்மையாரே! புதிதாக ஒரு குழந்தை பிறக்கின்றது... அந்த குழந்தையால் மக்களுக்கு என்ன பிரயோசனம் என்று உங்களால் சொல்ல முடியுமா?" என்று கனிவாகக் கேட்டார். அந்தச் சமயத்தில் இங்கிலாந்து நாட்டுப் பிரதமராக இருந்தவர் கிளாட்ஸ்டன் (1809-1898). சிறந்த நிர்வாகி. பெரிய அறிஞர். இருந்தாலும் அவரும் சந்தேகப்பட்டார். அவரும் இந்த விஞ்ஞானியினுடைய விரிவுரையைக் கேட்டுவிட்டு ''இதனால் எல்லாம் ஏதாவது பலன் உண்டா?'' என்றுதான் கேட்டார் அலட்சியமாக! "ஏன் இல்லை.. கூடிய சீக்கிரத்தில் நீங்கள் மின்சாரத்துக்கு வரி போட்டு வருமானம் பெறக்கூடிய காலம் வரலாம்!" என்றார் அந்த விஞ்ஞானி. அவர் சொன்னது பலித்தது. இன்றைக்கு எல்லா நாடும் மின்சாரத்தை உற்பத்தி செய்கிறது, விற்கிறது, வரி போடுகிறது. ஆனால் 19 ஆம் நூற்றாண்டில் லண்டன் நகரத்து பிரமுகர்களுக்கும் பிரதமருக்கும் கூட "மைக்கேல் பாரடே"யின் மின்காந்த விளைவு ரொம்பவும் அற்பமான ஒரு விடயமாகத்தான் தெரிந்திருக்கிறது. அதனால் எதையும் அற்பமாக நினைத்து விடக்கூடாது. அலட்சியமாக நினைத்துவிடக்கூடாது. சில வீடுகளில் இப்போதும் கூட சில குடும்பத் தலைவர்கள் ஒருமாதிரியாக இருப்பார்கள்... அதைப் பார்த்துவிட்டு குடும்பத்தலைவிகள் சந்தேகப்படக்கூடாது. அது ஏதாவது ஆராய்ச்சியாகக்கூட இருக்கலாம். அவர்களுடைய ஆராய்ச்சி மனப்பான்மை வளர்வதற்கு இவர்கள் தான் உதவியாக இருக்கவேண்டும்.

ஒருத்தர் அப்படித்தான், "நான் புதிதாக எதையாவது கண்டு பிடிக்கலாம் என்று ஆசைப்படுகிறேன்!" என்று வீட்டில் சொன்னார். அந்த அம்மா... "நீங்கள் புதிதாகக் கண்டுபிடிப்பது அப்புறம் இருக்கட்டும். முதலில் இதைக் கண்டுபிடியுங்கள்!" என்று சொல்லிக் கொண்டே கொஞ்சம் அரிசியைக் கொண்டுவந்து அவர் முன்னால் கொட்டி, "இதில் உள்ள கல்லையெல்லாம் கண்டுபிடித்துத் தனியாக எடுங்கள்!" என்றார். அப்படி சொல்லிவிட்டு அவர் கோவிலுக்குப் போய் விட்டு அரை மணி நேரம் கழித்து திரும்பி வந்தார். இந்த ஆள் அப்படியே அசையாமல் அந்த அரிசியைக் கூர்ந்து கவனித்துக்கொண்டே உட்கார்ந்திருந்தார். கல்லைப் பொறுக்கவே இல்லை! "ஏன் இன்னும் சும்மாவே உட்கார்ந்திருக்கிறீர்கள்!" என்று சத்தம் போட்டார் அந்த அம்மா. அவர் பொறுமையாக... "அதுசரி.. நீ இதை இங்கே கொண்டு வந்து கொட்டி, கல்லைப் பொறுக்கச் சொன்னாய்... நானும் தயாராகத்தான் இருந்தேன். ஆனால் ஒரு விடயத்தை என்னிடம் சொல்வதற்கு மறந்து அவசரமாகக் கோயிலுக்குப் போய்விட்டாய்" என்றார். எது என்று கேட்டார் அந்த அம்மா. ''இதில் எது கல்... எது அரிசி என்று என்னிடம் சொன்னாயா?'' என்று கேட்டார் அந்தக் குடும்ப விஞ்ஞானி!

# அமெரிக்காவுடனான வடகொரியாவின் பேச்சுவார்த்தைகளை முறிக்கக்கூடும்

## வடகொரியா அதிரடி அறிவிப்பு

(பியாங்யாங்)

வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன். அமெரிக்காவுடனான அணுவாயுத பேச்சுவார்த்தை களை முறிக்கக் கூடும் எனவும் மீண்டும் ஏவுகணை பரிசோ தனை மேற்கொள்ளப்படும் என வும் வடகொரிய வெளிநாட்டு அமைச்சர் சொய் சுன்ஹூய் தெரிவித்துள்ளார். அமெரிக்க மற்றும் வடகொரியாவுக் கிடையே முரண்பாடுகள் தோன் றியுள்ள நிலையில் அவர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், கொரிய தீப கற்பத்தில் இருந்து அணுவா யுதங்களை ஒழிக்க தங்க வாய்ப் பொன்று வழங்கப்பட்டிருந்தது. எனினும் அந்த வாய்ப்பு சரிவர பயன்படுத்திக் கொள்ளப்பட வில்லை.

வடகொரியாவின் பிரதான Yongbyon அணுவாயுதத்





தளத்தை தகர்க்க வடகொரிய இணங்கி இருந்தது. எனினும் பொருளாதார தடைகளை நீக்க முடியாதென தெரிவித்து அமெ ரிக்கா பேச்சுவார்த்தைகளை குழப்பியுள்ளது. தலைவர் கிம் அணுவாயுத பரிசோதனை தொடர் பாக மிக விரைவில் உத்தியோக பூர்வமாக அறிவிப்பார் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# மாலைதீவில் கைது செய்யப்பட்டுள்ள இலங்கை மீனவர்களை படகுகளுடன் விடுவிக்க அரசாங்கம் நடவடிக்கை

(கொழும்பு)

மாலைதீவில் கைது செய்து, தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 25 இலங்கை மீனவர்களை யும் விடுவிப்பதற்கான சகல நட வடிக்கைகளையும் எடுத்தி ருப்பதாக கடற்றொழில் மற் றும் நீரியல் வளத்துறை அபி விருத்தி இராஜாங்க அமைச் சர் திலிப் வெதஆரச்சி தெரிவித் தார்.

எதிர்வரும் சில நாட்களில் அந்த மீனவர்களை இலங்கை க்கு அழைத்து வர முடியும் என்றும் அவர் தெரிவித்தார். படகு உரிமையாளர்கள் மற்றும் கைதான மீனவர்களின் உற வினர்கள் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அபிவிருத்தி அமைச்சில் இராஜாங்க அமைச் சரை சந்தித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

குறித்த மீனவர்களை விடு விப்பதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேசி இராஜ தந்திர மட்டத்தில் செய்ய முடியு மான நடவடிக்கைகளை எடுத்தி ருப்பதாக அவர் தெரிவித்தார். அதன்படி பிரதமர் மாலைதீவு உயர்மட்டத்தினருடன் மேற் கொண்ட பேச்சுவார்த்தையில் இலங்கை மீனவர்கள் இரு நாட்களில் விடுவிக்கப்பட இணக் கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் திலிப் வெதஆரச்சி மேலும் தெரிவித்தார்.

மீனவர்களுடன் அவர்களது படகுகளும் விடுவிக்கப்பட நடவ டிக்கை எடுக்கப்படவுள்ளது. அத்துடன், அண்மையில் அரபுக் கடல் பிரதேசத்தில் மீன் பிடிக்கச் சென்று இலங்கை திரும்பிக் கொண்டிருந்த மீனவர்களை மாலைதீவு அதிகாரிகள் இரு படகுகள், பிடிக்கப்பட்ட மீன்கள் மற்றும் மீன்பிடி உபகரணங் களுடன் கைது செய்தமை குறிப் பிடத்தக்கது. (இ-7)

# மேன்முறையீட்டை வாபஸ் பெற்ற ஷேய்க் கொலைக் குற்றவாளிகள்

(கொழும்பு)

பிரிட்டிஷ் பிரஜையான குராம் ஷேய்க் கொலை வழக்கில் குற்ற வாளிகளாகக் காணப்பட்டவர் கள் கொழும்பு மேல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக செய்த மேன்முறையீட்டை வாபஸ் பெற்றுள்ளனர். தங்களுக்கு வழங்கப்பட்ட 20 வருட கால சிறைத் தண்டனையை அவர் கள் அனுபவிக்கப்போகிறார்கள்.

2011 டிசெம்பரில் குராம் ஷேய்க்கை கொலை செய்ததற் காகவும் அவரின் ரஷ்ய காத லியை பாலியல் வன்கொடுமை க்கு உள்ளாக்கியமைக்காகவும் வழங்கப்பட்ட தண்டனைக்கு எதிராக செய்த மேன்முறையீ ட்டை வாபஸ் பெற்ற குற்றவா ளிகளில் தங்காலை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சம்பத் விதானபத்திரவும் ஒருவர்.

கடந்த செவ்வாய்க்கிழமை மேன்முறையீட்டு மனு விசா ரணைக்கு எடுக்கப்பட்டபோது குற்றவாளிகள் தங்களது சட்டத் தரணி ஊடாக வாபஸ் பெறுவ தற்கான விருப்பத்தை வெளியிட் டனர். அதை அனுமதித்த மேன் முறையீட்டு நீதிமன்றம் குற்றவா ளிகளுக்கு கொழும்பு மேல் நீதி மன்றம் தீர்ப்பு வழங்கிய திக தியில் இருந்து அவர்கள் தண் டனையை அனுபவிக்க வேண் டும் என்று உத்தரவிட்டது.

ஆனால், வழக்கின் நான் காவது பிரதிவாதி மாத்திரம் மேன்முறையீட்டை வாபஸ் பெற வில்லை. அவரது மேன்முறை யீட்டு மனு எதிர்வரும் ஜூலை 24 விசாரணைக்கு எடுக்கப்ப டும். (இ-7)

# இலங்கை தொடர்பில் புதிய குழப்பங்களை ஐ.நாவில் ஏற்படுத்தத் தேவையில்லை-ஹர்ஷ

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரி மைகள் பேரவையில் அரசாங் கம் கால அவகாசம் கோருகி ன்றமை குறித்து எவரும் புதிய குழப்பங்களை ஏற்படுத்த தேவை யில்லையென அமை ச்சர் ஹர்ஷ டி சில்வா தெரி வித்துள்ளார்.

வரவு - செலவுத்திட்ட நிதி ஒதுக்கீடுகள் மீதான குழுநிலை விவாதத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கலந்து கொ ண்டு கருத்து தெரிவிக்கும் போதே ஹர்ஷ டி சில்வா இதனை குறி ப்பிட்டுள்ளார். அவர் மேலும் கூறியுள்ளதாவது.



"ஆரம்பித்த வேலைகளை நிறைவு செய்வதற்கு கால அவ காசம் தேவைப்படுகின்றது. இதனை அனைவரும் முதலில் உணர்ந்துகொள்ள வேண்டும்.

இதேவேளை மின்சாரக் கதி ரைக்குள் தன்னை சிக்க வைப் பதற்கான முயற்சிகள் இடம் பெறுகிறதென கடந்த ஜனாதிபதி தேர்தலில் முன்னாள் ஜனா திபதி மகிந்த ராஜபக்ஷ தெரி வித்தார். ஆனால் அத்தகைய தொரு நிலைமையை தற்போது நாம் மாற்றியுள்ளோம்.

அந்தவகையில் நாட்டில் வாழும் அனைத்து மக்களும் சம உரிமைகளை பெற்று, சிறந்த வாழ்க்கையை வாழ வேண டுமென்பதை நோக்காக கொண்டே எமது செயற்றிட்டங்களை முன் னெடுத்து செல்கின்றோம்" என ஹர்ஷ டி சில்வா மேலும் தெரி வித்துள்ளார். (இ-7)

# தனக்குத் தானே தீ வைத்தவர் வைத்தியசாலையில் அனுமதி

(கொழும்பு)

கொழும்பு பிட்டகோட்டைப் பகுதியில் அமைந்துள்ள தேசிய சேவையாளர் அலுவலகம் முன் பாக 62 வயதுடைய நபர் ஒருவர் தனக்கு தானே தீவைத்துக் கொண் டுள்ளார்.

தீவைத்துக்கொண்டவர் தீக் காயங்களுக்குள்ளான நிலை யில் வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண் வருகின்றனர். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 80 | 70 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 90 | 80 | 100 |
| பச்சைமிளகாய் | 200 | 160 | 180 | 160 | 200 |
| தக்காளி | 60 | 50 | 40 | 35 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 150 | 120 | 90 | 60 |
| கோவா | 40 | 30 | 60 | 50 | 60 |
| கரட் | 80 | 80 | 80 | 80 | 120 |
| பூசணி | 40 | 30 | 40 | 35 | 40 |
| புடோல் | 80 | 60 | 60 | 70 | 60 |
| வாழைக்காய் | 80 | 80 | 120 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 100 | 80 | 80 | 60 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 70 | 60 | 80 |
| பாகற்காய் | 140 | 140 | 120 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 100 | 60 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | — | 40 | 80 |
| பயற்றங்காய் | 120 | 120 | 80 | 70 | 100 |
| லீக்ஸ் | 80 | 100 | 80 | 70 | 120 |
| பீற்றூட் | 60 | 50 | 60 | 30 | 80 |
| கறிமிளகாய் | 100 | 100 | 100 | 80 | 120 |
| முருங்கைக்காய் | 500 | 450 | 400 | 400 | 400 |
| போஞ்சி | 120 | 120 | 80 | 70 | 120 |
| கத்தரிதம்புள்ள | 80 | 70 | — | 50 | 80 |
| கீரை-1பிடி | 40 | 40 | 30 | 20 | 30 |
| தேசிக்காய் | 80 | 80 | 70 | 70 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 45 | 35 | 35 | 30-50 |
| இராசவள்ளி | 140 | 140 | 140 | 100 | 120 |
| வெங்காயப்பூ | 80 | 70 | 70 | 70 | 120 |
| முள்ளங்கி | 40 | 60 | 60 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 20 | 15 | 40 |
| வல்லாரை | 15 | 60 | 30 | 15 | 35 |
| ஈரப்பலா | — | — | — | 100 | 80 |

# துறைமுக அதிகார சபைக்கு சேவையாற்றி ஓய்வுபெறுவோருக்கு தங்க நாணயம்



(கொழும்பு)

இலங்கைத் துறைமுக அதி கார சபைக்கு அளப்பரிய சேவை யாற்றி ஓய்வு பெறும் ஊழியர்க ளுக்கு தங்க நாணயம் வழங் கிக் கௌரவிக்கும் நிகழ்வு மஹா பொல துறைமுக மற்றும் கடல் சார் கல்லூரியில் நேற்று முன்தி னம் அமைச்சர் சாகல ரத்நாய க்க தலைமையில் இடம்பெற் றது.

இலங்கைத் துறைமுக அதி கார சபையின் மனிதவளப் பிரி வின் மூலமாக அதிகார சபை யின் 35 ஆம் ஆண்டு பூர்த்தி யிலிருந்து ஓய்வுபெறும் ஊழியர் களுக்கு தொடர்ச்சியாக தங்க நாணயங்கள் வழங்கப்படும் எனவும் அமைச்சர் சாகல ரத் நாயக்க தெரிவித்தார். (இ-7)

# உயர் வள்ளுவமும் கம்பவாரிதியும்

உலகப்பொதுமறை உயரத்தில் நின்று. உயர் வள்ளுவமாய்ச் சிறகை விரிக்கிறது.

சென்னையின் சேப்பாக்கம் வாரிதியாரின் வள்ளுவத் தமிழால் நன்னடை நயக்கும் நளினமும் பெறுகிறது.

ஆம் கடந்த ஜனவரி மாத ஐந்தாம் திகதியில் வாரிதியார் வகுப்பில் இணையக் கிடைத்தது.

"கற்கக் கசடற" வள்ளுவத் தொடர் தழுவி கசடறுக்கக் கற்கிறார்கள் உணர முடிந்தது.

கற்பவர் யார்? நோய் நீக்கும் மருத்துவர்கள், கணனித்துறை வல்லுநர்கள், தொழில்நுட்பத் திறன் பயின்றோர், சட்ட நூல் படித்தவர்கள், வர்த்தக மேன்மையாளர், தமிழ்த்துறை சார்ந்தோர் சிலர்... என வகுப்பின் பெருக்கம் நானூறின் மேல் எனலாம்.

இருபத்தைந்து வயதிற்கும் ஐம்பதிற்கும் உட்பட்டோர் கற்கின்றவர்களில் பெரும்பங்கைப் பெற்றிருந்தார். கல்லூரிகளில் பயிலும் மாணவரும் மிகக் குறைவே.

இவர்கள் ஏன் கற்கிறார்கள்? "அறம் நிற்கக் குறள் கற்க" என்கின்ற மகுட வாக்கியத்தோடு அறம்தனை அகம் சேர்க்கும் முயற்சியாகக் கற்கிறார்கள்.

"எச்சிலை தனிலே எறியும் சோற்றுக்குப் பிச்சைக்காரர் சண்டை றோட்டிலே" என்று " பராசக்தி" படப்பாடலில் வரும் தமிழ்நாடு இன்றில்லை.

அரைநூற்றாண்டு காலத்தில் கல்வியும் பொருளாதாரமும் சட்டங்களும் கவின் கலைகளும் விஞ்ஞான மருத்துவ வளர்ச்சிகளும் இங்குள்ளோர் அண்ணாந்து நோக்கிப் பெருமூச்சு விடுமளவிற்கு ஆரோகண கதியில் அகலித்து எழுந்துள்ளன.

ஏழு கோடியை மக்கள் தொகை தாண்டினாலும் ஏறுவரிசையில்தான் வளர்ச்சிகளும் செல்கின்றன.

ஆயினும் மேற்குலகத் தழுவல்களும் பொருள்முதல் வாதங்களும் அறத்தைத் தள்ளுகின்ற அர்த்தமற்ற நினைப்புக்களும் இங்குள்ள தமிழ் நிலம் போல் அங்கும் இருப்பதுண்மை.

அவர்களில் சிலரேனும் அறமுணர்ந்து நிற்கிறார்கள். அதற்கு ஆதாரம் "உயர்வள்ளுவம்"- வகுப்பு

ஈரல் மருத்துவத்தின் உலகத் தரப்பிரிப்பில் ஆறாம் நிலைகொண்ட "முகமட்ரேலா" என்பவரும் புற்றுநோய் மருத்துவர் பிரியா இராமச்சந்திரன் என்பவரும் " உயர்வள்ளுவ" வகுப்பிற்கு அனுசரணையாளர் எனின் அவர்களின் தேடல் ஆச்சரியம் தருகிறது.

இங்கு நாம் உயர்தர வகுப்பின் விஞ்ஞானப் பிரிவு சென்றால் தமிழ் நூல்கள் கற்பதையோ, தமிழ்ச் சான்றோர் உரைத்ததையோ தரக்குறைவாய் நினைக்கின்ற வழிகளில் நடக்கின்றோம்.

மாணவர்கள் மட்டுமன்றிக் கற்பிக்கும் ஆசிரியர், சமூகத்தின் பெரியவர்கள் எனப்பலரும் இந்த மனநிலையில்தான் கல்வியில் நடைபயில்கின்றனர். அறச்சிந்தனைகள் அருகியே போகின்றன.

அவர்களின் தேட்டம் அதிசயம் தருகின்றது. ஆரவார யுகத்தினுள்ளும் அமைதி சிலர் பேணுகின்றார். அற நினைப்பே அமைதியென்று திருக்குறளை நாடுகின்றார்.

கம்பவாரிதி இலங்கை ஜெயராஜைத் தங்கள் குருவாக்கித் தமிழை அவாவுகிறார். அதற்காகப் பெருந்தொகைப் பொருள் கொடுத்து குறட்பொருளைத் தேடுகின்றார்.

இந்த இடத்தில் கம்பவாரிதி பற்றிச் சிலவற்றைச் சிந்திக்கலாம்.

கம்பவாரிதி இ.ஜெயராஜ் தமிழ் மண்ணின் தவப்புதல்வன் எனக் கூறத்தக்கவர். ஆறுமுகநாவலரின் பின் யாழ். தமிழைத் தமிழ்நாட்டில் பேசவைப் போரில் இன்று முதலிடம் பெறுபவர்.

தமிழ் கற்றோர் இங்கு, பேச்சு மேடைக்காய் கைகட்டி நின்றபோது பேச்சுப் பொருளைக் கலைப்பொருளாக்கி விலை பெற்று உயர்ந்தவர் இவர்.

பண்டிதமணி போன்றோர் விதி விலக்காய் நடந்தாலும் தமிழ்ப் பண்டிதர் பலர் தாழ்ந்தே நடந்தனர். இதனால்தான் பல்கலையைச் சேர்ந்தோரும் பரகசித்துச் சிரித்தனரோ? அவர்களுக்கே வெளிச்ச மிது!

தமிழ்ப்பொழிவை மிடுக்காக்கிச் சபையை அகப்படுத்தி தரணியெங்கும் புகழ்பூத்த தமிழ் வல்லார் வாரிதியார்.

சொற்பொழிவில் மட்டுமன்றிச் சொல்லொழுக்கை நிலைநிறுத்திக் கட்டுரைகள் எழுதுவதிலும் கதைகள் வடிப்பதிலும் காலத் தேவைக்காய்க் கருத்துக்களை விரிப்பதிலும் தேவையானபோது கவிதைகள் எழுதுவதிலும் கூட இவரின் ஓங்கிய புலமையை அறிஞர்கள் அறிவர்.

கம்பன் விழாவைக் கச்சிதமாய் எடுப்பதிலும் கனதியான பல நிகழ் வுகளை முகிழ்ப்பதிலும் இலக்கியத் தரம் வாய்ந்த அறிஞர்களை இணைப்பதிலும் அரை நூற்றாண்டுகாலம் உயர்ந்தே தான் நிற்கின்றார்.




அறிஞர்கள் பலர் உலகில் தம் சரிதை கூறியுள்ளார்.

மகாத்மா காந்தி- சத்திய சோதனை; உ.வே.சுவாமிநாதையர்- என் சரித்திரம்; கலைஞர் கருணாநிதி- நெஞ்சுக்கு நீதி; கவிஞர் கண்ணதாசன்- வனவாசம், மனவாசம்; கவிப்பேரரசு வைரமுத்து- இதுவரை நான்... என்றவாறு பனுவல்கள் படைத்துள்ளார்.

எழுத்தாளர் ஜெயகாந்தன்- " ஓர் இலக்கிய வாதியின் கலையுலக அனுபவம்", ஓர் இலக்கியவாதியின் அரசியல் அனுபவம்" என இருநூல்கள் எழுதியுள்ளார்.

இந்த வகையில் கம்பவாரிதியும் ஆற்றல்மிகு அவர் நடையில்- " உன்னைச் சரணடைந்தேன்" என்னும் ஒரு நூல் எழுதியுள்ளார். இதனை அவர் சுயசரிதை என்று சொல்வதிலும் பார்க்க, " ஓர் ஆன்மீகவாதியின் இலக்கிய அனுபவம்" எனல் தகும். எண்ணூற்றுச் சொச்சப் பக்கம் கொண்ட பெரிய நூலாய், அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் 2016 ஆம் ஆண்டு வெளியீடாய் வந்தது இது.

இந்நூலில் இவர் எங்கெங்கு கற்றார்? எப்படிக் கற்றார்? எதையெதைக் கற்றார்? என்னென்ன செய்தார்? எவரொடு உடன் பட்டார்; எவரிடம் முரண்பட்டார்; சான்றோரும் ஆன்றோரும் எவ்வாறு உதவினர்? சரண்கொண்ட கம்பன் எதுவரை உயர்த்தினான் போன்ற பன்னூறு செய்திகளைப் பயின்றிட வைத்துள்ளார்.

கம்பன் கவிப்பெருக்கில் களிகொண்டு கனியும் இவர் வள்ளுவ சாகரத்தில் முத்தெடுக்க மூழ்கியுள்ளார். இதுவே இன்று உயர்வள்ளுவமாய்ப் பட்டை தீட்டப்படுகிறது.

பரிமேலழகரூடு வள்ளுவத்தைப் பயிற்றுவித்தவர் " வித்தகர் ஐயா" என்று, இப்போதும் தம் குருவை நினைவு கூர்ந்து நிற்பவர் கம்பவாரிதி.

வித்தகர் சொரிந்ததில்-தாம் மாந்தியதில்- சிறு துளியையே சொல்கின்றேன் என்று கலங்குமிவர் வித்தகர் இன்றிருந்தால் தன்னிறைவை இன்னும் வலுப்படுத்தியிருப்பேன் என்றும் கவல்கின்றார்.

வள்ளுவர் வகுப்பில் மீண்டும் நுழைவோம் யாம்.

கம்பவாரிதியைக் தமிழ்நாட்டுக் கழைப்பதிலும் அன்பு காட்டி நின்று அனுசரித்துக் கொள்வதிலும் செந்தில் குடும்பத்தினர், இளங்கோ குடும்பத்தினர் பணிசெய்து மகிழ்கின்றார். தாமோதரன், அருள் என மாணாக்க நண்பர்கள் பலர் நின்று உழைக்கிறார்கள்.

## ஒரு நோக்கு

தம்வேலை விடுத்து உபசரிப்பை வேலையாக்கி பணிவோடு வள்ளுவத்தைப் பயில விழைகிறார்கள். வகுப்புத் தொடங்கிவிட்டால் அமைதியாய்க் கேட்கிறார்கள்.

அறிமுகம் முடித்ததன் பின் அதிகார முறையில் திருக்குறள் தொடங்கி விடும்.

மாணவர் ஒருவரால் ஒருகுறள் இருமுறை வாசிக்கப்பட்டபின் பரிமேலழகரின் பொருட்பிரிப்புத் தெளிவாக்கப் படும்; கருத்துரையும் விளக்கமும் வாசிக்கப்பெறும்.

உரைக்கு உரை செய்து உயிர்ப்பூட்டுவதும் நிரை நிரல் காட்டி மெருகேற்ற முயல்வதும் இலக்கணக் குறிப்புக்களை இயல்பாய் ஆக்கி நின்று இலக்கியம் போலவே சுவையூட்டச் செய்வதுவும் வாரிதியின் விரிவாய் வலிவுபெற்று உயர்ந்து எழும்.

மூன்று மணித்தியால வகுப்பின் இடையில் பதினைந்து நிமிட இடைவேளை வருகிறது., அனைவர்க்கும் சிற்றுணவை அமைப்பே கொடுக்கிறது. மீண்டும் தொடங்கும் வகுப்பு முடிந்ததன் பின் அரைமணி நேரம் கேள்வி நேரம் ஆகிறது. விளங்காத பகுதிகளும் மேலதிக உசாவல்களும் கேள்விகளாய் வர விளக்கமும் நீள்கிறது.

அடுத்தும் ஓர் ஆச்சரியம் என்னவென்னின், வகுப்பு முடிந்த பின்னும் ஆசீர்வாதம் பெறுவதற்காய்- குறை நிவர்த்தி செய்வதற்காய் ஐம்பதுபேரின் மேல் வரிசையில் நிற்கின்றார்.

மரபுக் கல்விக்கு இவ்வளவு மகத்துவமா? திருக்குறளின் பற்றல் இத்துணை உயர்ந்ததுவா? இரண்டு வகுப்புக்களில் பெறுமதி விளங்கியது.

இரண்டு வருடங்களாய் முப்பத்தைந்து வகுப்புக்களில்இருபது அதிகாரம்சென்றோடி நிற்கின்ற செய்தி அறிவித்தார்.

நாங்களிங்கு உயர்தர மாணவர்க்கே, இரண்டு பாடவேளைகளுள் (80 நிமிடம்) ஓர் அதிகாரத்தை விளக்கி, பயிற்சி வைத்து மதிப்பீடும் செய்பவர்கள்.

உண்மை என்னவெனில், அவர்களங்கு வாழ்வாங்கு வாழ வள்ளுவத்தைக் கற்கிறார்கள். நாங்களிங்கு பரீட்சைக்கு விடை நிரப்பத் திருக்குறளைப் படிக்கின்றோம்.

அதனால்தான் அவர்கள் திருச்சியிலிருந்தும் கோவையிலிருந்தும் அயல் மாநிலமான புதுச்சேரியிலிருந்தும் பெருநேரப் பயணத்தில் சென்னை வந்து கற்கின்றார். மலேசியாவில் இருந்துகூட வருகின்றார் என்ற செய்தி வள்ளுவத்தின் உயர்ச்சியையும் வாரிதியின் சிறப்பினையும் ஒருசேரத் தருகின்ற மேன்மையுறு சான்றெனலாம்.

நிறைக்குமுன் மேற்குலகத்தார் மூலவளம் சுரண்டி முடிவுப்பொருள் விற்றார்கள். நாமிங்கு பல்லிளித்து விந்தைபெரும் விந்தையென்றோம். தமிழ்நாட்டார் ஜெயராஜால் தமிழ் வறுமை தீர்க்கிறார்கள். நாமோ விழியிருந்தும் குருடர்களாய் வீண்கதைகள் பேசுகின்றோம். தமிழைப் படிக்காமல் தமிழ்பற்றிப் படித்துவிட்டு தற்பெருமை கொண்டு தகுதியற்றுத் திரிகின்றோம்.

கையில் வெண்ணெய் வைத்து நெய் தேடல் மூடத்தனம். காலம் கடத்திவிட்டுக் கதறிடலும் அது போல் தான். வீண்பெருமை காட்டும்வித்து வங்களை விடுத்து பேணித்தமிழ் வளர்ப்போம். காலத்தின் கடமையிது.

**ச.மார்க்கண்டு**
**ஓய்வுநிலை ஆசிரியர்.**

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

196

இந்து ஒகன் இதுபற்றி பின்வருமாறு கூறுகின்றது.

சேர் றிட்ஜ்வே தூரதிருஷ்டியுள்ள ஒரு தலைமகனாகவும் துணிவு மிக்க நிர்வாகியாகவும் இலங்கையில் அழியா இடத்தைப் பெறுகின்றார்.

சேர். ஆதர் கோடனால் அலைக்கழிக்கும் கனவு எனத் திடமாகத் தெரிவிக்கப்பட்டதும் இரண்டு வருடங்கள் முன்னர் தான் சேர்.ஆதர் ஹவ்லொக்கினால் நடைமுறைப்படுத்த இயலாத் திட்டம் எனக் கைவிடப்பட்டதுமான புகையிரதச் சேவையின் ஒரு பகுதியைப் பெற்றெடுத்தும் மிகுதியை அமைப்பதாக வாக்குறுதியளித்தும் வடபால் மக்களின் இறவா நன்றியைச் சம்பாதித்தவர் இவர் ஆவார்.

இந்தப் பிரச்சினையையிட்டு ஒரு சாதகமான முடிவுக்கு விரைந்து வருவதற்கும் இந்த மகத்தான வடக்குப் புகையிரத சேவையை இலங்கையில் தனது நிர்வாகத்தின் போது பிரத்தியட்சமாக்குவதற்கு சேர் றிட்ஜ்வேயின் சிறப்பான திறமைகளும் போர் வீரனாக அவர் பெற்றிருந்த பயிற்சியும் அவரது பரந்த இந்திய அனுபவமும் வெகுவாகக் கைகொடுத்துள்ளன.

இதன் விளைவாக 1900 இல் வடபால் புகையிரதப்பாதை நிர்மாண வேலை ஆரம்பிக்கப்பட்டு ஏறக்குறைய ஐந்தாண்டுகளில் பூர்த்தியாயிற்று.

நிர்மாண வேலையின் முதற்கட்டமாக காங்கேசன் துறையிலிருந்து சாவகச்சேரி வரை ஏறத்தாழ 20 மைல் பூர்த்தியாக்கப்பட்டு 1902 இல் திறந்து வைக்கப்பட்டது.

சாவகச்சேரியிலிருந்து பளை வரையிலான பாதை 1902 செப்டெம்பரில் நிறைவு செய்யப்பட்டது. எஞ்சிய பாகம் 1905 ஆம் ஆண்டளவில் பூர்த்தியாகியது.

இந்த நிர்மாண வேலையின் மொத்தச் செலவு அண்ணளவாக ரூபா. 811,062.00 ஆகும்.

19 ஆம் நூற்றாண்டின் இறுதித் தசாப்தத்தில் ஏனைய புகையிரதப் பாதைகள் பூர்த்தி செய்யப்பட்டன. கொழும்பிலிருந்து சிலாபம், புத்தளம் நோக்கிக் கரையோரமாக அமைக்கப்பட்ட புகையிரதப் பாதை தென்னைப் பயிர்ச்



> “சேர் றிட்ஜ்வே தூரதிருஷ் டியுள்ள ஒரு தலைமகனாகவும் துணிவு மிக்க நிர்வாகியாகவும் இலங்கையில் அழியா இடத்தைப் பெறுகின்றார். சேர். ஆதர் கோடனால் அலைக் கழிக்கும் கனவு எனத் திடமாகத் தெரிவிக்கப்பட்டதும் இரண்டு வருடங்கள் முன்னர் தான் சேர்.ஆதர் ஹவ்லொக் கினால் நடைமுறைப்படுத்த இயலாத் திட்டம் எனக் கைவிடப்பட்டது மான புகையிரதச் சேவையின் ஒரு பகுதியைப் பெற்றெடுத்தும் மிகுதியை அமைப்பதாக வாக்குறுதியளித்தும் வடபால் மக்களின் இறவா நன்றியைச் சம்பாதித்தவர் இவர் ஆவார்”

## தமிழரின் விழிப்புணர்வும் எழுச்சியும் சமயம், பண்பாடு, மொழி சமூகம், பொருளாதாரம் (கி.பி. 1850-கி.பி. 1900)

செய்கையின் மையமாக விளங்கிய ஒரு பிரதேசத்திலிருந்து செல்லும் வசதியான தொரு பாதையாக விளங்கியது.

இதேவேளை குருநாகலுக்குச் செல்லும் வடபுகையிரதப் பாதை இதுவரை தனித்துப் போயிருந்த வடமத்திய மாகாணத்திற்கூடாகச் சென்றது.

மதவாச்சியில் இப்பாதை இரு கிளைகளாகப் பிரிந்து ஒரு பாதை தலைமன்னாருக்கு மக்களையும் பொருட்களையும் கொண்டு செல்லப் பயன்பட்டது.

வடபால் புகையிரதப் பாதையில் மாகோவிலிருந்து ஆரம்பிக்கும் திருகோணமலை, மட்டக்களப்பு புகையிரதப் பாதைகளும் அமைக்கப்பட்டன.

புகையிரதப் பாதைகளும் பிரித்தானிய குடியேற்ற அரசாங்கத்தின் புதுமையான நடைமுறைகளும் நாட்டைப் பல்வேறு வழிகளில் மாற்றின.

இவற்றுள் பிரதான தாக்கமாக இருந்தது வடபால் தமிழரையும் வன்னிப் பெருநிலப்பரப்புத் தமிழரையும் கிழக்கு மாகாணத் தமிழரையும் இணைத்தது மட்டு மல்லாது தமிழ் மக்கள் யாவரையும் இலங்கையடங்கிலும் வாழ்ந்த சிங்கள மக்களுடன் இணைத்து வந்தமையாகும். இது இலங்கை வரலாற்றில் முதற்தடவையாக நிகழ்ந்த ஒன்றாகும்.

இதன் விளைவாக இலங்கைத் தமிழர் ஏனைய சிங்களப் பிரதேசங்களுக்குச் சுதந்திரமாகப் பயணம் செய்ய வாய்ப்புக்கள் கிடைத்தன.

அவர்கள் பிரதானமாக தலைநகர் கொழும்புக்கும் மலைநாட்டிற்கும் பொருளாதார, வியாபார, தொழில் மற்றும் ஏனைய வாய்ப்புக்களைத் தேடி பெருமளவில் இடம்பெயர்ந்தனர்.

இதேவேளை வடமாகாணத்தில் சனப்பெருக்கம் கூடிய இடங்களிலிருந்த ஆயிரக்கணக்கான மக்களும் வன்னிப் பெருநிலப்பரப்பிலும் கிழக்கு மாகாணத்திலும் தமது விவசாயம், வியாபாரம் என்பவற்றை விஸ்தரிக்கும் வாய்ப்புக்களைப் பெற்றனர்.

இவர்களில் அநேகமானோர் இந்த இடங்களையே தமது தாய் நிலங்களாகக் கொண்டு அதை வரலாற்றுக் காலத்திலிருந்து குடியிருந்த மக்களுடன் நிரந்தரமாகக் குடியேறினர்.

இந்தத் தொடர்புகளும் உறவுகளும் பிரதான சிங்கள மாகாணங்களிலிருந்து பிறிதான வடக்கு-கிழக்கு வாழ் சமூகம் ஒன்றை உருவாக்க உதவின.

இச்சமூகம் தனது தமிழ் வரலாற்றை மறவாத, ஒளிமயமானதோர் எதிர்காலத்திற்காக ஏங்கி நிற்கும் ஒரு சமூகமாக மாறியது. இவ்வாறானதோர் எதிர்காலத்திற்கான தேடல் இயல்பாகவே அரசியல் தன்மை பெறலாயிற்று.

தமிழ் அடையாள வளர்நிலையிலான அரசியல் அம்சங்களை ஆராய்வதற்கு முன்னர் தமிழர் சமூகத்தின் பொருளாதார, கல்வி, தொழில் சம்பந்தமான அம்சங்களை ஆராய்ந்து இதன்வழி எவ்வாறு பொருளாதார அபிவிருத்தி அரசியலில் முன்னேற்றத்தை உருவாக்கியது என்பதைக் காண்பது அவசியமாகும்.

(தொடரும்)

# நுண்கடன்களை இரத்துச்செய்யக்கோரி மட்டக்களப்பில் மக்கள் ஆர்ப்பாட்டம்




(ஏறாவூர்)

மட்டக்களப்பில் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு "நுண்கடனிலிருந்து மீண்டெழுவோம்" என்ற தொனிப்பொருளில் அரசே பெண்களுக்கு துன்பத்தை ஏற்படுத்தியுள்ள அனைத்து நுண் கடன்களையும் இரத்துச் செய்யுமாறு கோரி பெண்கள் நேற்று முன் தினம் வியாழக்கிழமை காந்தி பூங்காவிற்கு முன்பு கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் ஏற்பாட்டில் இந்தக் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இதனையடுத்து மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயத்திற்குச் சென்ற பெண்கள் குழுவினர் மகஜர் ஒன்றை கையளித்தனர். அதில் மார்ச் 8 ஆம் திகதி சர்வதேச பெண்கள் தினமாகும். சர்வதேச மட்டத்தில் பெண்களுக்கு எதிராக நடைபெறும் வன்முறைகள், அநீதிகளுக்கு எதிராக குரல் கொடுக்கப்படும் முக்கிய நாளாகவும் இது காணப்படுகின்றது.

இதனடிப்படையில் எமது நாட்டிலும் பெண்களுக்கு எதிராக வீட்டு வன்முறைகள் பாலியல் துஷ்பிரயோகங்கள், சமூக ரீதியான ஒடுக்கு முறைகள், பொருளாதார ரீதியான பின்னடைவுகளுக்கு எதிராகக் குரல் கொடுக்கமுடியும்.

பெண்களுக்கெதிரான மனித உரிமை மீறல்கள் நாளாந்தம் நடைபெற்றுக் கொண்டிருப்பதனை நாம் அறிவோம். எனவே, இதிலிருந்து மீள்வதற்கான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி வருகின்றோம்.

இதன் தொடர் செயற்பாடாக நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் காந்தி பூங்கா முன்றலில் எழுச்சியோடு "நுண்கடன்களிலிருந்து மீண்டெழுவோம்" எனும் தொனிப்பொருளில் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டோம்.

இதனடிப்படையில் தற்போதைய நிலையில் எமது மாவட்டத்தில் அதிகமான பெண்கள் அதிக வட்டியுடனான நுண்கடன் திட்டங்களில் கடன்களைப் பெற்றுள்ளனர். இதனால் கடன் சுமை அதிகரித்து குடும்பச் சீரழிவுகளும் பெண்களின் தற்கொலைகளும் அதிகரித்து வருவது எல்லோரும் அறிந்ததே.

இவற்றைக் கருத்திற் கொண்டு அரசால் நுண்கடன்களை அடிப்படையாகக் கொண்டு இம்முறை 2019 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் பல நன்மையான விடயங்களை உள்ளடக்கியுள்ளதாக நாம் அறிகின்றோம்.

எனவே இத்திட்டங்களை எமது மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள நுண்கடனால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்கள் இனம் காணப்பட்டு அவர்களுக்கும் இத்திட்டங்களின் மூலம் நன்மை கிடைக்க ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம் எனத் தெரிவித்துள்ளனர். (இ-7)

# இரட்டை நிலைப்பாடு வேண்டாம்

## இந்துமாமன்றம் இடித்துரைப்பு

(யாழ்ப்பாணம்)

இந்த ஆண்டு சிவராத்திரி தினத்திற்கு முன்னரான ஆயத்தப் பணிகளின் போது, நீண்ட காலமாக மாந்தை வீதியின் முகப்பில் அமைக்கப்பட்டிருந்த திருக்கேதீச்சர ஆலயத்திற்கான வரவேற்பு வளைவினைச் சீர் செய்யும் நோக்கில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு இடையூறு செய்து, அவ் வளைவினைக் பிடுங்கியெறிந்து அட்டூழியம் செய்தவர்களின் செயல் தொடர்பில் அகில இலங்கை இந்துமாமன்றம் மீண்டும் தனது வன்மையான கண்டனங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

அச் சம்பவத்தின் தொடர்ச்சியாக, அச் சம்பவத்திலீடுபட்டவர்களின் புகைப்படங்களும் காணொலிகளும் சாட்சியாக வழங்கப்பட்டதன் அடிப்படையில். அந் நபர்களைக் கைது செய்யுமாறு மன்னார் மாவட்ட நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ள கட்டளையை அந்த மாவட்ட பொலிஸார் உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

எந்தவொரு தனிநபரினதும் அல்லது மத அமைப்பினதும் வழிகாட்டலில், சட்டவிரோத அட்டூழியங்களை புரிந்தவர்களை இதுவரை கைது செய்யாதது என்பது இந்த நாட்டின் சட்டத்தினையும், நீதி பரிபாலனத்தையும் நிந்தித்து, பாதிக்கப்பட்டவர்களுக்குச் செய்யும் அநீதியுமாகும் என்பதையும் சுட்டிக் காட்ட விளைகின்றோம்.

இத் துன்பியல் சம்பவம் தொடர்பில் இரண்டு மாவட்டங்களைச் சேர்ந்த இரண்டு மத குருமார்கள் வெவ்வேறு விதமான அறிக்கைகளை விடுத்துள்ளனர்.

மன்னார் மாவட்ட மத குரு விடுத்துள்ள அறிக்கையானது அச் சம்பவத்தை நியாயப்படுத்துவது போலவும், முற்று முழுதாக சம்பவத்தை திரிப்பதாகவும் அமைந்துள்ளது.

இவ்வாறு மக்களைத் திசை திருப்பும் செயல்களைக் கைவிட்டு, இந்தநாட்டில் அனைத்து மதங்களுக்கும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதைப் பற்றிப் பேசிக் கொண்டே பின்புலத்தில் தமது செயற்பாடுகள் மூலம் இந்த நாட்டில் குழப்பங்களையும் பிணக்குகளையும் ஏற்படுத்தும் பாம்பின் நாக்குப்போன்ற இரட்டை நிலைப்பாட்டையும் விட்டுவிட வேண்டும் எனவும் மீண்டும் கேட்டுக் கொள்ளுகின்றோம் என அகில இலங்கை இந்துமாமன்றம் விடுத்துள்ள அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1671

### குகன்

செல்போனில் நடந்து கொண்டேபேசினால் அது பிஸ்னஸ்... நின்று கொண்டே பேசினால் அது நட்பு.... படுத்துக்கொண்டு பேசினால் அது காதல்



### ராணி

வெறுப்பது யாராக இருந்தாலும் நேசிப்பது நீங்களாக இருங்கள்...



### ருமேஷ்

ஒன்றைப் பெறவேண்டும் என்று நினைத்து விட்டால் இறுதி வரைக்கும் போராடு, விளைவுகளையோ அதில் ஏற்படும் தோல்வி பற்றியோ கவலைப்படாதே




### திலக்

மனிதன் தான் செய்யும் தவறுகளுக்கு சிறந்த வக்கீலாகவும் மற்றவர்கள் செய்யும் தவறுகளுக்கு சிறந்த நீதிபதியாகவும் இருக்கின்றான்




### ரஞ்சன்

பேசுவது ஒரு திறமை! பேசாமல் இருப்பது பெரிய திறமை



### வசந்தன்

சிறிய விழிப்புணர்வு பெரிய பாதுகாப்பு



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# அரச காணிகளின் முகாமைத்துவம் சார்பான சட்டங்களும் அவை செயற்படும் முறைமைகளும் பகுதி-1

05

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



**அரசுக்குச் சொந்தமான காணிகளில் அத்துமீறிக் குடியேறுதலையும் பயிர் செய்தலையும் தடுக்கும் ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக இயற்றப்பட்ட ஒரு கட்டளைச் சட்டமே அரச காணிகளில் அத்துமீறல் குடியேற்றக் கட்டளைச் சட்டம் ஆகும்.**

தனிப்பட்ட உரிமையைக் கோரும் எந்தவொரு நபரும் அரசாங்க உரிமைக்கு எதிராக நிரூபித்துக் கொள்ள வேண்டிய பெரும் பொறுப்பைக் கொண்டவராக விளங்குகின்றார்.

இக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் மக்கள் தங்கள் பாரம்பரிய இடங்களுக்கான உரித்தை சான்றுப்படுத்த முடியாத நிலையில் தம் காணிகளை இழக்க வேண்டியேற்பட்டதென்பது ஒரு வேதனைக்குரிய விடயமாகும்.

இச் சட்டத்தின் கீழ் பெருந்தொகையான தனியார் காணிகள் அரச சொத்தாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

**2.0 காணி எல்லை வரையறைக் கட்டளைச்சட்டம் 1844இன் இல.1 (சட்டத் திருத்தம்- 1905இல் இல.13 1919இல் இல.28 1933இல் இல.27 1947இல் இல.08 1955இல் இல.22) (Definition of Boundaries Ordinance)**

**இலங்கைக் காணிகளின் எல்லைகளை இலகுவாக நிச்சயப்படுத்தித் தெரிந்து கொள்வதற்குரிய ஏற்பாடுகள் காணி எல்லை வரையறைக் கட்டளைச் சட்டத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.**

அரச காணிகளில் அத்துமீறல் குடியேற்றக் கட்டளைச் சட்டத்தின் கீழ் காணிகளை இழந்த மக்களின் விரக்தியை ஓரளவேனும் போக்குவதற்கும் அவர்களின் சொத்தாண்மை உரிமைகளை எடுத்துக்கூற சந்தர்ப்பம் வழங்குவதற்குமாக 1844இல் காணி எல்லை வரையறைக் கட்டளைச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இக் கட்டளைச்சட்டம் காணிகளுக்கான தமது உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு கேட்பதற்கும், காணிகளுக்கான தமது உரிமைகளை உறுதிப்பத்திரங்கள், உயில்கள் மூலம் உறுதிப்படுத்த முடிந்தவர்களுக்கு அவற்றை கொடுப்பதற்கும் சந்தர்ப்பம் வழங்குகின்றது.

**➤ அரச காணி எல்லைகளை அளவை செய்து கொள்ளல்**

காணி உரிமையாளரொருவருக்குக் காணி எல்லைகளைத் திருப்திகரமாக அறிந்துகொள்ள முடியாதெனத் தென்பட்டால் பிரதேச செயலாளர் அல்லது உதவிப் பிரதேச செயலாளர் ஊடாக இது தொடர்பில் காணியை அளவை செய்ய நில அளவையாளர் நாயகத்திடம் விண்ணப்பிக்க முடியும்.

**➤காணி எல்லைகளை அளவை செய்துகொள்ள முடியாத போது அனுசரிக்க வேண்டிய நடைமுறை**

எல்லை அமைத்தல் அல்லது மீள அமைத்தல் நடவடிக்கைகளை உரிய நபரால் அல்லது அவரால் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட நிலஅளவையாளரால் திருப்திகரமான முறையில் செய்யமுடியாதென தென்பட்டால் நிலஅளவையாளர் நாயகத்துடன் கலந்துரையாடிய பின் பிரதேச செயலாளர் அல்லது உதவி பிரதேச செயலாளர் அவ் எல்லையை முழுமையாக அல்லது பகுதியாக அளக்குமாறு அல்லது திரும்ப அமைக்குமாறு நிலஅளவையாளர் நாயகத்தைக் கோரலாம். அவ்வேளையில் அவ் எல்லையை இடுதல் அல்லது மீளஅமைத்தல் நில அளவையாளர் நாயகத்தினால் செய்யப்படல் வேண்டும். மீள் அளவைக்கான செலவீனத்தை நிலஅளவையாளர் நாயகம், அவ் அளவை உரித்தாகும் பிரதேசத்தின் பிரதேச செயலாளருக்கு அல்லது உதவிப் பிரதேசசெயலாளருக்கு உறுதிப்படுத்தி அனுப்புதல் வேண்டும் அச் சான்றிதழே ஏற்பட்ட செலவுக்கான இறுதியானதும் முடிவானதுமான சான்றாக அமையும்.

உரிய நபர் முன்கூறிய அளவைச் செலவினை, பிரதேச செயலாளருக்கு அல்லது உதவி பிரதேச செயலாளருக்குச் செலுத்துதல் வேண்டும். எனினும் குறித்த நபர் மேற்கூறியபடி செலுத்த மறுத்தால் அல்லது செலுத்துவதில் கவலையீனமாக இருந்தால் அவ்வாறு செலுத்தாமைக்கு காரணம் கூற நீதவான் ஒருவர் முன்னிலையில் சமுகமளிக்க அழைப்பாணை அனுப்பப்படலாம்.

அவ்வாறு செலுத்தாமை குறித்து உரிய நபரால் நியாயமான காரணம் மேதும் காண்பிக்க முடியாது போனாலோ அல்லது நீதவான் முன்னிலையில் சமுகமளிக்கத் தவறினாலோ முன்கூறிய அளவைச் செலவைச் செலுத்தும்படி கட்டளையிடப்பட முடியும்.

**3.0 நிலஅளவைக் கட்டளைச் சட்டம் -1866இன் இல.4 மற்றும் 1917இல் இல.2 (Land Surveys Ordinance)**

ஒரு காணியை நிலஅளவையாளர்கள் அளக்கும் போது அக்காணிக்குள் பிரவேசிக்கவேண்டும். மேலும் அக் காணியின் உரித்தாளர் யார் என்பதைச் சரிபார்த்தல் வேண்டும். இவ் வேலைகளைச் செய்யும்போது நிலஅளவையாளர்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியேற்படும். இவற்றைக் கருத்திற்கொண்டு அளவைகள் செய்யும்போது காணியின் உயில், உரிமைப்பத்திரங்கள் போன்றவற்றைப் பார்வையிடவும் காணிக்குள் பிரவேசிப்பதற்கும் நில அளவையாளர் நாயகத்திற்கு அல்லது அவரால் நியமிக்கப்பட்டவருக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் 1866 இல் நிலஅளவைச்சட்டம் (Land Surveys Ordinance) பிரகடனப்படுத்தப்பட்டது. மேலும் இச் சட்டம் நில வரைபடத்தின் மூலப்பிரதிக்கு பதிலாக நிலஅளவையாளர் நாயகம் அல்லது அவரால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட ஓர் உத்தியோகத்தரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியை வழங்கமுடியும் எனவும் படத்தில் கொடுக்கப்படும் தகவல்கள் சரியான ஆதாரம் என ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும் எனவும் கூறுகிறது. இச் சட்டம், தற்போதைய தேவைக்கேற்ப 2002 ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க நிலஅளவைச் சட்டத்தின் மூலம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

**4.0 காணிப்பதிவுக் கட்டளைச் சட்டம் -1877இன் இல.5 (Land Registration Ordinance)**

அரசு தனது காணிவளங்களின் உரிமைகளைப் பாதுகாப்பதோடு தனியார் காணிகளின் உரித்தாளர்களை ஆராய்ந்து, அக்காணிகளை நிலஅளவை செய்து சான்றிதழ் வழங்குவதற்காக காணிப்பதிவுக் கட்டளைச சட்டம் 1877 இல் கொண்டு வரப்பட்டது. இக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வெள்ளவத்தை, தெகிவளை, கிருலப்பனைப் பிரதேசங்கள் நில அளவை செய்யப்பட்டன. இச் சட்டத்தின்படி 1708 காணித் துண்டுகளைக் கொண்ட 1548 ஏக்கர் காணி மட்டுமே அளவை செய்ய முடிந்தது. அதிக செலவீடு காரணமாக மூன்றரை வருடங்களின் பின் இவ் வேலை இடைநிறுத்தப்பட்டது. இப் பிரதேசங்கள் தற்போதும் விஷேட காணி உரித்துப் பதிவு பிரதேசங்கள் என்றே அழைக்கப்படுகின்றன.

**5.0 காணி மீள ஏற்றல் கட்டளைச் சட்டம் -1887இல் இல.4, (சட்டத் திருத்தம் 1934இல் இல.2 1942இல்இல.57 1955இல் இல.22) (Lands Resumption Ordinance)**

அரச காணிகள் மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு பின்னர் அக் காணிகள் உரிமையாளர்களால் கைவிடப்பட்டு இருப்பின் அவ் அரச காணிகள் தொடர்பான விடயங்கள் குறித்த ஏற்பாடுகளை மேற்கொள்ள உருவான கட்டளைச் சட்டமாகும். (பொதுவாக அரசினால் பகிர்ந்தளிக்கப்பட்ட அரச காணிகள் 8 வருடம் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் பாவனையில் இல்லாமல் கைவிடப்பட்டிருப்பின் அக் காணிகளுக்கே இச் சட்டம் பொருந்தும்.)

**6.0 தரவைக்காணிக் கட்டளைச் சட்டம் - 1897இன் இல.1 (Waste lands Ordinance)**

சேனைகள், தரிசுநிலங்கள், வெறுங் காணிகள் போன்றவற்றின் உரித்தாளர்களை மிக விரைவில் தீர்மானம் செய்வதற்காக இக்கட்டளைச் சட்டம் 1897இல் கொண்டுவரப்பட்டது. இதன் மூலம் பயிர்செய்யப்படாத அனைத்துக் காணிகளும் அரசாங்கத்துக்குரியது எனச்சொல்லப்பட்டது. இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் மத்திய மலைநாட்டில் உள்ள காணிகள், பெருந் தோட்டச் செய்கையாளர்களுக்கு வழங்கப்பட்டன. 1840இல் அரச காணிகளை வரையறுப்பதற்கும், அக்காணிகளில் அத்துமீறல் குடியேற்றங்களைத்தடுப்பதற்கும் கொண்டுவரப்பட்ட சட்டத்தினால் மக்களுக்கு ஏற்பட்ட துயரை ஓரளவு துடைக்க இக் கட்டளைச் சட்டம் கொண்டுவரப்பட்ட போதும் எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை. இக் குறைபாட்டினைப் போக்க இக் கட்டளைச் சட்டத்திற்குப் பதிலாக 1931ஆம் ஆண்டு காணி நிர்ணய கட்டளைச் சட்டம் கொண்டுவரப்பட்டது.

**7.0 அரச எல்லைக்கற்கள் கட்டளைச்சட்டம் (1909ல் இல.7) (Crown Landmarks Ordinance)**

இது அரசினால் பகிர்ந்தளிக்கப்பட்ட காணிகளின் எல்லைகளைக் காண்பிக்கத் தேவையான நிரந்தர எல்லைக் கற்களை நிறுவவும் பராமரிக்கவும் ஏற்புடைய நடைமுறைகளை ஏற்படுத்த உருவான கட்டளைச்சட்டமாகும்.


ஒரு காணி உரிமையாளர் அல்லது அக்காணியில் வசிப்பவர் அக்காணியின் எல்லைகளுக்கான அரசின் எல்லைக்கற்களின் இருப்பை கவனமாக கண்காணிப்பது அவர்களது கடமையாகும். அரசின் எல்லைக்கற்கள் அகற்றப்பட்டாலோ அல்லது சேதமாக்கப்பட்டாலோ அதற்குரிய முழுப்பொறுப்பும் அக் காணியில் வசிப்பவர் அல்லது காணியின் சொந்தக்காரரைச் சாரும். அரசின் எல்லைக்கற்களை மீள நிறுவும்படி அல்லது திருத்தியமைக்கும்படி அக்காணி உரிமையாளர்களாலோ அல்லது'

குடியிருப்பாளர்களாலோ பிரதேச செயலாளர் அல்லது உதவிப் பிரதேச செயலாளர் ஊடாக விண்ணப்பிக்க முடியும். பிரதேச செயலாளர் அல்லது உதவிப் பிரதேச செயலாளர் இது தொடர்பில் மீள் அளவை செய்ய நில அளவையாளர் நாயகத்திடம் விண்ணப்பிக்க முடியும். அதற்கான செலவை அக்காணியின் உரிமையாளர்களோ அல்லது குடியிருப்பாளர்களோ பொறுப்பேற்க வேண்டும். உரிய நபர் முன்கூறிய அளவைச் செலவினை, பிரதேச செயலாளருக்கு அல்லது உதவி பிரதேச செயலாளருக்குச் செலுத்துதல் வேண்டும்.

(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்

## வெற்றி வேந்தன்



முன்னொரு காலத்தில் அரசன் ஒருவன் இருந்தான். அவன் சிறந்த கல்விமான். பல இலக்கியங்களையும் பயின்று தேர்ச்சி பெற்று விளங்கினான். நல்ல பண்புடைய பிள்ளைகள் இருவரையும் பெற்றிருந்தான். அம்மன்னனுக்கு வயதாக ஆரம்பித்தது.

அம்மன்னனது நாட்டில்வானுயர உயர்ந்த மரங்களும் நீரோட்டம் மிகுந்த காட்டாறுகளும் துள்ளித் திரியும் புள்ளிமான்களும் கொல்லும் புலிகள் முதலிய கொடிய விலங்குகள் வாழும் காடுகளும் இருந்தன. அதனால் அவனது நாட்டு மக்கள் வேட்டைத் தொழிலில் சிறந்து விளங்கினர்.

அச்சிற்றரசன் நாளுக்கு நாள் தளர்ச்சி மிகுந்து முதுமை அடைந்து வந்தான். அதனால் அரசியல் காரியங்களைக் கவனிக்க முடியாத நிலைக்கு ஆளானான். அந்நிலையில் அவன் தனது ஆட்சிப் பொறுப்பை தன் புதல்வர்களிடம் ஒப்புவிக்க நினைத்தான்.

அக்காலத்தில் "அரசு பதவி மூத்தவர்களுக்கு உரியது' என்னும் நடைமுறை இருந்து வந்தது. அதன்படி மன்னன், தனது ஆட்சிப் பொறுப்பைத் தன் மூத்த மகனிடம் ஒப்படைத்திருக்கலாம். ஆனால் அவ்வாறு செய்யவில்லை.

"நாட்டை ஆள்பவன் நல்லவனாக மட்டும்இருந்தால்போதாது. பரந்த மனமும் உயர்ந்த எண்ணமும் உடையவனாகவும் இருத்தல் வேண்டும். வயதால் மூத்தவனாக மட்டும் இருந்தால் போதாது. அறிவால் முதிர்ந்தவனாகவும் இருத்தல் வேண்டும்" என்று எண்ணினான்.

ஒரு நாள் தன் புதல்வர் இருவரையும் அழைத்தான். மூத்தவன், இளையவன் ஆகிய இருவரும் வந்து தந்தையை பணிந்து வணாங்கி நின்றனர்.

புதல்வர்களின் பணிவைக் கண்டு மகிழ்ந்த மன்னன், "புதல்வர்களே! நாளைக் காலை நீங்கள் இருவரும் வேட்டைக்குச் செல்ல வேண்டும். மாலை வெற்றியோடு திரும்பி வர வேண்டும். இது உங்கள் இருவருக்குமிடையே நடத்தப்படும் வீரப் போட்டி மட்டுமன்றி அறிவுப் போட்டியுமாகும். உங்களில் வெற்றி பெறுவோர், நாட்டை ஆளும் தகுதி பெறுவர்!" என்று கூறினான்.

தந்தையின் மொழி கேட்ட மைந்தர்கள் இருவரும் மனம் மகிழ்ந்தனர்.

மறுநாள் காலை மைந்தர்கள் இருவரில் இளையவன் வில்லும் அம்பும் ஏந்தி விரைந்து புறப்பட்டான். மூத்தவன் வேல் ஒன்று மட்டும் ஏந்திய வண்ணம் புறப்பட்டான்.

வேட்டையாடப் புறப்பட்டுச் சென்ற வீரப் புதல்வர்கள் இருவரும் காட்டில் அலைந்து திருந்தனர். தங்கள் நோக்கத்தில் மிகவும் கவனம் கொண்டு செயற்பட்டனர். பிற்பகலும் வந்து சேர்ந்தது. கதிரவன் மேற்திசையில் இறங்கிக் கொண்டிருந்தான். மன்னன் தன் புதல்வர்களை எதிர்நோக்கிக் காத்திருந்தான்.

இளைய மகன் ஏறு நடை போட்டு வந்தான். அவனது இடது தோளில் வில்லும் அம்பும் இருந்தன. வலது கையிலே அம்பு பாய்ந்த முயல் இருந்தது.

"வா மகனே! வெற்றியோடு வந்தாயா? வேட்டைப் பொருள் எங்கே?" என்று கேட்டான்.

அதற்கு இளையவன், "தந்தையே! இதோ பாருங்கள்! வேட்டைக்காரனைக் கண்டு காட்டு முயல் நிற்குமா? நிலைக்குமா? நான் அதை விட்டு வைப்பேனா? ஒரே அம்பு, வைத்த குறி தவறாது பாய்ந்தது! இதோ முயல்!" என்று தன் வெற்றியை உற்சாகத்துடன் கூறினான்.

அதைக் கேட்ட மன்னன், "மகிழ்ச்சி மகனே! உன் வெற்றியைப் பாராட்டுகிறேன். உன் அண்ணன் எங்கே?" என்று கேட்டான்.

மன்னன் அவ்வாறு கேட்ட போது, மூத்த மகன் தலை தாழ்த்தி வெறுங்கையுடன் வந்து சேர்ந்தான். அவனது வலது கையில் முனை முறிந்த வேல் மட்டுமே இருந்தது. அவன் முகத்திலே ஒருவித நாணம், தெம்பு குறைந்த நடை, பார்வையிலே ஒருவித வருத்தம் காணப்பட்டது.

மூத்த மகனது வருகையைக் கண்ட மன்னன், "வா மகனே! வேட்டையாடி என்ன கொண்டு வந்தாய்? யானையா? புலியா? கொண்டு வந்த வேட்டைப் பொருள் யாது?" என்று கேட்டான்.

"தந்தையே! இல்லை, நான் வேட்டைபொருள் எதுவும் கொண்டு வரவில்லை. வெறுங்கையுடனேயே வந்திருக்கிறேன். சிந்தை கலங்கிய நிலையில் வந்திருக்கிறேன். வேட்டைய்யை விரும்பி காட்டிற்குச் சென்றேன். கொடிய யானை ஒன்றையாவது வேட்டையாடிக் கொண்டு வர வேண்டும் என்ற நோக்கத்தோடு சென்றேன். களிறு ஒன்று மதம்கொண்டு வந்தது. வேலை உயர்த்தி வேகமாக அந்தக் களிற்றின் மீது வீசினேன். தந்தையே! தங்களிடம் நான் வேல் பயிற்சி பெறவில்லை வேல் பாய்ந்தது. வேல் பாய்ந்த அந்த களிறு பிளிறியது. ஆனாலும் வேலினை விசிறி எறிந்து விட்டு தப்பிச் சென்றுவிட்டது. கறைபட்ட வேல் இதோ! கறைபட்ட வேலோடு மறக்குடிக்குக் களங்கம் தேடியவனாக நான் வந்து நிற்கிறேன். மன்னியுங்கள் தந்தையே!" என்று மனக் கலக்கத்துடன் கூறினான்.

மூத்த மகன் கூறியதை கேட்ட மன்னன், "கவலை கொள்ள வேண்டாம் மகனே!" என்று ஆறுதல் கூறி, மூத்தவனைக் கட்டித் தழுவிக் கொண்டான்.

அவ்வாறு தழுவி மகிழ்ந்த மன்னன், மூத்த மகனை நோக்கி, "மகனே! யானை வேட்டைக்குச் செல்பவன் யானையைப் பெற்று வருதலும் உண்டு. சிறு பறவை வேட்டைக்குச் செல்பவன் வெறுங்கையோடு திரும்பி வருதலும் உண்டு! அது அவரவர் வினைப்பயன்.

"மகனே்! இதோ, உன் தம்பி முயல் வேட்டைக்குச் சென்றான் வெற்றி நடைபோட்டு வந்திருக்கிறான். இதில் எனக்குச் சிறிதும் மகிழ்ச்சி இல்லை.

"நீயோ யானை வேட்டைக்குச் சென்றாய். யானையும் எதிர்ப்பட்டது. வேலையும் எறிந்தாய். நீ வெற்றி பெறவில்லையென்றாலும், என் உள்ளம் உன் வகையில் மகிழ்ச்சி கொள்கிறது.

"மகனே! நீ உயர்ந்ததையே எண்ணினாய்! உயர்வான குறிக்கோளைக் கொண்டாய்! அதனால் உயர்ந்தவன் ஆனாய்! உன்னைப் பாராட்டுகிறேன்! உன் முயற்சியைப் போற்றுகிறேன்! நீயே வெற்றிக்குரியவன்! நீயே இந்நாட்டிற்குத் தலைவன்!" என்று பாராட்டி, ஆட்சிப் பொறுப்பை அவனிடம் ஒப்படைத்தான்.

மூத்த மகன் முடிசூட்டிக் கொண்டு மகிழ்ந்தான் நாட்டை நலமுடன் ஆண்டான்.

## உலகின் மிகச்சிறந்த 10 சிறுவர் பொழுதுபோக்குகள்

(நேற்றைய தொடர்ச்சி...)

### கட்டட வடிவமைப்பு



கட்டட வடிவமைப்பு தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபடுவதன் மூலம் அவர்களின் படைப்பாற்றல் அதிகரிப்பதுடன் கனரக வாகனங்கள் மற்றும் பெரிய கட்டடங்கள், விமானங்கள் என்பனவற்றை தயாரிக்க முற்படுவதனால் புத்தாக்க நடவடிக்கைகள் மற்றும் தொலைநோக்குடனான உயர்ந்த மற்றும் கணித விரைவுகணித சிந்தனைகள் மேம்படும். (தொடரும்...)

ஆசிரியர் : எல்லாரும் உங்கள் நோட்டில் ஒரு "பக்றீரியா" படம் வரையுங்கள்..
நம்ம மாணவன் : இதோ வரைந்து விட்டேன் சேர்...
ஆசிரியர் : என்ன படம் வரைந்து விட்டாயா...? ஆனால் உன் நோட்டில் எதுவுமே இல்லையே...
நம்ம மாணவன் : சேர் நீங்கள் தானே சொன்னீர்கள் பக்றீரியாவை வெறும் கண்களால் காண முடியாது... நுணுக்குக்காட்டியால் மட்டுமே காண முடியும் என்று... அதனால் தான் உங்களால் அதை காண முடியவில்லை...
ஆசிரியர் : !!! எப்படியெல்லாம் யோசிக்கிறார்கள்...

## பொது அறிவும் விடைகளும்

• எந்த வளைகுடாவிற்காக கியூபா மற்றும் அமெரிக்க நாடுகள் உடன்படிக்கை செய்து கொண்டன?
குவாண்டனமோ வளைகுடா

• தமிழ்நாட்டின் ரயில்வேபாதையின் நீளம் எவ்வளவு?
5952 கிலோமீற்றர்கள்.

• தமிழ்நாட்டின் மொத்த புகையிரத நிலையங்கள் எத்தனை?
532.

• தமிழ்நாட்டில் எத்தனை தேசிய நெடுஞ்சாலைகள் உள்ளன?
24.

• தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் எப்பொழுது தொடங்கப்பட்டது?
1972 ஆம் ஆண்டு.

• தமிழ்நாட்டின்முக்கிய பெரியதுறை முகங்கள் ?
தூத்துக்குடி, சென்னை, எண்ணூர் துறைமுகங்கள்.

செய் அல்லது செத்துமடி.
~ மகாத்மா காந்தி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# எங்களை ஏமாற்றுவது அவர்களா? இவர்களா?

தமிழ் மக்களை ஏமாற்றுவது இலங்கை அரசா? அல்லது தமிழ் அரசியல் தலைமையா? என்பது புரியாமல் உள்ளது.

இதுதான் புரியவில்லை என்றால், இதனைத் தொடர்ந்து பல கேள்விகள் எழுகின்றன.

அதில் இலங்கை அரசு தமிழ் அரசியல் தலைமையை ஏமாற்ற, அதனூடு தமிழ் மக்கள் ஏமாற்றப்படுகின்றார்களா?

அல்லது அரசும் தமிழ் அரசியல் தலைமையும் கூட்டுச்சேர்ந்து தமிழ் மக்களை ஏமாற்றுகின்றனவா? என்ற கேள்விகள் எழவே செய்யும்.

அரசாங்கத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நம்புகிறது. அரசியலமைப்புச் சீர்திருத்தத்தினூடாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் என்பது கூட்டமைப்பின் நம்பிக்கையாகக் காட்டப்படுகிறது.

ஆனால் அரசியலமைப்புச் சீர்திருத்தம் அமுலாகும் என்பதுபோல காட்டி, கூட்டமைப்பை அரசாங்கம் ஏமாற்றி வருகிறது என்ற கருத்தும் இருக்கவே செய்கிறது.

எனினும் அரசு மீதான கூட்டமைப்பின் நம்பிக்கைக்கு ஏதேனும் ஆதாரங்கள், உறுதிமொழிகள் உண்டா? என்ற வினா எழுகை பெறும்போது அதற்கான விடை எதுவும் இல்லை என்பதாகவே இருக்கும்.

சரி, சர்வதேச அழுத்தம் இலங்கை அரசுக்கு இருப்பதால் எப்படியும் புதிய அரசியலமைப்பை அமுலாக்கியே ஆக வேண்டும் என்பது கூட்டமைப்பின் பிடிமானம் எனின்,

சர்வதேச அழுத்தத்துக்கான முயற்சிகளில் கூட்டமைப்பு ஏதேனும் நடவடிக்கை எடுக்கிறதா? என்றால் அதுவுமில்லை.

உண்மையில் இலங்கை அரசை வழிக்குக் கொண்டு வருவதற்கான ஒரே வழி ஐ.நா மனித உரிமை பேரவையின் அழுத்தத்தை இலங்கை அரசுக்குப் பிரயோகிப்பதுதான்.

இருந்தும் இது விடயத்திலும் கூட்டமைப்பின் போக்கு தமிழ் மக்களைத் திருப்திப்படுத்தவில்லை.

அதாவது ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் இலங்கை அரசுக்குக் கால அவகாசம் வழங்குவதை ஆதரிப்பதிலேயே கூட்டமைப்புக் கவனம் செலுத்துகிறது.

ஒட்டுமொத்தத் தமிழ் மக்களும் இலங்கை அரசுக்குக் கால அவகாசம் வழங்கக்கூடாது என வலியுறுத்தி நிற்கையில்,

கூட்டமைப்பு மட்டும் கால அவகாசம் வழங்க வேண்டும் என விடாப்பிடியாக நிற்கிறதெனில், இதற்குள் இருக்கக்கூடிய சூக்குமம் என்ன என்பதுதான் இப்போதிருக்கக்கூடிய ஐயா வினா.

என்ன செய்வது ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் விடுத்த அறிக்கை தொடர்பில் இலங்கை அரசு அசமந்தம் காட்டினால்,

அது பாரதூரமான விளைவேயே ஏற்படுத்துமென முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறி நிற்க;

கூட்டமைப்போ கால அவகாசம் கொடுக்க வேண்டும் எனக் கூறுகிறது என்றால் தமிழ் மக்களை ஏமாற்றுகின்ற தரப்பு ஒன்றல்ல இரண்டு என்பது புரிதற்குரியது.

இப்புரிதலில் காலதாமதம் ஏற்படுமாயின் அதன் முழு நட்டமும் தமிழினத்துக்கேயாம்.

# அபிவிருத்தியை அலட்சியப்படுத்தியவர்கள் இன்று அடைக்கலமானது ஏன்? – அங்கஜன் கேள்வி

(கொழும்பு)

எமது நாட்டில் வடகிழக்கில் முப்பது ஆண்டுகளாக இடம்பெற்ற யுத்தத்தால் எமது மக்கள் வலிகளை அனுபவித்தவர்கள். அதன் சுமைகளை இன்றும் அனுபவித்து கொண்டே இருக்கிறார்கள். உயிரிழப்பையும் உடைமைகளையும் யுத்தத்தினாலே இழந்திருந்தனர். உயர் பாதுகாப்பு வலயங்களினால், மக்களின் வாழ்விடங்கள், வணக்கஸ்தலங்கள், விளைநிலங்கள், பொதுக் கட்டடங்கள் என அனைத்தையும் இழந்து நிர்க்கதியாகினர் என பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

எமது மக்களின் வாழ்வாதாரங்கள் சீரழிக்கப்பட்டன, எத்தனையோ பெண்கள் விதவைகள் ஆக்கப்பட்டனர். யுத்தத்தினால் நிர்க்கதியாகிய மக்கள், தமது வாழ்க்கையை கொண்டு செல்வதற்கு வாழ்வாதாரத்தை இன்னமும் எதிர்பார்க்கிறார்கள். ஏன்? யுத்தம் காரணமாக இன்று சமூக வாழ்வில் அல்லறபடும் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், அங்கவீனமானவர்கள், தந்தை தாயை இழந்து தவிக்கும் குழந்தைகள், என ஏராளமானோர் இன்றும் யுத்தத்தின் வடுக்களாக, யுத்தத்தை விட கொடியதாக காணப்படுகின்றனர்.

வடக்கு - கிழக்கு மக்களின் கல்வி, கலாசாரம் என்பன பல வருடங்களுக்கு பின் தள்ளப்பட்டுள்ளன. எமது வருங்கால தலைமுறையினரின் நலனைக் கருதி நாம் இவற்றை மாற்றியமைக்க வேண்டும். யுத்தம் நிறைவடைந்து 10 ஆண்டுகள் கடந்தும் இந்த அரசாங்கம் நல்லாட்சி என்று சொல்லிக் கொள்வதைத் தவிர, எமது எதிர்பார்ப்புக்கள் ஏதும் பூர்த்தி செய்யப்படவில்லை.

யுத்தத்தின் காரணமாக உயிரிழந்தவர்களின் இறப்புச் சான்றிதழோ, காணாமல் போனோரின் சான்றுப் பதிவுகளோ எவையும் இதுவரை கிடைக்கப் பெறாத நிலையில், அவர்களில் தங்கி வாழ்கின்றவர்கள் தமக்கான சட்டரீதியான ஆவணங்களை கூட ஜனநாயக நாட்டில் பெற்றுக் கொள்ள முடியாது வாழ்ந்து வருகின்றனர்.

இந்தப் பாராளுமன்றில் நட்ட ஈட்டு சட்டமூலம் 2018 ஒக்ரோபர் மாதம் அங்கீகரிக்கப்பட்டு, 700 மில்லியன் ரூபாய் முன்மொழியப்பட்ட போதிலும், அது செயற்படுத்தப்படாத நிலையே காணப்படுகின்றது. காணாமல ஆக்கப்பட்டோருக்கு மாதாந்தம் 6000 ரூபாய் கொடுப்பனவு,இதன் அடிப்படையில் 72000 ரூபாய் குடும்பத்திற்கு வருடாந்த நட்ட ஈடாக கிடைக்கும்.

எனவே இதை முதற்படியாக எடுத்து கொண்டாலும், 500 மில்லியன் ரூபாய் நிதியானது ஒரு வருடத்திற்கு 7000 குடும்பங்களுக்கு மட்டுமே போதுமானது. எம் உறவுகளை தொலைத்துவிட்டு, அவர்களுக்காக தெருத் தெருவாக நீதி கேட்டுப் போராடிக் கொண்டு இருப்பது மாதாந்த 6000 ரூபாய் கொடுப்பனவுக்காகவா? இதுவா எம்மவர் என்று சொல்லிக் கொள்பர்கள், எமக்கு பெற்றுத தந்த நிரந்தரத் தீர்வு?அல்லது இதுவும் வரும் தேர்தலுக்கான சலுகையா? 10 வருடங்கள் கடந்தும், பொதுமக்களின் சட்ட ரீதியிலான காணிகள் ஆக்கிரமிக்கப்பட்ட நிலையில்,ஜனாதிபதியின் நேரடி வழிகாட்டலில் வடக்கு கிழக்கிற்கான ஜனாதிபதி செயலணியினால் 90.41சதவீதமான தனியார் காணிகளும் 79.16 சதவீதமான அரச காணிகளும் விடுவிக்கப்பட்டுள்ளன.

இன்னமும் விடுவிக்காத காணிகள் தேசிய பாதுகாப்பிற்கு குந்தகம் ஏற்படா வகையில் மீள் அமைப்பதற்கு, இலங்கை இராணுவத்திற்கு 2000 மில்லியனும், கடற்படைக்கு 155 மில்லியனும் தேவைப்படுவதாக பாதுகாப்பு தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

வரவு - செலவுத் திட்டத்தில் 40 பில்லியன் ரூபாய் பாதுகாப்பு செலவீனமாக ஒதுக்கப்பட்டுள்ள நிதியிலிருந்து 2155 மில்லியன்ரூபாயை ஒதுக்கினால் மீள்குடியேற்றத்தை விரைவாகமுன்னெடுக்கமுடியும். மயிலிட்டி மீன்பிடி துறைமுக நிர்மாண ஆரம்ப விழாவின்போது உயர் பாதுகாப்பு வலயங்களில் உள்ள பாடசாலைகள், வணக்கஸ்தலங்கள், விளைநிலங்கள் முதற் கட்டமாக விடுவிக்க நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி தெரிவித்திருந்ததை நான் வரவேற்கிறேன்.

ஆனாலும் வசாவிளான் ஸ்ரீவேலுப்பிள்ளை ஆரம்ப பாடசாலையானது, வசாவிளான் மத்திய கல்லூரி மைதானத்தில் கொட்டில்களில் இயங்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு 400 க்கு மேற்பட்ட மாணவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.எனவே 900 மீற்றர் தூரத்தில் அமைந்திருக்கும் ஸ்ரீவேலுப்பிள்ளை கல்லூரியிலேயே கல்வியை தொடர அனுமதி வழங்கப்பட வேண்டும். அச்சுவேலி, பருத்தித்துறை பகுதிகளில் இருந்து புற்றுநோய் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் வருகை தந்து பின்னர், மீண்டும் தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலைக்குப் பயணிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையே காணப்படுகின்றது.

எனவே வசாவிளான் கட்டுவன் சந்தி வரையிலான 2.5 கிலோ மீற்றர் வல்லை அராலி வீதி உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும்.

மேலும் காங்கேசன்துறை சிமெந்து ஆலை, ஆனையிறவு உப்பளம், பரந்தன் இரசாயன தொழிற்சாலை, ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை போன்ற கைத்தொழில் நிலையங்களின் மீள் புனரமைப்பிற்காக எந்தவொரு நிதி ஒதுக்கீடும் செய்யாமை, யுத்தத்தினால் இருண்ட நிலையை அடைந்த மாவட்டங்களிற்கு ஒளியூட்டும் எண்ணம் அறவே இல்லை என்பதேயாகும்.

சிறுபான்மை மக்களின் வாக்குகளால் ஆட்சிப் பீடமேறிய அரசாங்கத்தை இன்னமும் எம்மவர்கள் பாதுகாத்து, எந்தவொரு வாக்குறுதிகளையும் நிறைவேற்றாது, முன்னர் "அபிவிருத்தி வேணடாம் அரசியல் தீர்வே வேண்டும்" என்று கூறியவர்கள் வெறுமனே இந்த 'கம்பெரலிய' போன்ற அற்ப சலுகைகளுககு எம் மக்களை விலை பேசியுள்ளனர். வடகிழக்கு மக்களிற்கு எந்தவொரு பலனையும் தராத வரவு - செலவுத் திட்டத்தை முழுமையாக ஆதரிப்பது நம்பி வாக்களித்த எம் மக்களுக்கு செய்யும் மிக பெரிய துரோகமாகும். ஏமாறுபவர்கள் இருக்கும் வரை ஏமாற்றுபவர்களும் இருக்கத்தான் செய்வார்கள் என அவர் தெரிவித்தார்.

2019ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள் குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் தொழிற் பயிற்சி; திறன்கள் அபிவிருத்தி, இளைஞர் அலுவல்கள் அமைச்சு தொடர்பிலான குழுநிலை விவாதத்தில், நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## விசேட பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் கொட்டடி சனசமூக நிலையத்தின் விசேட பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணிக்கு நிலையக் கட்டடத்தில் தலைவர் லயன் கலாநிதி நா.தனேந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (ம-3)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக் காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை **யாழ் பிரதேசத்தில்** சில்லாலை, சாந்தை, நவாலி, மூத்த விநாயகர் கோவிலடி, சென் பீற்றர்ஸ் தேவாலயம், அரசடி, அட்டகிரி, வேலக்கை, உசன், விடத்தற்பளை, கெற்பலி, மிருசுவில் தெற்கு, தவசிக்குளம், நாவலடி, 52ம் பிரிவு இராணுவ முகாம், Tokyo Cement Con crete Mixture Plant ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில** அரசரகேணி, கச்சாய் வெளி, தர்மகேணி, முகமாலை, இத்தாவில், எழுது மட்டுவாழ ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** கரைசலி லிருந்து தலைமன்னார் வரை, அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, தலைமன்னார் கடற்படைமுகாம், தலைமன்னார் வைத்தியசாலை ஆகிய பிரதேசங்களிலும், மின் தடைப்படும். (9)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- மோட்சத்தை தேடி அலையத் தேவைஇல்லை. சுயநலம் சிறிதும் இல்லாமல் பிறருக்கு சேவை செய்பவனைத் தேடி இறைவனே ஓடி வருவார்.
- கையை கடவுள் படைத்தது கொடுப்பதற்கே. நீ பட்டினியாய் கிடக்க நேர்ந்தாலும் பரவாயில்லை. உன்னிடம் இருக்கும் கடைசிப் பருக்கையையும் பிறருக்கு கொடுத்து விடு. அதனால் உன் வாழ்வு முழுமை பெறும்.
- அறிவு, உள்ளம் ஆகிய இரண்டில் எதைப் பின்பற்றுவது என்ற போராட்டம் எழும்போது, உள்ளம் சொல்வதை பின்பற்றுங்கள்.
- எதுவந்தாலும் எதிர்த்து போராடு. ஓர் அடியும் பின்வாங்கக்கூடாது. என்ன நடந்தாலும் கலங்காதே.
- மரணம் வருவது உறுதியாக இருக்கும் போது மேலான லட்சியத்திற்காக வாழ்ந்து இறந்து போவது சிறந்தது.

# கப்ரன் சோமசுந்தரம் வெற்றிக்கிண்ணம் ஏ.பி. அணிக்கு இரண்டாவது வெற்றி



கப்ரன் சோமசுந்தரம் வெற்றிக்கிண்ணத்திற்காக ஜொலி ஸ்ரார் முதலாவது ஆண்டாக நடத்தும் 20 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்ட சுற்றுப்போட்டியின் 4 ஆவது தகுதிகாண் போட்டி கடந்த வாரம் யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போது ஏ.பி.அணி விக்டோறி அணியை 2 இலக்குகளால் வெற்றி பெற்று தங்களது 2 ஆவது வெற்றியையும் பதிவு செய்துள்ளது.

போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மூளாய் விக்டோறி அணி 17.2 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 118 ஓட்டங்களைப் பெற்றது. கணேஸ்-11, கதியோன்-29, சரத்குமார்-36 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பார்த்தீபன், உத்தமன் தலா 3 இலக்குகளையும் லிங்கநாதன், சிலோஜன், ராகுலன், விஷ்ணு தலா ஒரு இலக்கினையும் கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஏ.பி. அணி 18.3 ஓவர்களில் 8 இலக்குகளை இழந்து 121 ஓட்டங்களை பெற்றது. தனலக்ஸன்-27, ராகுலன்-22, ஆதி-18, சிலோஜன்-15, கஜீபராஜ் ஆட்டமிழக்காது 25 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஐங்கரன்-3, பத்மபிரியன்-2, சிந்துஜன், கதியோன், சசிதரன் தலா ஒரு இலக்கினை கைப்பற்றினர். இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் 2010 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து 10 ஆண்டுகளாக நடத்திவரும் யாழ்.நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்விற்கு (RATING) ஏ.பி. அணி 4.41 புள்ளிகளையும் மூளாய் விக்டோறி அணி 1.98 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டது. (கு)





தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் வருடாந்தம் நடத்தப்படுகின்ற விளையாட்டு விழாவில் 31 ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழா இவ்வருடம் இடம்பெறவுள்ளது. அந்த வகையில் பிரதேச ரீதியாக இடம்பெறும் இளைஞர் கழகங்களுக்கிடையிலான பிரதேச மட்ட விளையாட்டு விழாக்கள் முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்று வருகின்றன. அந்தவகையிலேயே ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்குட்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான குழுப் போட்டிகளின் போட்டிகள் அண்மையில் இடம்பெற்றன.

பெண்களுக்கான எல்லே போட்டியில் சின்ன சாளம்பன் விநாயகர் இளைஞர் கழகம் முதலாவது இடத்தையும் பரந்தாமன் இளைஞர் கழகம் இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டுள்ளது. ஆண்களுக்கான எல்லே போட்டியிலே ஒட்டுசுட்டான் ஈஸ்வரன் இளைஞர் கழகம் முதலாம் இடத்தையும் இரண்டாம் இடத்தை புதியநகர் ஈகிள் இளைஞர் கழகமும் பெற்றுக்கொண்டுள்ளது.(க-281)

# யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டிகள்

யாழ்.மாவட்ட கரப்பந்தாபட்டச் சங்கம் நடத்தும் பெண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆவரங்கால் மத்தி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

போட்டியில் யாழ்.பல்கலைக் கழக அணி, உரும்பிராய் ஐங்கரன் விளையாட்டுக்கழகம், காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் ஆகியன பலப்பரீட்சை நடத்தவுள்ளன. (கு)

# கே.சி.சி.சி.வெற்றிக்கிண்ண கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பம் கோரல்

கொக்குவில் மத்திய சன சமூக நிலைய விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட கிரிக்கெட் கழகங்களுக்கிடையிலான மாபெரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டி.

பங்குபற்ற விரும்பும் அணிகள் எதிர்வரும் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னதாக பதிவுகளை மேற்கொள்ளலாம் எனச் சுற்றுப் போட்டிக்குழுச் செயலாளர் அறிவித்துள்ளார். (கு)

# அரியாலை சுதேசிய நூற்றாண்டு கரப்பந்தாட்டம் திருமகள் A அணி இறுதிப் போட்டிக்குத் தெரிவு

அரியாலை சுதேசிய நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட உள்ளூர் கரப்பந்தாட்ட போட்டி நேற்று முன்தினம் திருமகள் சனசமூக நிலைய மைதானத்தில் நேற்று நடைபெற்றது. போட்டியில் திருமகள் A அணி கலைமகள் B அணியினை 2:0 என்ற புள்ளிகள் அடிப்படையிலும் திருமகள் C அணியை 2:0 என்ற புள்ளி அடிப்படையிலும் வென்று இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது.

அடுத்த குழுவில் அரியாலை சனசமூக அணி திருமகள் B அணியை 2:0 என்ற புள்ளியடிப்படையில் வெற்றி பெற்றது.

கலைமகள் A அணி சரஸ்வதி சனசமூக அணி சமுகம் தராமையால் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

கலைமகள் A எதிர் அரியாலை சனசமூக அணிகளுக்கிடையிலான அரையிறுதிப் போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை இரவு 7 மணிக்கு நடைபெறும்.

இப்போட்டியில் தோல்வியடையும் அணி திருமகள் C அணியுடன் 3 ஆம் இடத்திற்காக எதிர்வரும் திங்கட்கிழமை 6.30 மணிக்கு மோதும்.

அரையிறுதிப் போட்டியில் வெற்றிபெறும் அணி திருமகள் A அணியுடன் எதிர்வரும் திங்கட்கிழமை இரவு 7.30 இற்கு இறுதிப் போட்டியில் பலப் பரீட்சை நடத்தும். (க)

# பாடசாலைகளுக்கிடையிலான சதுரங்கப்போட்டி முடிவுகள்

வடமராட்சி பாடசாலைகளுக்கிடையில் ஆண், பெண்களுக்கான சதுரங்கப்போட்டிகள் கடந்த 10 ஆம் திகதி ஹாட்லிக் கல்லூரியில் நடைபெற்றது.

போட்டியில் இருபது வயதின் கீழ் ஆண்களுக்கான போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி முதலாம் இடத்தையும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் இரண்டாம் இடத்தையும் கரவெட்டி விக்னேஸ்வர வித்தியாலயம் மூன்றா மிடத்தையும் பெற்றுக்கொண்டன.

இருபது வயதின் கீழ் பெண்களுக்கான போட்டியில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை முதலாம் இடத்தையும் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி இரண்டாம் இடத்தையும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டன.

17 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி முதலாமிடத்தையும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி இரண்டாமிடத்தையும் குடத்தனை ஜி.ரி.எம்.எஸ். கல்லூரி மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டதுடன் 17 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான போட்டியில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை முதலாமிடத்தையும் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி இரண்டாமிடத்தையும் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன.

மேற்படி போட்களில் முதல் மூன்று இடங்களைப்பெற்ற பாடசாலைகள் வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான சதுங்க சுற்றுப்போட்டியில் கலந்துகொள்ள முடியும். (க)

# சவாரிப்போட்டி

கீரிமலை நகுலகிரி இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட சவாரி சங்கமும் வலி. வடக்கு சவாரி சங்கமும் இணைந்து நடத்தும் மாபெரும் மாட்டு வண்டி சவாரிப் போட்டி வலி. வடக்கு சவாரி விடந்தையில் எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது.

முதலிடம்பெறும் வெற்றியாளர்களுக்கு மின்சார நீர்ப்பம்பிகளும் ஏனைய வெற்றியாளர்களுக்கு பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படுமென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (க)

## யாழில் இன்று...

மக்கள் எழுச்சிப் பேரணியை நடத்தவுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் ஆரம்பித்து முற்றவெளி வரை இந்தப் பேரணி இடம்பெறவுள்ளது. இந்தப் பேரணிக்கு, தமிழ் மக்கள் பேரவை, தமிழர் விடுதலைக் கூட்டணி என்பன முழுமையான ஆதரவை வழங்குவதாக நேற்று அறிவித்துள்ளன.

முன்னதாக இந்த எழுச்சிப் பேரணிக்கு பல்வேறு தமிழ்க் கட்சிகள், அமைப்புகள் ஆதரவு தெரிவித்திருந்தன. (ம-3)

## 232 ஏக்கர் காணி...

வலி வடக்கு காங்கேசன்துறை பகுதியில் காங்கேசன்துறை மத்தி மற்றும் நகுலேஸ்வரம் கிராமசேவகர் பிரிவுகளிலேயே 232 ஏக்கர் காணி சுவீகரிக்கப்படவுள்ளது.

காங்கேசன்துறை கடற்படை முகாமிற்கு 167 ஏக்கர் காணியும், ஜனாதிபதி மாளிகை உள்ளடங்கிய 65 ஏக்கர் காணி சுற்றுலா அதிகாரசபைக்கும் வழங்க ஜனாதிபதியால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது குறித்த உத்தியோகபூர்வ அறிவித்தல் தெல்லிப்பழை பிரதேச செயலாளரிற்கு அறிவிக்கப்பட்டு, நில அளவீட்டு பணிகளிற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. காணி உரிமையாளர்களிற்கு தகவல் வழங்கப்பட்டு, அளவீட்டு அறிவித்தலை தெல்லிப்பழை பிரதேச செயலகம் ஒட்டியுள்ளது.

மிக இரகசியமாக நடந்த இந்த விவகாரத்தை, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பிரமுகர்களான மாவை சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து பேசினர். அரசாங்கம் இதற்கு உத்தரவிடவில்லை, காணி அமைச்சின் ஊடாகவே இந்த விவகாரம் கையாளப்பட வேண்டும், இந்த விடயத்தை உடனடியாக கைவிட உத்தரவிடுகிறேன்-என பிரதமர் வாக்குறுதியளித்திருந்தார்.

எனினும், இதுவரை இந்த காணி சுவீகரிப்பை நிறுத்தும் நடவடிக்கையெதுவும் மேற்கொள்ளப்படவில்லை. காணி அளவீட்டு பணிகள் தொடர்ந்து நடந்து வருகிறது. வரும் 22ம் திகதி அளவீட்டு பணிகளை மேற்கொள்ள அதிகாரிகள் நடவடிக்கை மேற் கொண்டுள்ளனர்.

இது குறித்து தொடர்புடைய அதிகாரிகளுடன் பேசியபோது, "சுற்றுலா அதிகாரசபையுடன் தொடர்புடைய கூட்டமொன்றில் ஜனாதிபதியே இந்த காணி சுவீகரிப்பு உத்தரவை பிறப்பித்தார். நிறுத்தும்படி சம்பந்தப்பட்ட எந்த தரப்பிடமிருந்தும் உத்தரவு வரவில்லை. அதனால் திட்டமிட்டபடி 22ம் திகதி அளவீட்டு பணிகளை மேற்கொள்வோம் என்றார்.(ம-3)

## பால்மா விலை அதி...

கரிப்புக்கு பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபை ஒப்புதல் வழங்கியுள்ளது.

இதனடிப்படையில் ஒரு கிலோ கிராம் பால்மா பக்கற்றின் விலை 60 ரூபாயாலும் 400 கிராம் பால்மா பக்கற்றின் விலை 25 ரூபாயாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை உப குழுவால் முன்வைக்கப்பட்டு அமைச்சரவையால் ஒப்புதல் வழங்கப்பட்ட இறக்குமதி செய்யப்படும் பால்மா வகைகளுக்கான விலைச் சூத்திரத்தின் அடிப்படையிலேயே இந்த விலை அதிகரிப்புக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதாக பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபை அறிவித்துள்ளது. (ம-3)

## இலங்கையில்...

திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள, 2018ஆம் ஆண்டுக்கான, மனித உரிமைகள் அறிக்கையிலேயே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

சித்திரவதைகள், ஏனைய கொடூரமான மனிதத்தன்மையற்ற மோசமான நடத்தைகள் மற்றும் தண்டனைகள் இலங்கையில் அரசியலமைப்பு மற்றும் சட்டங்களில் தடை செய்யப்பட்டுள்ள போதிலும், அதிகாரிகள் அவற்றைத் தொடர்ந்து பயன்படுத்துகிறார்கள்.

பொதுவாக சிவில் அதிகாரிகளின் கட்டுப்பாட்டில் பாதுகாப்புப் படைகள் இருந்தாலும், இலங்கை இராணுவம் மற்றும் பொலிஸ் என்பன, பொதுமக்களைத் துன்புறுத்துகின்றன. அவர்கள் தண்டனையில் இருந்து தப்பிக்கும் நிலையும் தொடர்கிறது.

உள்நாட்டுப் போரில் இடம்பெற்ற குற்றங்கள் தொடர்பாக இலங்கை படையினர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு பொறுப்புக்கூறும் பொறிமுறை இன்னமும் உருவாக்கப்படவில்லை

எனினும், மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட சில அதிகாரிகளுக்கு எதிராக, விசாரணை செய்வதற்கும், சட்டத்தின் முன் நிறுத்தவும், தண்டனை விதிக்கவும், கடந்த ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சட்டத்துக்கு புறம்பான கொலைகள், சித்திரவதை; பாலியல் துன்புறுத்தல், அரசாங்கப் படைகளால் தன்னிச்சையாக தடுத்து வைத்தல், இணைய முடக்கம், ஊழல் உள்ளிட்ட மனித உரிமை பிரச்சினைகள் இலங்கையில் தொடருகின்றன.

இலங்கை பொலிஸார் தொடர்ச்சியாக சித்திரவதைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.(ம-3)

## கடற்படையினரை...

பின்னர் சிலாவத்துறையில் நேற்று வெள்ளிக்கிழமை 24 ஆவது நாளாக போராட்டம் இடம்பெற்ற பகுதிக்குச் சென்ற மக்கள் வீதிக்கு அருகில் நின்று கோசமிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறிப்பாக மக்களின் காணிகளில் உள்ள கடற்படையினரை வெளியேற்றி குறித்த காணியை மீண்டும் மக்களுக்கு வழங்கக் கோரி போராட்டத்தை முன்னெடுத்தனர். (ம-285-286)

## போராட்டத்துக்கு இளைஞர் அமைப்பு ஆதரவு தெரிவிப்பு

இலங்கை அரசாங்கத்திற்கு கால அவகாசம் கொடுக்கக்கூடாது என பல்கலைக்கழக மாணவர்கள் வரலாற்று முக்கியம் வாய்ந்த ஒரு போராட்டத்தை கையில் எடுத்துள்ளார்கள்.

பல்கலைக்கழக மாணவர்களின் இப் பேரணிக்கு ஜனநாயகத்திற்கான இளைஞர் அமைப்பினரும் ஆதரவு தெரிவிப்பதாக அவ்வமைப்பின் ஒருங்கிணைப்பாளர் சந்திர சேகரன் தெரிவித்தார்.

யாழ். பொதுநூலக வளாகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனநாயகத்திற்கான இளைஞர் அமைப்பினரான நாமும் இளைஞர் சேவைகள் மன்றத்தினருடன் இணைந்து பல்கலைக்கழக மாணவர்களின் பேரணிக்கு முழு ஆதரவை அளிக்கின்றோம் என அவர் தெரிவித்தார்.(ம-10)

# ஹெரோயினை நுகர முற்பட்ட 3 மாணவர்கள் யாழில் கைது

## விளக்கமறியலில் வைக்க யாழ்.நீதிமன்றம் உத்தரவு

17 வயதுடைய மாணவர்கள் மூவர் ஹெரோயின் போதைப்பொருளை நுகர முற்பட்டனர் என்ற குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மூவரையும் விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதவான் ஏ.எஸ். பீற்றர் போல் உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் வைத்து மாணவர்கள் மூவரும் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மூவரும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை எழுதிவிட்டு பெறுபேற்றுக்காக காத்திருப்பவர்கள் என மன்றில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் ஹெரோயின் போதைப்பொருள் விற்பனை மற்றும் பாவனை அதிகரித்துள்ளதாக அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களால் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

அதனடிப்படையில் அங்கு இரகசிய சுற்றுக்காவலில் பொலிஸார் ஈடுபட்டிருந்த போது, சுமார் 100 மில்லிக்கிராம் எடையுடைய ஹெரோயின் போதைப்பொருளுடன் மூவர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் அதனை நுகரத் தயாராகிய போதே கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்

சந்தேகநபர்கள் மூவரும் யாழ்ப்பாணம் நீதிமன்றில் நீதவான் அந்தோனி சாமி பீற்றர் போல் முன்னிலையில் நேற்று முற்படுத்தப்பட்டனர்.

சந்தேகநபர்கள் மூவரும் மாணவர்கள். அவர்கள் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை எழுதிவிட்டு பெறுபேற்றுக்காக் காத்திருக்கின்றனர் என அவர்களின் சட்டத்தரணி மன்றுரைத்தார். வழக்கை விசாரித்த நீதவான் சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (ம-3)

# பிரிகேடியர் பிரியங்கவை கைது செய்யக் கோரி நீதிமன்று முன் போராட்டம்




கொலை அச்சுறுத்தல் விடுத்தார் என்ற குற்றஞ்சாட்டப்பட்டுள்ள பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவிற்கு எதிராக புலம்பெயர் தமிழர்கள் நேற்று வெஸ்ட்மினிஸ்டர் நீதிமன்றுக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ மீதான வழக்கு விசாரணை வெஸ்ட்மினிஸ்டர் நீதிமன்றில் நடைபெறவுள்ள நிலையில் நீதிமன்றத்திற்கு வெளியே புலம்பெயர் தமிழர்களால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது பிரியங்க பெர்னாண்டோவுக்கு எதிரான வழக்கில் அரசியல் அழுத்தத்தை எதிர்த்தும் குறித்த நபரை கைது செய்ய வேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த ஆண்டு பிரித்தானியாவிலுள்ள இலங்கைத் தூதரகத்திற்கு முன்னால் புலம்பெயர் தமிழர்களால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது, பிரிகேடியர் பிரியங்க பெர்ணான்டோ போராட்டத்தில் ஈடுபட்டவர்களை அச்சுறுத்தியதாக குற்றம்சாட்டப்பட்டது. குறிப்பாக கழுத்தை அறுக்கும் வகையிலான சைகை காட்டப்பட்ட காணொளி வெளியாகி பாரிய சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது. (ம-3)

# வட, கிழக்கு உட்பட 4 மாகாணங்களுக்கு 70 மில்லியன் அமெரிக்க டொலர்கள்

## உலக வங்கியினால் நிதி உதவி

வடக்கு - கிழக்கு உட்பட நான்கு மாகாணங்களில் வாழும் பத்து லட்சம் பேரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வேலைத்திட்டத்துக்கு என குறித்து ஒதுக்கப்பட்டு 70 மில்லியன் அமெரிக்க டொலர்களை (சுமார் ஆயிரத்து 260 கோடி ரூபாய்) உலக வங்கி இலங்கைக்கு வழங்கியுள்ளது.

வடக்கு, கிழக்குஈ வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படவிருக்கிறது.

வீதி அபிவிருத்தி, சுகாதாரம், கழிவறை வசதிகள் என்பனவற்றை மேம்படுத்துவதற்கு இந்த நிதி குறித்தொதுக்கப்பட்டு உலக வங்கியால் வழங்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களின் ஒத்துழைப்புக்களும் இதற்காக பெற்றுக் கொள்ளப்படவேண்டும் என உலக வங்கி குறிப்பிட்டுள்ளது. இலங்கையில் வறுமையைக் குறைப்பதில் வெற்றிகரமான பெறுபேறுகளை கண்டிருப்பதாக உலக வங்கி அறிவித்திருக்கிறது. (ம-3)

**மெகா பவர்**
திகதி 15/03/2019
சீட்டிழுப்பு இலக்கம் 357
வெற்றி எழுத்து சுப்பர் இலக்க: H 22
வெற்றி இலக்கங்கள்: 22 36 60 65

**மஹஜன சம்பத**
திகதி 2019/03/15
சீட்டிழுப்பு இலக்கம் 3876
ஆங்கில எழுத்து: K
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 5 7 7 3 1 4
தேசிய லொத்தர் சபை

**கொவிசெத**
திகதி 2019.03.15
சீட்டிழுப்பு இலக்கம் 2064
ஆங்கில எழுத்து: H
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 15 24 26 57
தேசிய லொத்தர் சபை

**தன நிதானய**
திகதி 2019-03-15
சீட்டிழுப்பு இலக்கம் 127
ஆங்கில எழுத்து: B
வெற்றி இலக்கங்கள்: 22 46 66 70
தேசிய லொத்தர் சபை

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ 1978 மகம் 4ம் பாதம் பாவம் 34, வங்கியில் அதிகாரியாக பணி புரியும் மணமகனுக்கு தகுந்த மணமகளை எதிர்பார்க்கின்றனர்.

**தொடர்புகளுக்கு : 077 483 6817** (7985)

## வேலையாள் தேவை

Photoshop Designing, Typing மிகவும் திறம்பட தெரிந்தவர்கள் எமது நிறுவனத் திற்கு தேவை. காலை 9.00 மணி - 5.00 மணிவரை எமது நிறுவனத்தை தொடர்பு ஏற்படுத்தி சமுகம் தரவும்.

**Mangalaganapathy Printers, Mallakam**
**076 878 8684** (7993)


## CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.




CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931362
follow us : cnrworldwideexpress
(C-5765)

## கனடா மோகனின் இடியப்ப, முறுக்கு மெசின் இலங்கையிலும் பெற்றுக் கொள்ளலாம்



வீட்டு கையியக்க மெசின் | வர்த்தக கையியக்க மெசின் | வர்த்தக மின் (Automatic) இடியப்ப மெசின்

தொடர்புகளுக்கு : 076 796 6000 (இலங்கை), 4164336006 (ரொரன்ரோ கனடா)
www.StringhopperMachine.com
Email : mo@college.ca (7939)


## கென்யா - இலங்கை...

நாடுகளின் தலைவர்களும் இணக்கம் தெரிவித்துள்ளனர். கென்யாவுக்கு உத்தி யோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் கென்ய ஜனாதிபதி உஹுரு கென்யாட்டா வுக்குமிடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு நேற்று இடம்பெற்றது. இச்சந்திப்பின்போது இரு தலைவர்களும் இது தொடர்பாக விரிவாக கலந்துரையாடினர்.

கென்யா நாட்டின் ஜனாதிபதி மாளிகைக்கு சென்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கென்ய ஜனாதிபதி உஹுரு கென்யாட்டா மகிழ்ச்சியுடன் வரவேற்றார். சுமுகமான உரை யாடலை தொடர்ந்து அரச தலைவர்களுக்கிடை யிலான இருதரப்பு பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றன.

ஒரே வகையான சுற்றாடல் மற்றும் அனு பவங்களைக்கொண்ட, அதேபோன்று ஒரே வகையான சவால்களுக்கு முகங்கொடுத் துள்ள நாடுகளான கென்யாவுக்கும் இலங்கைக்கு மிடையிலான உறவுகளை பலப்படுத்துவதற்கு பல்வேறு வாய்ப்புகள் உள்ளதுடன், இரு நாடுகளினதும் மக்களுக்கு விரிவான நன்மைகள் கிடைக்கும் வகையில் அந்த உறவுகளைபலப்படுத்துவதிலும் தலைவர்கள் கவனம் செலுத்தினர்.

குறிப்பாக விவசாயத்துறை நடவடிக்கைகளில் ஒத்துழைப்புடன் செயற்படுவதற்கு தலைவர்கள் இணக்கம் தெரிவித்ததுடன், கென்யாவில் தெங்கு பயிர்ச் செய்கையை விரிவுபடுத்துவதற்கு தேவையான உத விளையும் தொழிநுட்ப அறிவையும் வழங்குமாறு கென்ய ஜனாதிபதி முன்வைத்த கோரிக் கையை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டார்.

1970ஆம் ஆண்டில் உத்தியோகபூர்வ இராஜதந்திர உறவுகள் ஆரம்பிக்கப்பட்ட இலங் கைக்கும் கென்யாவிற்குமிடையில் நட்பு ரீதியான தொடர்புகளே இதுவரை காணப்படுகின்றன. பொதுநலவாய அமைப்பு மற்றும் இந்து சமுத்திர வலய நாடுகளின் அமைப்பு (IORA) ஆகியவற்றில் இவ்விரு நாடுகளும் அங்கம் வகிக்கின்றமை குறிப் பிடத்தக்கதாகும்.

இரு நாடுகளுக்குமிடையில் சர்வதேச மட்டத்திலும் ஒத்துழைப்புடன் செயற்படுவதற்கு தலைவர்கள் இணக்கம் தெரிவித்தனர். கென்யா இலங்கையுடன் குறிப்பிடத்தக்க வர்த்தக உதவியாளராக இல்லாதபோதும் பரஸ்பர நன்மைகளைக் கருத்திற்கொண்டு பயன்படுத் தப்படாத பொருளாதார ஆற்றல் வளங்கள் தொடர் பாகவும் இரு நாடுகளும் கவனம் செலுத்தின.

தற்போது இலங்கை யர்கள் கென்யாவில் முக்கியமாக ஆடை உற்பத்தி, நீர் மின் உற்பத்தி, தோட்டக்கலை மற்றும் மோட்டார் வாகன பயிற்சி துறைகளில் பணியாற்றி வருகின்றனர். அவர்களது வசதிகளை மேலும் விரிவுபடுத்துவது தொடர்பாகவும் ஜனாதிபதி கென்ய ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவந்தார். (ம-3)

## 9 இலங்கை...

யைச் சேர்ந்தவர்களென குறிப்பிடப்பட்டுள் ளது.

குறித்த 14 பேரில் 2 முஸ்லிம்கள் அடங் கலாக 11 தமிழ் பேசும் இலங்கையர்கள் உள்ளடங்குவதாகவும் தெரிவிக்கப்படுகின் றது.

சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டவர் களுல் 4 பேர் இலங்கை பொலிஸாரினால் தேடப்படுபவர்கள் என்றும் ஏனைய 10 இலங் கையர்களும் வெளிநாடுகளில் பல்வேறு குற்றங்களுக்காக தேடப்படுபவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப் பட்டியலில் தமிழீழ விடுதலைப் புலி களின் முக்கிய உறுப்பினர் என இலங்கை பொலிஸாரால் குற்றஞ்சாட்டப்பட்ட எமில் காந் தனும் உள்ளடங்குகின்றார். (ம-3)

## தமிழ் மக்களுக்கு...

கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். அவர் வழங்கிய செவ்வி ஒன்றிலேயே இதனை கூறியுள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், அரசுக்கு நாங்கள் முண்டுகொடுக்க வேண் டிய அவசியம் தற்போதைய நிலையில் எமக்கு உண்டு.

இல்லாவிட்டால் கடந்த ஒக்ரோபரில் நடந்தது இப்போதும் உடனடியாக நடக்கும். அது தமிழ் மக்களுக்குப் படுபயங்கரமான ஒரு விளைவை ஏற்படுத்தும்.

ஆகவேதான் நாம் அரசுக்கு ஒத்துழைக் கின்றோம். ஐக்கிய தேசியக் கட்சிக்காக நாங் கள் செயற்படவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவாகவும் செயற்படவில்லை. எங்கள் மக்களுக்கு ஆதர வாகவே நாம் செயற்படுகின்றோம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)

## சிவ்சங்கர் மேனன்...

சங்கர் மேனன், எதிர்வரும் 18 ஆம் திகதி கொழும்பில் ஆரம்பமாகவுள்ள, இந்து சமுத்திர பாதுகாப்பு மாநாட்டில் பங்கேற் பதற்காக இலங்கை வரவுள்ளார்.

குறித்த நிகழ்வு சிவ்சங்கர் மேனனின் தலைமையில் நடைபெறவுள்ளதுடன், அவுஸ்திரேலியா, சீனா, பிரான்ஸ், ஜப்பான், நோர்வே, ரஷ்யா, சிங்கப்பூர், அமெரிக்கா மற்றும் பிரித்தானியா போன்ற நாடுகளின் பிரதிநிதிகள் அமர்வில் பங்கேற்கவுள்ள னர். (ம-3)

## லொறி மோதியதில்...

ருந்தவர் மீது மோதியதாகவும், வீதியில் பயணித்தவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந் துள்ள தாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் நள்ளிரவு இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். விபத்துடன் தொடர்புபட்டதாக தெரிவித்து லொறியுடன் சாரதியையும் கிளிநொச்சி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த சம்பவத்தில் கிளிநொச்சி அக் கராயன் பகுதியை சேர்ந்த 66 வயதுடைய சந்தியாபிள்ளை பீற்றர் இமானுவேல் என்பவரே உயிரிழந்துள்ளதாகவும், குறித்த விபத்து இரவு 11.50 மணியளவில் இடம்பெற் றுள்ளதாகவும் கிளிநாச்சி போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி ஜி.எல்.ஏ.ஜே.குண வர்தன தெரிவித்தார். (ம-3,312)


## YARL SMART இனால் நடாத்தப்படும் சித்திரப்போட்டி

எதிர்வரும் 22.03.2019 அன்று உலகளாவியரீதியில் கொண்டாடப்படும் உலக நீர் தினத்தை முன்னிட்டு YARL SMART WATER SOLUTION நிறுவனத்தினால் சித்திரப்போட்டி ஒன்று நடாத்தப்படவுள்ளது.

இதில் 15 வயதிற்கு உட்பட்டவர்கள் பங்குபற்றமுடியும். உங்கள் ஓவியத்துடன் பெயர்,முகவரி,பாடசாலை,தரம்,தொலைபேசிஇலக்கம் மற்றும் உங்கள் வயதினை உறுதிப்படுத்தும் வகையில் பாடசாலை அதிபரின் கையொப்பம் என்பன இணைக்கப்பட வேண்டும்.

இதில் வெற்றிபெறுபவருக்கு பெறுமதி மிக்க பரிசில் வழங்கப்படும்.

YARL SMART WATER SOLUTION.319,K.K.S Road,Jaffna.என்ற முகவரிக்கு உங்கள் ஓவியத்தை 21.03.2019 ஆம் திகதிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ எமக்கு கிடைக்க கூடியவாறு அனுப்பி வைக்கவும்.

ஓவியத்தின் தலைப்பு:- சுத்தமான நீர் சுகமான வாழ்வு
அளவு:-29cm x 21cm
1ம் பரிசு - 42,000/= பெறுமதியான YARL SMART RO WATER FILTER
2ம் பரிசு - Water Dispenser
3ம் பரிசு - Water Dispenser

பெயர் :-
முகவரி :-
பாடசாலை :-
தரம் :-
தொலைபேசி இலக்கம் :-
அதிபர் கையொப்பம்
(7995)

**Yarl Smart Water Solution (Pvt) Ltd**
Hotline:- 021 430 0044 , 077 057 3684 , 077 473 9802 , 077 112 6410
No.319,K.K.S Road,Jaffna. / Karadippokku Junction,A9 Road,Kilinochchi.

## Personal Group Class

இரசாயனவியல் (A/L) 2019, 2020, 2021, Repeat Batch கடந்த கால Past Papers கற் பிக்கப்படும். சி.அங்கதன் B.Sc (Chem. Spl)

**தொடர்பு: 0771901245** (7980)

## உதவியாளர் தேவை

வீட்டுப்பணிகளில் உதவி புரிவதற்கு தங்கி நின்று பணியாற்றக்கூடிய பெண் பணியாளர் தேவை
உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.
சம்பளம் நேரில் தீர்மானிக்கலாம்
பொறுப்புக்கள் அற்றவர்கள் விரும்பப்படும்
சுறுசுறுப்பான ஆரோக்கியமான இளையோரும் வரலாம்.
வாராந்த விடுமுறை உண்டு
(C-5789)

**தொடர்பு : 076 484 7171**

## பணியாளர் தேவை

நெல்லியடி தனியார் நிறுவனத்தில் ஆரம்பப் பணிசெய்யக்கூடிய (சுத்திகரிப்பு, வேலை உதவியாளர்) அண்மையில் வசிக்கும் சுறுசுறுப்பு மிக்க பெண் பணியாளர் தேவை
வேலை நாட்களுக்கான கொடுப்பனவுடன் தையல் பயிற்சி மற்றும் சிறுதொழிற்பயிற்சிகள் சில இலவசமாக பயிற்றுவிக்கப்படும்
(நிபந்தனைகள் உண்டு)
(C-5790)

**இயக்குநர் : 077 968 5660**

## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)
DELIVERY IN 3-5 DAYS
0768226240
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
V2 TRAVELS
(C-5736)

## நியூசிலாந்து வேலைவாய்ப்பு

மேசன் - ரைல் பொருத்துநர் - பிளம்பர் - காப்பென்ரர்
மெக்கானிக் - மோட்டார் சைக்கிள் மெக்கானிக்
படகு கட்டுமான பணியாளர் - வனவள பணியாளர்கள்
அலுமினியம் பிற்றர் - தொழிற்சாலை மின்னியலாளர்
5 வருட தொழில் அனுபவம் - வயதெல்லை 46
அடிப்படை ஆங்கில தொடர்பாடல் திறன் அவசியமானது
வடக்கின் 1வது & ஒரேயொரு அரச அங்கீகாரமுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்
Emerald Isle Manpower & Travel Services
The Sri Lankan Recruitment Specialists
License No. 2268
0770038215
0212219221
221-1/1, மின்சார நிலைய வீதி, (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
www.emeraldisle.lk email: jaffna@emeraldisle.lk
(C-5791)

## முன்மொழிவுகளுக்கான விளக்க கருத்தரங்கு பாதீடு - 2019

(சமகால போக்கு தொடர்பான கலந்துரையாடல்)

23.03.2019 (சனிக்கிழமை) முற்பகல் 9.00 - 12.00 மணி வரை கொழும்பு பங்குப்பரிவர்த்தனை
147-2/3,K.K.S வீதி, யாழ்ப்பாணம். பதிவுகளுக்கு 0777 822 014 / 021 222 1455 பதிவுக்கட்டணம் ரூபாய் 500

CSE கொழும்பு பங்குப்பரிவர்த்தனை
செல்வம் மற்றும் வெகுமதியின் பிறப்பிடம்

Seminar On Budget 2019
(C-5784)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.03.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.